ஆசிரியர்களுக்கான கல்வி உளவியல்

பாலசுப்பிரமணியம் தனபாலன்

Rise you early in the
morning
For in health properties
three -
holiness, health and happy
Wealth as my father
taught me -

Who riseth late must
trot all the day

ஆசிரியர்களுக்கான கல்வி உளவியல்

பாலசுப்பிரமணியம் தனபாலன்

SLTS - I, SLTES - III

BA, PGDE (Merit), M.Phil.in. Education, Dip in Psychology, 1st Class

Dip. in. Human Resource Management

Cer.in. Vocational Guidance (Singopore)

வெளியீடு

லங்கா பதிப்பகம்

F.L1 /14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர

கொழும்பு - 12.

2010

தலைப்பு : ஆசிரியர்களுக்கான கல்வி உளவியல்
ஆசிரியர் : பாலசுப்பிரமணியம் தனபாலன்- SLTS-I, SLTES-III
BA, PGDE (Merit), M.Phil.in. Education,
Dip in Psychology. 1st Class
Dip. in. Human Resource Management
Cer.in. Vocational Guidance (Singopore)
முதற்பதிப்பு : ஜனவரி 2010
பதிப்புரிமை : திருமதி கர்ணி தனபாலன்
பக்கங்கள் : V + 118
பிரதிகள் : 2000
வெளியிடுவோர்: லங்கா பதிப்பகம்
FL, 1/14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுரம், கொழும்பு - 12.
T.P.0112341942
கணினி வடிவமைப்பு: கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல. 424, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Title : Education Psychology for Teachers
Author : Mr.Balasubramaniyam Thanabalan
First Edition : January 2010
Copy rights : Mrs.Karni Thanabalan
Printed and
Publisher : Lanka Printers
Colombo - 12

அட்டைப்படம்: கைதடி நவீல்ட் பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு உளவியல் அடிப்படையில் மகிழ்ச்சிகரமான கற்றல் பயில்வை நூலாசிரியர் மேற்கொண்டபோது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்களின்

அணிந்துரை

ஆசிரிய வாண்மை இன்று பல பரிமாணங்களில் விரி வடைந்து செல்கின்றது. மாணவர்களை முழுமையாகக் கொண்ட நவீன கல்வியியல் செல்நெறிகள் விரிவாகி வருகின்றன. இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆசிரியர்களுக்கான கல்வியையும் விஸ்தரிக்க வேண்டியுள்ளது. அதிலும் உளவியலறிவு உள்ளவராகவும் அதனைப் பிரயோகிப்பவராகவும் ஆசிரியர் இருக்க வேண்டும். மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்பக் கற்பிக்க இது மிகவும் அவசியமாகும். இன்றைய ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிப்பது மட்டுமன்றி மாணவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல்களையும் மேற்கொள்ள வேண்டும் அதற்கிணங்கவும் நூலாசிரியர் இந்நூலை ஆக்கியுள்ளார்.

இந்நூலாசிரியர் பாதனபாலன் கடந்த பதினைந்து வருடமாகக் கல்வி உளவியல், வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் பாடங்களை கோப்பாய் ஆசிரியகலாசாலை, தேசியகல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கல்விமானிப் பாட நெறிகளுக்கு இப்பாடங்களைக் கற்பித்துவரும் அனுபவம் உள்ளவர். கல்வி உளவியல், கல்வியியல் சார்ந்த இருபத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர், பத்திரிகைகளில் கல்வியியல் சார்ந்த பல நூறு கட்டுரைகளை எழுதி வருபவர். அவரது பன்முக ஆளுமையின் வெளிப்பாடாக இந்நூல் மிளிர்கின்றது.

மனிதவள அபிவிருத்தியின் மையம் பாடசாலையே ஆகும். பாடசாலை மட்ட முழுத்தர முகாமைத்துவ கல்வி அபிவிருத்திக்கு ஆசிரியர்களின் உளவியலறிவே அடிப்படையாகும். அதிபர் - மாணவர் - பெற்றார் சமூகத்தினருக்குத் தனது ஒருமுகமான சேவையை வழங்கி நாட்டைக் கட்டியெழுப்பும் ஆசிரியர்களுடைய வாண்மையை விருத்தியாக்க இந்நூல் பல்வேறு வழிகளை இயம்பி நிற்கின்றது. ஆசிரியர்களுக்கு என்றே விசேடமாக உருவாக்கப்பட்ட இந்நூலைப் போலவே மேலும்பல நூலாக்கங்களை வெளியிட குறையருள் துணை நிற்பதாக.

S.K.யோகநாதன்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

முன்னுரை

ஆசிரியர்களின் உள ஆற்றலை மேம்படுத்தி, தொழில் நிலையை விருத்தி செய்தல் எம் நாட்டின் கல்வித்துறையில் முக்கிய இடம் பெற்றுள்ளது. அது எம் மிக உன்னதமான தேசிய செல்வமாகிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைவதுடன், ஆசிரியத் தொழில் சமூக மதிப்பைப் பெறுவதற்கும் பெரும் உதவியாக அமைகின்றது. எந்த ஓர் ஆசிரியக் கல்வி வாண்மை விருத்திப் பாட நெறியிலும் கல்வி உளவியல், ஆசிரியர்களுக்கான உளவியலாகப் பிரத்தியேகமான சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது.

இவ்வகையில் ஆசிரியர்களுக்கு மிக அவசியமாக வேண்டப்படும் உளவியல் தேர்ச்சிகளை உள்ளடக்கி இந்நூல் வெளிவருகின்றது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு, அன்பையும் ஆதரவையும் வழகுதல், மகிழ்ச்சிகரமான கற்றல் சூழ்நிலைகளை உருவாக்கல், தன்னம்பிக்கையை ஏற்படுத்தல், பாதுகாப்பையும் பாராட்டையும் வழங்குதல், நம்பத்தகுந்த உறவை ஏற்படுத்தல், மாணவர்களின் உணர்வுகளை மதித்தல் உடனிருத்தல், ஊக்கல், ஆகிய செயற்பாடுகளை முறையாகப் பிரயோகிக்க உளவியலறிவு மிக அவசியம். அவ்வறிவை இந்நூல் வழங்கக்கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் - மாணவரின் உயிர்ப்பான இடைவினை மூலமே பூரண கற்றல் இடம் பெறும் இதற்கு உளவியல் கல்வி உறுதுணையாகின்றது.

இந்நூலை எழுத ஊக்கத்தை ஏற்படுத்திய எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி S.K. யோகநாதன் அவர் களுக்கும், சிறந்த வழிகாட்டலை மேற்கொண்ட உளவியற்துறை பேராசிரியரும் எனது பேராசானுமாகிய சபா. ஜெயராசா சேர் அவர் களுக்கும் முதற்கண் எனது நன்றிகள் உரித்தாகுக. மேலும் இந்நூலைச் சிறப்பாகக் கணினிமூலம் வடிவமைத்துத் தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், இந்நூலின் முக்கியம் கருதி வெளியீடு செய்யும் கொழும்பு லங்கா பதிப்பகத்திற்கும் எனது இதயபூர்வ மான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆசிரியர்கள் தமது வாண்மைவிருத்திப் பரீட்சைகளுடன் தாம் கற்பிக்கும் ஒவ்வொரு மாணவர்களையும் வழிப்படுத்தி நற்பிரஜைகளாக அவர்களை உருவாக்க இந்நூல் வழிகாட்டுகின்றது.

– நூலாசிரியர்

உள்ளே ...

ஆசிரியர்களுக்கான கல்வி உளவியல்

கல்வியானது கற்கும் மாணவர்களுக்குப் பொருத்தமான தாக இருக்கவேண்டும். அவர்களது தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்பக் கல்வியை மகிழ்ச்சிகரமாக வழங்குவதற்கு உளவியற்றுறையே வழிகாட்டுகின்றது. அத்தோடு மாணவர்களும், பெரியவர்களும் வெவ்வேறு முறைகளிலும், வெவ்வேறு வேகங்களிலும் கற்கின் றார்கள். இவர்களைச் சரியாக வழிப்படுத்தி, அவர்களது கற்றலை வினைத்திறனாக்கும் நுட்பமுறைகளைப் பிரயோகக்கல்வி உளவியல் கொண்டுள்ளது. பரந்த உளவியற் பாடப்பரப்பிற் பிரயோகக் கல்வி உளவியல் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகின்றது. இது கற்பவர்களின் இயல்புகள், நடத்தைகள், செயலார்த்துகைகள் பாரிய விஞ்ஞான அறிவியலாக வளர்ச்சியடைந்துள்ளது. இவ் அறிவியல் விஞ்ஞானக் கற்கையை ஆசிரியர்களும், மாணவர்களும், ஆர்வலர்களும் எளிமையாகக் கற்கும் நோக்கில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுடைய தொழில்சார் பயிற்சிகளான கற்பித்தலில் தேசிய டிப்ளோமா, பட்டப்பின் கல்வி டிப்ளோ, ஆசிரிய கலாசாலை பயிற்சி, கல்வி முதுமாணிக் கற்கைகள் துறைகளில் உளவியற்பாடம் முதன்மை பெறுகின்றது. அப்பாடத்திட்டங்களுக்கு அமைய இங்கு விடயங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களை விளங்கி மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்பக் கற்றலுக்கான ஊக்கலை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை உளவியற் கல்வித் தேர்ச்சியினூடாகவே ஆசிரியர் கள் பெறமுடியும். அத்துடன் வகுப்பறையில் மகிழ்ச்சிகரமான கற்றல் – கற்பித்தல் கல்வி நிலையையும் ஏற்படுத்தலாம். இதற்கு ஏற்ப நவீன கல்வி உளவியற் பிரயோகங்களை இற்றைப்படுத்தி நிகழ்கால எதிர்கால மற்றும் சர்வதேச, தேசிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமையும் வகையிலும் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் கல்வி உளவியற் பாடத்துறை யின் உத்தேசத் தேர்ச்சிகள் பின்வருமாறு;

1. கல்வி உளவியலின் தோற்றம், வளர்ச்சி, கோட்பாட்டு அடிப்படைகளை விளக்குதல்.
2. விருத்தியடையும் உயிரி என்ற வகையில் பிள்ளையிடத்தே நிகழும் மாற்றங்களைக்கொண்டு வகுப்பறையிற் கற்றலுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கல்
3. கற்றல் கோட்பாடுகள், பிரயோகங்களுக்கு அமையச் செயன்முறையில் ஈடுபடல் (நடத்தைவாதம், அறிகைவாதம், சமூகக்கற்றல் வாதம், மானிடவாதம், கட்டுருவாக்கவாதம்)
4. கற்றல் – கற்பித்தற் பிரச்சினைகளைத் தீர்க்கும் உபாயங்களுக் கான வழிவகைகளை இனம் காணல்.
5. சமநிலை ஆளுமையை வளர்த்து, முழுமையான ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டல்
6. விழுமிய விருத்தி – ஒழுக்க விருத்தி உளவியல் அணுகு முறைகளைக் கருத்திற்கொண்டு ஒழுக்கம் மிக்க மாணவர் சக்தியை உருவாக்கல்.
7. விசேடதேவை, கல்வி வழிகாட்டல் அலோசனைச் சேவைகள் தொடர்பான தேர்ச்சிகளைப் பெறல்.
8. கல்வி வழிகாட்டல் ஆலோசகரிடம் இருக்கும் பண்புகள், ஒழுக்க நெறிகள் என்பவற்றை ஆசிரியர் வகிபங்கின்மூலம் வெளிக்காட்டுதல்
9. மாணவர்கள் சார்பாக அர்ப்பணிக்கும் மனப்பான்மையை ஆசிரியரிடையே விருத்திசெய்தல்.
10. பாடசாலையின் உள்ளும், வெளியிலும் மனித – பௌதிகவள உதவியுடன் உதவிச் செயற்பாடுகள், சிரமதானம், கல்வி – சுகாதார ஆன்மீக விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடல் என்பவையாகும்.

இந்த நூற்றாண்டில் கல்வித்துறையில் "Paradigm SHIFT " என்ற கட்டளைக்கோள் மாற்றம் செயன்முறை அறிவைப் பலபரிமாணங் களில் விஸ்தரித்து, விரைவான மாற்றங்களுக்கு உட்படுத்தியுள்ளது. ஆசிரியர் வகிபாங்கானது (transmission) ஊடுகடத்தும் (Transaction) – பரிமாற்றம், Transformation - நிலைமாற்றும் வகிபாகமாகப்படி உயர்ந்துள்ளது.

அத்துடன் ஆசிரியவாண்மை அறிவு மையமாகவும் (Knowledge Based) ஆகவும், மாணவர் மையமாகவும் (Client tenured) ஆகவும் விருத்தியடைந்து கட்டுருவாக்கவாதம் பிரயோகிக்கப்படும் நிலையில் ஆசிரியர்களுக்கான உளவியற் கல்விப் பிரயோகம் மிகமிக முக்கியமாகி யுள்ளது. தற்போது கட்டுருவாக்கவாதம்மூலம் மேலும் விருத்தியாகி வருகின்றது.

கட்டுருவாக்க வாதம் - (Constractivism)

ஒவ்வொரு மனிதரும் தம் அனுபவங்களுக்கு ஏற்ப அறிவைக் கட்டி எழுப்புகின்றனர். கடந்தகால அனுபவங்களும், கற்றலும் அறிவைக் கட்டுமானப்படுத்துகின்றன. கட்டுருவாக்கவாதத்தில் இவ் அறிவுக் கட்டுமானமே அடிப்படையாகும். (விகொஸ்கி, பியாஜோ, புரூனர், எலானோ டக்வாத், ஹொவாட் கார்டினர் ரோஜர் பைப்) அறிகை உளவியல் விஞ்ஞானக் கல்வியினூடாக இக்கட்டுருவாக்கவாதப் பிரயோகங்கள் எமது நாட்டில் 5E அணுமுறையாகியுள்ளது. மாணவர்கள் பலமுள்ளவர்களாயும் அறிவுள்ளவர் களாகவுமிருப்பர். இதில்தேர்ச்சி, தேர்ச்சிமட்ட, நேரம், மாணவர்மனப் பாங்குகள், ஆசிரியர் புத்திஜீவித்தனம் என்பவை முக்கியம் பெறுகின்றன. விரிசிந்தனையினூடான குழுவாகக் கற்கும் முறையாகவும் இது உள்ளது. இக் கட்டுருவாக்கக் கல்விப் பிரயோகத்தினூடாக மாணவர்களின் ஒன்றிணைந்த ஆளுமை (Integrated Personality) சிந்தனைத் திறன்கள் (Thinking Skills), சமூகத்திறன்கள் (Social Skill), சுய திறன்கள் (Personal Skills), ஆளிடை, ஆளாகத் தொடர் புகளினூடாக விருத்தியடையும். இச்செயன்முறையால் எல்லா மாணவர்களும் சமூகத்திறன்கள் விருத்தி யடைந்த நற்பிரஜைகளாக ஆவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. சிந்தனைத் திறன்கள்– ஆக்கச் சிந்தனை, தீர்க்கமான சிந்தனை, பகுப்பாய்வுச் சிந்தனை, தருக்கச்சிந்தனை, தொகுத்தறி சிந்தனை, உய்த்தறி சிந்தனை, பிரச்சினை தீர்க்கும் சிந்தனை, முரண் பாடுகளை முகாமை செய்யும் சிந்தனை, தீர் மானம் எடுக்கும் சிந்தனை,

2. சமூகத் திறன்கள்– குழுவாகச் செயற்படல், குழுவில் செயற் படல், ஏனையோர் மீது கருணை காட்டல், தலை மைத்து வத்தைப் பின்பற்றல், உதவி செய்தல், ஒற்றுமையாக வாழ்தல், ஒருங் கிணைந்து அபிவிருத்தி காணல்.

3. சுய திறன்கள் – மனவெழுச்சிச் சமநிலை, உள நெருக்கீடு முகாமை, தொடங்கும் ஆற்றல், மாற்றங் களை ஏற்படுத்தும் திறன், முயற்சி யாண்மை, பொறுப் புக் கூறலும் வகை சொல்லும், அர்ப்பணிப்பு, சுய ஒழுக்கம்.

"பிறர் மகிழ்ச்சியாக இருக்க எப்பொழுது வழி
கண்டுபிடித்துக் கொடுக்கிறீர்களோ; அப்பொழுது
முதலே நீங்கள் இன்பமாக இருக்க ஆரம்பித்து விடுகிறீர்கள்"

–இங்கர் சால்–

E1	முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்	ஆசிரியர் செயற்பாடுகள்	மாணவர் செயற்பாடுகள்
E_1 ஈடுபடல் / தொடர்புறுத்தல் (Engagement)	**முதலாம் கட்டம்** • செய்து காட்டல் • வாசிப்பு • சுயாதீன எழுத்து வேலைகள் • பகுப்பாய்வு செய்தல் • சிந்தனைக் கிளறல் • வரைவிலக்கணம் செய்தல்.	• பாடம் தொடர்பான ஆர்வத்தைத் தூண்டல் • இடையீடு செய்யும் ஆர்வத்தைத் தூண்டல். • மாணவர்களிடையே வினவுதல் • முன்னைய அனுபவங்களைக் கிளறுதல் • நடித்துக் காட்டல் • மாணவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டல் • மாணவர்களிடையே இணைப்பை ஏற்படுத்தல்.	• மாணவர்கள் இத்தகைய வினாக்களை எழுப்புவார். • இது ஏன் நடந்தது? • இது தொடர்பாக ஏற்கனவே தெரிந்திருப்பவை. அறிந்திருப்பவை. • நான் என்னென்ன செயற்பாடுகளில் இனி ஈடுபடுதல் வேண்டும். • குறித்த செயற்பாடு தொடர்பான தமது ஆர்வத்தை வெளிக்காட்டல்.
E_2 கண்டறிதல் (Exploration)	**இரண்டாம் கட்டம்** • குழுவேலைகள் • அணிவேலைகள் • கண்டறிதல் • ஈடுபடுதல் • பரிசோதனை செய்தல் • ஆராய்தல் • ஒருவிடயத்தை வாசித்துத் தகவல் திரட்டுதல் • பிரச்சினை விடுவித்தல் • மாதிரியொன்றை உருவாக்குதல் • ஒரு விடயம் தொடர்பாகச் செயலாற்றுதல்	• அறிவுறுத்தலின்றி மாணவர்களுடன் இணைந்து பணியாற்றுதல். • மாணவர்களைத் தொடர்ச்சியாக இயங்க வைத்தல். • மாணவர்களிடையேயான இடைத்தாக்கத்தினை அவதானித்தல், கேட்டறிதல். • தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வினாக்களை வினாவுதல். • கலந்துரையாடல் • தோழமைத்துவத்தைப் பேணுதல். • பிரச்சினைகளை மாணவர்களுடன் அணுக ஊக்குவித்தல்.	• வரையறுத்த நேரத்திற்குள் சுயாதீனமாக இயங்குதல். • அனுமானங்களையும் கருதுகோள்களையும் பரிசீலித்தல். • புதிய அனுமானங்களையும் கருதுகோள்களையும் உருவாக்குதல். • மாற்றுத்தீர்வுகளை உருவாக்கி அது தொடர்பாகக் குழுவாகக் கலந்துரையாடல். • கண்டறிந்தவற்றை அவதானங்களைப் புதிவுசெய்தல் • உருவாக்கத்தை காட்சிப்படுத்த தயாராகுதல்.

E2	முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்	ஆசிரியர் செயற்பாடுகள்	மாணவர் செயற்பாடுகள்
E_3 விளக்குதல் (Explanation)	**முதலாம் கட்டம்** • பரிசோதனை முறையில் விசாரணை. • செயற்திட்ட முறையிலான ஈடுபாடு • பிரச்சினை விடுத்தல் • தீர்மானம் எடுத்தல் • ஒன்றிணைந்த தீர்மானம் • சிந்தனை விருத்தி	• மாணவர்கள் தமது வினாக்களை முன் வைக்கத் தூண்டுதல். • மாணவர்கள் பெற்றிருக்கும் எண்ணக் கருக்களை விருத்தியாக்க வழிமுறைகளை முன்வைத்தல். • மாற்றுத் தீர்வுகளை ஊக்குவித்தல் • மீளவலியுறுத்தல், மேலும் தேடலுக்கான நுட்பங்களை இனங்காண உதவுதல்.	• இதையொத்த வேறு சந்தர்ப்பங்களிற்கான விளக்கங்களை முன் வைத்தல். • மேலும் மேலும் வினாக்களை வினாவுதல். • புதிய பரிசோதனை முறைகளை வடிவமைத்தல். பெற்ற திறன்களைச் சகபாடிகளுடன் இணைத்துச் சரிபார்த்தல்.
E_4 கவிவொக்கம் (Exploration)	**நான்காம் கட்டம்** மாணவர்கள் தாம் கற்றுக் கொண்ட செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்திய செயற் பாடு இதுவாகும். அதாவது நாம் கற்று வந்த நடைமுறை உலகுடன் பிரயோகித்துப் பார்ப்பது இதுவாகும். இதில் பரிசோதனை முறை விசாரணை செயற்திட்ட முறையிலான ஈடுபாடு ஒன்றிணைந்த தீர்மானம்.	• மாணவர்களை முறைசார்ந்த முறையில் தமது அடைவை மாணவர்கள் விளக்கிக் கொள்ள முன் வைக்கவும் தூண்டுதல். • மாணவர்கள் தற்போது வைத்திருக்கும் எண்ணக் கருவை மேலும் விருத்தி செய்தல்.	• புதிய வினாக்களை முன்வைக்கலாம். அது தொடர்பான தமது ஆக்கங்களை முன்வைப்பார். மேலும் மேலும் தமது வினாக்களை முன் வைத்தல் புதிய பரிசோதனைகளை முன்வைத்தல். ஆதாரங்களுடன் விடயங்களை மீளவும் பதிவு செய்தல். தாம் பெற்றுள்ள அனுபவங்களை ஆசிரியருடனும் சகபாடிகளுடனும் ஈடுபடுத்தலாம்.

E5	முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்	ஆசிரியர் செயற்பாடுகள்	மாணவர் செயற்பாடுகள்
E5 மதிப்பிடல், கணிப்பிடல் (Evaluation)	**ஐந்தாம் கட்டம்** • கணிப்பீட்டு, மதிப்பீட்டு உபகரணங்களைத் தயாரித்தல். • அவதானிப்பு • செவ்வை பார்த்தல் பட்டியல் • மாணவர் நாட்குறிப்பு பதிவு • செயலடைவுக் கோவை • உற்பத்திக் கணிப்பு	• மாணவர்கள் முன் வைத்த விடயங்களைக் கணிப்பிடுதல். • மாணவர்களின் இயங்கும் தன்மையைக் கணிப்பிடுதல். • மாணவர்களின் தேர்ச்சியைக் கணிப்பிடுதல் • தம்மை சுயமாகக் கணிப்பிடத் தூண்டுதல் • திறந்த வினாக்களை முன்வைத்தல். • எதிர்காலத்தில் கற்பித்தலில் செய்யவேண்டிய மாற்றங்கள் பற்றிச் சிந்தித்தல். • தவறாக விளங்கிக் கொண்ட எண்ணக் கருக்களை மீள மைத்து வழங்குதல். • மாணவர்களின் இடர்பாடுகளில் கவனஞ் செலுத்துதல்.	• சிறந்த வினாக்களுக்கு விடையளித்தல். • விடையளிக்க நாம் கற்றுக்கொண்டுள்ள விடயங்களை ஆதாரங்களாக முன் வைத்தல். • தமது செயற்பாடுகளைத் தாமே மதிப்பிடல். • சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு மேலும் வினாக்களை முன் வைத்தல். • எதிர்காலச் செயற்பாடுகளில் தேவையான விடயங்கள் பற்றி ஆசிரியருக்குத் தெரிவித்தல்.

உலகில் உயிரினங்கள் பிறப்பது மகிழ்ச்சியாக வாழ்வதற்கே. பல்வேறு சந்தர்ப்பங்களினூடாக மகிழ்ச்சியை ஏற்படுத்தி, துன்பங்களின் தாக்கங்களில் இருந்து விடுதலையளிக்கும் கற்கையாகப் பிரயோக உளவியல் உள்ளது. இது உளவியல் ஆய்வு முடிவுகளைப் பல்வேறு துறைகளிலும், வாழ்க்கையிலும் பிரயோகித்துப் பயனடைதல் தொடர்பான பாடத்துறையாகவுமுள்ளது. உளவியலறிஞர்கள் இன்று பிரயோக உளவியலைச் செயற்பாட்டு உளவியல் அல்லது பயன்பாட்டு உளவியல் என்றும் அழைக்கின்றனர்.

இன்றைய நவீன உலகளாவிய கல்வி, தொழில் செல் நெறிகளில் மனித வள அபிவிருத்தியே முதன்மையாகவுள்ளது. இத்துறையில் உடனடிப் பயன்பாடு, கற்றல் இடமாற்றம் (Transfer of learning) நிகழ உளவியல் சிறப்பாக உதவுகின்றது. பிரித்தானியா, அமெரிக்கா, யப்பான், ஜேர்மனி ஆகிய வளர்ந்த நாடுகளில் உயர்தரக் கல்வியிலும், பல்கலைக் கழகங்களிலும் மிகக் கூடுதலான மாணவர்கள் இப்பாடத்தையே பயில்கின்றனர். எமது நாட்டிலும் உளவியற் பாடத்தை ஒரு கலைத்துறைப் பாடமாகப் பல்கலைக்கழகங்களிற் சேர்த்துள்ளனர். இது போதுமானதல்ல. இத்துறையை மேலும் பலவழிகளில் விருத்தியாக்க வேண்டிய கட்டாயமான சூழல் இன்று நிலவுகின்றது.

மேலும் பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரியப் பயிற்சி பெறுவோர், பட்டப்படிப்பை மேற்கொள்பவர்கள் பிரயோக உளவியல் என்ற ரீதியிற் கல்வி உளவியலைப் பயின்று வருகின்றனர். இவர்கள்கூட இப்பாடத்தை வகுப்பறைகளிலும், வாழ்க்கையிலும் முறையாகப் பிரயோகிக்கத் தெரியாத நிலை காணப்படுகின்றது. பரீட்சைப் பெறுபேறுகளுக்காகப் பயிலும் ஒரு பாடத்துறை என்ற நிலையிலிருந்து வாழ்க்கைக்கும், ஏனையவர்களுக்கும், நல்வழிகாட்டும் பாடத்துறையாகப் பிரயோக உளவியலைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. இதற்கான வழிகாட்டல்களும், செயற்பாடுகளும் இங்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

உளவியல், கல்வி உளவியல் (Education Psychology), வியாபார உளவியல் (Business Psychology), பிறழ்வு உளவியல் (Abnormal Psychology) கைத்தொழில் உளவியல் (Industrial Psychology), சமூக உளவியல் (Social Psychology), இராணுவ உளவியல் (Militrary Psychology), மனித வள உளவியல் (Human Resource Psychology), முகாமைத்துவ உளவியல் (Management Psychology) என்றவாறு, இன்னும் மனிதர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. மனிதர்களிடையே மனிதத்து வத்தை ஏற்படுத்தி அதனூடாக வளர்ச்சிகாண வழிவகுக்கும் மானுடவியல் அபிவிருத்தித்

துறையாகவும் உளவியல் உள்ளது. மனிதன் மதிக்கப்பட வேண்டியவன், மாற்றப்பட வேண்டியவன் அல்ல. மதிக்கப்படும் போது அவன் மாற்றப்படுவான் என்பதைப் பிரயோக உளவியல் இயம்பி நிற்கின்றது.

உளவியலானது வளர்ந்துவரும் ஒரு கலையும், விஞ்ஞானமுமாகும். இது மனித இயல்புகள், நடத்தைகள் பற்றிய அறிவியற் றுறையாகவுள்ளது. இதன் பயன்பாடு தூய்மையான மானிட உறவுகளைக் கட்டியெழுப்புவதே ஆகும். மனிதர்களிடையே உடல் – உள – மனவெழுச்சி, மொழித்திறன், ஆக்கத்திறன், உற்பத்தித்திறன், அழகியல் மேம்பாடு, சமூக–அறவொழுக்க மேம்பாடு, சமநிலை ஆளுமை என்பவற்றை ஏற்படுத்த உளவியல் உதவுகின்றது.

உளவியல் செய்முறைகள்

இன்றைய நவீன தகவல் விஞ்ஞான உலகில், ஒவ்வொரு நிமிடமும் வளர்ந்துவரும் விஞ்ஞான, சமூக மாற்றங்கள் எமது விளக்கங்களைப் பழையதாக்கிவிடுகின்றன. இவற்றின் தாக்கங்களினால் மனிதம் பாதிப் படைகின்றது. ஒவ்வொரு மனிதரும் தன் சுய அடையாளம் என்ன? தான் யார்? தான் எப்படிப்பட்ட மனிதனாக வளரவேண்டும்? ஆகிய கேள்வி களுக்கு விடைகண்டு மகிழ்ச்சியான மனிதனாக வாழ உளவியற் செய்முறைகள் துணைசெய்கின்றன. பயன்களைக் காட்டி நிற்கின்றன.

தற்போது உளவியலில் சுயம் என்ற எண்ணக்கரு முக்கியம் பெறுகின்றது. இதில் ஒருவன் தன்னைப் பற்றித் தானே சிந்தித்தல் என்பதுடன், தனது மனப்பாங்குகள், உணர்வுகள், விருப்பங்கள், அகக் காட்சிகள், சுய மதிப்பீடு என்பவையும் இடம்பெறுகின்றன. மேலும் பிரயோக உளவியலில் 2வது சுயம் என்ற ஒன்றையும் அறிமுகப்படுத்துகின்றனர். இது செயன்முறை சார்ந்ததாகும். தனது நடத்தையினூடு தன்னைச் சரிப் படுத்திக் கொள்கின்ற உளவியல் ரீதியலான செயன்முறைகள் இதிலடங்கு கின்றன. மேலும் இவ் இரண்டாவது சுயத்தில் தன்னை முழுமையாக மையப்படுத்துவது மட்டுமல்லாது தனது குடும்பம், சூழல், பாடசாலை, சமூகம், நாடு என்பவை பற்றியும் கரிசனைப்படுத்துவதையும் உளவியல் எடுத்து இயம்புகின்றது.

ஒரு மனிதன் நடக்கவோ கதைக்கவோ செய்வதுபோல, தன்னைப் பற்றியும் தெரிந்துகொள்கின்றான். தன்னைச் சூழ இருக்கும் ஒவ்வொருவரும் யார்? அவர்கள் நடந்துகொள்ளும் முறைகள் எவை? தன்னைச் சூழவுள்ளவர்கள் தன்னை எவ்வாறு நடத்துகின்றார்கள் என்பதையும் அறிந்துகொள்கின்றான். இதையே நவீன பிரயோக உளவியலறிஞர் S.H சவிவ்வன் "மற்றைய மனிதர்களைக் கண்ணாடியாகப் பாவனை செய்து அக் கண்ணாடிகளில் தம்மைப் பார்த்துக்கொள்ளல்" என்கின்றார்.

தனியாள் விடய ஆய்வு

என்னை என்னால் நம்பமுடியவில்லை. நான் யார்? ஏன் இவ் உலகிற் பிறந்து வேதனையடைகின்றேன். ஏன் என்னையே என்னாற் புரிந்துகொள்ள முடியாது? எனக்குச் சுயம் ஒன்று உண்டா? மனிதத்துவத்தை எங்கு தேடுவது? என் நல்ல பழக்கங்கள் எளிதில் என்னை விட்டு நீங்கி, தீய பழக்கங்களை நீக்கப் போராடியும் முடியாமல் உள்ளதே!

1. மேற்குறிப்பிட்ட தனியாள் விடய ஆய்வு எவ் எண்ணக்கரு சார்ந்தது?
2. மீட் (Mead) என்ற பிரயோக உளவியலாளர் இவ்விடயம் தொடர்பாகத் தெரிவிக்கும் கருத்தை விபரிக்குக?

விடைகள்:

1. தன்னைத்தானே மீட்டிப்பார்க்கும் மேற்குறிப்பிட்ட பிரயோக உளவியல் தனியாள் விடய ஆய்வு சுய எண்ணக்கரு (Self concept) சார்ந்ததாகும்.

2. ஒவ்வொரு மனிதரிடமும் தான் யார் என்ற சுய எண்ணக்கரு காணப்படுகின்றது. இது நேர்நிலையாக இருப்பின் மனிதம் மகிழ்ச்சியுடையதாக, முன்னேற்றகரமானதாக இருக்கும் அதேவேளை, எதிர்நிலையாக இருப்பின் அகங்காரம் கூடியதாக அபாயகரமானதாகிவிடும். தற்காலப் பிரயோக உளவியல் சுயம் (Self) முக்கிய

எண்ணக்கருவாகவுள்ளது. தன்னைப்பற்றி ஒருவன் என்ன நினைத்துக்கொள்கிறானோ அது சுய எண்ணக்கருவாகிறது. அது தன்னுள் உண்டாவது பற்றிய ஆய்வு சுய மதிப்பீடாகும் (Self Evaluation). இவ்வாறான தன்னைப்பற்றிய சுய எண்ணக்கரு வானது ஒருவனுக்குப் பிறப்பால் உருவாவதில்லை. சமூக–கல்விமயமாகுதற் செயற்பாட்டின்வழி பிறப்பிலிருந்து கற்கப் படுகின்றது எனப் பிரயோக உளவியலறிஞர் மீட் தெரிவிக்கின்றார். இவர் சுயத்தினை இருபகுதிகளாக நோக்குகின்றார்.

1. I - நான்

2. Me - என்னை

இதில் I உடனடியாகத் துலங்கும் நடத்தையாகவுள்ளது. ஆக்கும் தன்மை கொண்ட கூறாக சுயத்தில் இது செயற்படுகின்றது. Me என்பது பல்வேறு தரப்பினரின் நோக்கு நிலைகளில் இருந்து தன்னைக் காண்பதைக் குறிக்கின்றது. பாவனை செய்வதைக் குறிக்கின்றது. இது குழந்தைப்பருவ விளையாட்டுக்களுடன் தொடர்புடையதாகவுள்ளது எனவும் மீட் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான I, me செயற்பாட்டால் ஒருவனது சுயம் உருவாவதாக மீட் கூறுகின்றார். இவ்வகையிற் சமூகம்சார் அனுபவங்கள், பயில்வு நிலைகள், பல்வேறு நடிபங்குகளைக் குழந்தை நாளடைவிற் கற்கின்றது. இதனூடு அதன் சுயம் வளர்கின்றது. சுய ஆய்வுமூலம் எம்மை நாமே அறியலாம். இதற்கு எம்மைப் பற்றிய மீள வாசிப்பு அவசியமாகின்றது என மீட் குறிப்பிடுகின்றார். இதனூடு சுயத்தைக் கட்டியெழுப்பி வாழ்வில் உயரலாம். மனவெழுச்சி, உளவியல் தாக்கங்களில் இருந்து விடுதலையடையலாம்.

உளவியலின், செயன்முறைப் பயன்பாட்டைச் சரியாகக் கற்ற ஆசிரியர்; தம்மைப்போலவே தம் ஒவ்வொரு மாணவர்களும் பிறரால் விரும்பப்படு வதையும், ஏற்றுக்கொள்ளப்படுவதையும், முயற்சிகளில் வெற்றியடை வதையும் விரும்புகின்றார். மாணவர்களிடம் போதுமான அளவு சுய

எண்ணக்கருவை வளர்த்து அவர்கள் பிறரிற் சுய கௌரவத்தைப் பெறுபவர்களாகவரவும் அவர்கள் பெறுமதியான மனிதர்கள் என அவர்களுக்குப் புரியவைப்பதே கல்வி உளவியலின் பயன்பாடு நிலையாக வுள்ளது. உடல், உள ஆரோக்கியம், கற்றலில் ஈடுபாடு, நன்மனப்பாங்கு, ஆக்கபூர்வ மனிதத் தொடர்பாடல், தலைமைத்துவம், ஆளுமை விருத்தி, ஆராய்வுக்கம், முயற்சி, எதையும் தாங்கும் இயல்பு என்பவற்றை உணர்த்துவதும் உளவியலின் பயன்களாகவுள்ளன. இவற்றை மேலும் நோக்கின்:

1. உள ஆரோக்கியத்தை எற்படுத்தல்

ஒருவர் தனது வயதிற்கு ஏற்ப மாறுபாடில்லாது உடல், உள நிலைகளில் மன நிறைவும், மகிழ்ச்சியும் பெற்றிருத்தல் தொடர்பான திறன்களைப் பிரயோக உளவியற் கற்கை இயம்புகின்றது.

2. ஆளுமையை விருத்தியாக்கல்

ஒருவரது உடல் – உளப் பண்புகள், மனப்பான்மைகள், சமூக அறநெறிப் பண்புகள் யாவும் ஒருங்கிணைந்த, ஏற்ற விதத்தில் அமைந்திருக்கும் தன்மை ஆளுமையாகும். இதில் விருத்தியை ஏற்படுத்தும் நடைமுறைகளைப் பிரயோக உளவியல் கொண்டுள்ளது.

3. உள, ஆரோக்கியமற்ற அசாதாரண நடத்தைகள், முரண்பாடுகள், பிரச்சினைகளில் இருந்து விடுபட உதவுகின்றது.

4. சமூக வாழ்வில், தொழில் இடத்தில், பாடசாலைகளில் எழக்கூடிய சிக்கல்கள், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவுகின்றது.

5. சிறப்பாகக் கற்க, கற்பித்தலை மேற்கொள்ள, புத்தாக்கங்களை ஏற்படுத்த, மனிதத் தொடர்பாடல்களை விருத்தியாக்க, தோல்விகளைத் தவிர்த்து, தோல்விகளைத் தாங்கி வெற்றிகாண வழிகாட்டுகின்றது.

6. சுய ஆய்வில் ஈடுபட்டு அபிவிருத்திகாண உதவுகின்றது. இங்கு சுய ஆய்வு என்பது ஒருவன் தன் ஆளுமை, பலங்கள், பலவீனங்கள்,

செயற்பாடுகள் பற்றி மிகவும் நிதானமான முறையிற் சுய சார்பின்றி ஆராய்வதாகும்.

இவ்வாறான பல்வேறு பயன்களைக் காட்டிநிற்கும் பிரயோக உயவியலானது உளவியலின் ஒரு கூறாக விருத்தியடைந்துள்ளது. ஆதி காலத்தில் தத்துவத்துடன் (மெய்யியல்) இணைந்திருந்த உளவியல் பின்னர் தனித்துறையாக வளர்ந்தது. வில்லியம் வோன்ட் (William Wundt) , 1832 – 1920 என்ற உளவியலறிஞர் உலகின் முதலாவது உளவியல் ஆய்வு கூடத்தினை 1879ஆம் ஆண்டு ஜேர்மனி நாட்டு லீப்சிக் பல்கலைக் கழகத்தில் தொடக்கிவைத்தார். இதிலிருந்து மேலும் தத்துவத்திலிருந்து உளவியல் வேறாகி, பல்வேறு பிரிவுகளினூடாக வளரத் தொடங்கியது.

மனிதன் தன்னைத்தான் புரிந்துகொள்ளும் செயன்முறையின் ஆரம்பமாகவே உளவியலின் தோற்றம் அமைந்தது. மனிதனது நடத்தை (Behavlour) அவனது அனுபவங்கள் (Experiences) ஆகியவற்றை ஆராய்ந்து மனித இயல்பினைத் தெளிவாக்க முயலும் அறிவியலாக உளவியல் அமைந்துள்ளது. மனிதப் பண்புகள், தேவைகள், வளர்ச்சிகளில் பொது விதிகளை எடுத்துக்கூறுவதுடன், மனித வேறுபாடுகளையும் அவற்றிற்கான காரணங்களையும் நெறிப்படுத்த உதவுகின்றது.

உளவியல் (Psychology) என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் ஆன்மா குறித்த கல்வி எனக் குறிப்பிடுகின்றது. தற்போது உளவியல்; பேராற்றல் மிக்க மானிட மாற்றங்களுக்குட்பட்ட ஒழுங்கமைந்த பயன்பாடுள்ள கற்கைநெறி எனப்படுகின்றது. இது மானிட உளச் செயற் பாடுகள், அது தொடர்பான நடத்தைச் செயன்முறைகள், சீராக்கங்கள் பற்றி அக்கறை கொள்கின்றது. மேலும், உளவியலறிஞர்கள் மாறுபடுகின்ற சூழ்நிலை களுக்கு ஏற்றாற்போல் மனித மனமும், நடத்தைகளும் இணைந்து போகின்றன. இதனூடாக மானிட அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என உறுதிகூறுகின்றனர். இன்றைய நவீன உளவியலறிஞர்கள் உளவியல் துறையின் நடத்தைவாதம், அறிவுசார் கற்றல் கொள்கைகள், உளப்பகுப்புக்

கோட்பாடு, அறிவிருத்தி உளவியல், மானுடவாதக் கோட்பாடு, தேவைக் கொள்கைகள் என்பவற்றின் அனைத்துப் நிலைகளையும் பயன்பாடு களுக்காக நடைமுறைப் படுத்துதலில் மிகக் கூடுதல் அக்கறை எடுக்கின்றனர். மேலும் உளவியலில்; ஓர் உயிரி தன்னுடைய இயல்புக்கு ஏற்ப, அல்லது உட்கட்டமைப்புக்கு ஏற்ப தனது செயலை ஆக்கிக் கொள்வதற்கான ஊக்கல் நடவடிக்கைகளில் அதிக அக்கறை செலுத்து கின்றது. மனித உளத் தேவைகள் இதற்கு அடிப்படைகளாகின்றன.

மனித உளத்தேவைகளின் தர ஒழுங்கு

பாரம்பரிய உளவியலறிஞர்கள் தனியாளுக்கும், சமூக உளவியலறி ஞர்கள் சூழலுக்கும் பண்பாட்டிற்கும் முக்கியத்துவமளித்தனர். இவ் இரண்டிற்குமான இடைவினைகளினூடாக மனித ஊக்கல் தேவைகளுக்கு முதலில் விளக்கமளித்தவர் தோமஸ் ஆவார். இவரைத் தொடர்ந்து ஆபிரகாம் மாஸ்லோ (Masloa's theory of need - 1960) படி தேவைக் கொள்கையை முறைத்தர ஒழுங்கில் வெளியிட்டார். மாஸ்லோ மனிதத் தேவைகள் தரத்திற்கேற்ப ஒழுங்கினை ஏற்படுத்தும் பெரும் தேவைகள் உணரப்படும் போது சிறிய தேவைகள் பூர்த்தியாகும். இவை குறிப்பிட்ட நேரத்தில் நட்த்தைகளை ஆட்கொள்வதோடு திருப்தியையும் ஏற்படுத்தும் ஒரு தேவை திருப்திப்படும் போது அதைவிடப் பெரிய ஒன்று தோன்றி திருப்தியையும் எதிர்பார்த்து நிற்கும் என மாஸ்லோ இயம்புகின் றார்.

1. உடலியல் தேவைகள் : கற்றுக் கொள்வதனால் அறியப்படாத மிக அடிப்படையான தேவைகளாக பசி, தாகம், நித்திரை கழிவகற்றல், பாலியல் என்பன உள்ளன. இவை உளவியல் தேவைகளை விட வலிமை கூடியவை. இவை பூர்த்தியாகாவிட்டால் மாணவரிடையே கற்றல் நிகழாது. மனிதன் சுமூகமான வாழ்வை வாழ முடியாது.

2. பாதுகாப்புத் தேவை: உடலியல்தேவை நிறைவேறியதும் பாதுகாப்புத் தேவை எழுகின்றது. பாதுகாப்பாக வசிக்க விடு, தொழில் , அந்நியரிட மிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நிலை, ஏனையவர்கள்

தமக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும் என்ற உணர்வு (பொலிஸ், சட்டம், அரசாங்கம்)

மாஸ்லோவின் தேவைப் படிமுறைத் தர ஒழுங்கு



3. அன்பு – உறவுத் தேவைகள்: உடலியல், பாதுகாப்புத் தேவைகள் நிறைவேறியதும் அன்பு – உறவுத் தேவை எழுகிறது. பெற்றோர், சகோதரர், நண்பர், காதலன், கணவன், உறவினர், சமூகச் சூழல் என்பவற்றிலிருந்து பாசம், அன்பு, நட்பு, காதல் சேர்ந்திருத்தல்மூலம் இத் தேவைகள் நிறைவேறும்.

4. கணிப்புத் தேவை: அன்புத் தேவையைத் தொடர்ந்து ஒருவர் தானாகவே திருப்தியடையும் சுய கணிப்பு, (நிறைவேற்றி முடித்தல், ஆற்றல், அறிவு, முதிர்ச்சி, சுதந்திரம்) மற்றும் ஏனையோராற் கௌரவப்படுத்தல் (புகழ்ச்சி, அங்கீகாரம், அந்தஸ்து, பாராட்டு) பிறர் கணிப்பு ஆகிய இரு அம்சங்களும் இணைந்த கணிப்புத் தேவை முக்கியம் பெறுகின்றது.

5. சுய உணர்வுத் தேவை: கணிப்புத் தேவை நிறைவடைந்தும் மனிதத் தேவைகளில் மிக உயர்ந்ததான இத் தேவை எழுகின்றது. ஒருவர் தனது திறமைகளைக் காட்டி வாழ்க்கையில் உச்ச நிலையை அடையும் தேவையே இது. ஆக்கத்திறன், ஆராய்வு, அறிவுசார் திறன்கள் இதனூடு எழுகின்றது.

மாஸ்லோவைத் தொடர்ந்து பிரயோக உளவியல் முகாமைத்துவ அறிஞர்களான டேவிட் மக்கெலன்ற், வேர்ஸ் பேக்கின் தேவைகளுடன் மானுட வியல் அபிவிருத்தியை எடுத்துக்காட்டினர். இத் தேவைக் கோட்பாடுகளின் தொகுப்பு இங்கே தரப்படுகின்றது.

மாஸ்லோவின் தேவைப்படிமுறை		ஹேர்பேக்கின் இரு காரணித் தேவைக் கோட்பாடு (Herzberg)		மக்கெலன்ற்றின் சாதாரண நிறைவேற்றல் தேவைக் கோட்பாடு (D.Mc Cleliand)
உயர்மட்டத் தேவைகள்	சுய உணர்வுத் தேவைகள்	திருப்தியூட்டுபவை, தூண்டுபவை	பணி, அர்ப்பணிப்பு சாதனை, பொறுப்பு	சாதனை புரிவதற்கான தேவை
	கணிப்புத் தேவைகள்		முன்னேற்றம் அங்கீகாரம், அந்தஸ்து	சக்திக்கான தேவை
கீழ் மட்டத் தேவைகள்	அன்பு உறவுத் தேவைகள்	ஆரோக்கியக் காரணிகள்	சமூகவுறவு, சகபாடிகள், வரவு மானிட உறவு	இணைந்து வழங்குவதற்கான தேவை
	பாதுகாப்புத் தேவைகள்		பாதுகாப்பு , நடைமுறைகள் கொள்கைகள், விதிகள்	அடிப்படைத் தேவைகள்
	உடலியல் தேவைகள்		வேதனங்கள், ஆதாரங்கள், மேலதிகப்ப படிகள்.	

இவ்வாறானமனிதத் தேவைகளிற் கற்றலைப் பொறுத்தவரை வளர்ந்தவர்களாயினும், பிள்ளைகளாயினும் உள்ளுணர்வைத் தூண்டும் பலமான ஊக்குவிப்புத் தேவைகள் அவசியமானவை. தேவைகள் மறுக்கப்படும்போது, தடைசெய்யப்படும்போது; விரக்தி, அமைதியின்மை, மன அழுத்தம், சந்தேகம், குற்றம் செய்யும் மனப்பான்மை, இம்சை ஆகியவை ஏற்படலாம். உளவியலறிஞர்கள் நடைமுறை வாழ்விற் பல்வேறு பிரச்சினைகளுக்கான காரணிகளில் தேவைகள் முக்கிய இடம்பெறுவதை இயம்புகின்றனர். இத் தேவைகள் பூர்த்செய்யப்படும்போது சமூக தனி மனித வாழ்வு சிறப்பாக அமையும்.

"குழந்தை பிறந்ததிலிருந்து பல்வேறு பருவங்களிலும் தேவைகள் பல்வேறு வகைப்படுகின்றன. இத் தேவைகளைச் சரியாக உணர்ந்து நிறைவேற்றும்போது பூரண சமநிலை ஆளுமைகொண்ட நற்பிரஜைகளை உருவாக்கலாம். இதற்குப் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பிரயோக உளவியல் தொடர்பான அறிவு தேவைப்படுகின்றது"

1. பிள்ளையினது அபிவிருத்தியின் பிரதான பருவங்களை எழுதுக.
2. கட்டிளமைப் பருவத் தேவைகள் 5 தருக.
3. கட்டிளமைப் பருவ அபிவிருத்திக்கு உதவும் பண்புகள் வரிசைப் படுத்துக?

விடைகள்

1. கரு உருவானதிலிருந்து பிறப்புவரை – பிறப்பிற்கு முற்பட்ட பருவம் பிறப்பிலிருந்து 02 வருடங்கள் – குழந்தைப்பருவம்.

02 – 05 வருடங்கள்	–	முன்பிள்ளைப் பருவம்
06 – 10 வருடங்கள்	–	பின்பிள்ளைப் பருவம்
11 – 13 வருடங்கள்	–	முன்கட்டிளமைப் பருவம்
14 – 18 வருடங்கள்	–	கட்டிளமைப் பருவம்

2. பாதுகாப்புத் தேவைகள், சுதந்திரம் பற்றிய தேவைகள், அன்பு – கணிப்புத் தேவைகள், எதிர்பார்க்கைகளை நிறைவுசெய்யும் தேவைகள், வாழ்வு பற்றிய நோக்கு – விமர்சன ரீதியிலான சிந்தனை – தன்சுய அடையாளத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பான தேவைகள்.

3. (i) தன் உடலியற் பண்புகளை ஏற்றுக்கொள்ளும் சக்தியை வினைத்திறனாக்கல்

(ii) ஆண் – பெண்; பால் ரீதியான சமூக நடிபங்குகளைப் பராமரித்தல்

(iii) பெற்றோர் – ஏனையோரிடமிருந்து கிடைக்கும் மனவெழுச்சி ரீதியான, உள ரீதியான சுதந்திரம்.

(iv) பொருளாதார ரீதியான வாழ்வியல் முறையில் ஈடுபடல்

(v) திருமணம் – குடும்ப வாழ்க்கைக்குத் தயாராதல், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தைகளைக் கட்டியெழுப்புதல்

(vi) சம வயதுக் குழுவினரிடையே சாதகமான – நெருக்கமான உறவினைக் கட்டியெழுப்புதல்

இதனை முன்னைய உளவியலாளர் சிக்கல் நிறைந்த பருவமாகக் கருதிப் பல்வேறு ஆய்வுகளினூடு நிறுவினர். ஆனால் இன்று, இப்பருவம் மகிழ்ச்சி நிறைந்த பருவமாக இயல்பாகவே அமையலாம். இப்பருவ இயல்புகளுக்கேற்ற சூழ்நிலைகள், தேவைகளின் நிறைவேற்றமும் இதற்கு உதவும் எனப் பிரயோக உளவியலறிஞர்கள் உறுதி கூறுகின்றனர்.

உடலியல் விஞ்ஞானமும் உளவியலும்

ஆரோக்கியமான உடலிலேயே ஆரோக்கியமான உளம் இருக்கும். மனித உளத்தின் செயற்பாடுகளான; மனவெழுச்சிகளுக்குட்படல், சிந்தித்தல், ஆராய்தல் துணிந்து செயற்படல் போன்றவற்றின் இயல்புகளை அறிந்து, மானுடவியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டுமாயின் மனிதனது உடலமைப்பின் நுட்பங்கள் பற்றிய அறிவு இன்றியமையாததாகும். மனிதனானவன் உடல் – உள்ளம் என்ற இரு பகுதிகளும் நெருங்கி இணைந்து செயற்படும் ஓர் உயிரியாவான்.

உடலியல் எழுச்சி மாற்றங்கள், உடலியல் நோய்கள் என்பன உளச் செயற்பாடுகளைப் பாதிக்கின்றன. உளப் பாதிப்புக்கள், உள நோய்கள் உடலைப் பாதிக்கின்றன. பல உடலியல் நோய்களுக்கு ஓயாத மனக் கவலையும், உளப் போராட்டங்களுமே அடிப்படைக் காரணங்கள் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். மனிதனது உடலையும் உள்ளத்தையும் இணைக்கும் பாலமாக மூளையும், நரம்புத் தொகுதியும் உள்ளன. இவையே உளச் செயல்களின் உடலியல் அடிப்படைகளாகவுள்ளன. இவற்றுடன் ஓமோன்களும், அகஞ்சுரக்கும் தொகுதிகளும் செயலாற்றுகின்றன.

மனிதன் சமூகச் சூழலுடன் இசைவுறுதலை (Superior Adjustment) ஏற்படுத்துவதற்கு உடலியல் நரம்புத் தொகுதி அடிப்படையாகவுள்ளது. மற்றும் கண், காது, மூக்கு, நாக்கு, தோல், தசைத் தொகுதிகள் என்பவற்றாற் கிடைக்கும் சிக்கலான தகவல்கள் மூளை – நரம்புத் தொகுதியூடாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுத் தேவையான மறுமொழிகள் வழங்கப்படும். மேற்குறித்த புலன் அங்கங்களை அறிவின் வாயில்கள் எனவும் அழைப்பர். மனித நரம்புத் தொகுதியானது;

i. மைய நரம்புத் தொகுதி (Central Nervous System): இதில் மூளை முன்னாண் அடங்கும்.

ii. வெளிநரம்புத் தொகுதி (Peripheral Nervous System): இதில் 12 சோடி நரம்புகள் மூளையுடனும், 31 சோடி நரம்புகள் முண்ணாணுடனும் இணைந்தவை. இவை தூண்டல்களைப் பெறவும், துலங்கல்களை வெளிக்காட்டவும் உதவும்.

iii. தானியங்கும் நரம்புகள் (Autono mous Nervous System):
இவை பெரும்பாலும் சுயமாகவும், சுதந்திரமாகவும் இயங்குகின்றன. மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத இதயம், நுரையீரல், குடல், சிறுநீரகம் போன்ற உள் உறுப்புக்கள் செயற்பட உதவுகின்றன.

மனிதன் சிறந்த உடல் நிலை, நரம்புத் தொகுதிகளின் சீரான இயக்கம், நல்ல சுற்றாடல் நிலைமைகள் என்பவற்றினூடாக மகிழ்ச்சிகரமான வாழ்வை ஏற்படுத்தலாம். உடல் நலம், உளநலம், மனவெழுச்சி நலம், ஆன்மீக நலம் என்பவற்றைக் கொண்ட மனிதரே; மகிழ்வான, திருப்தியான வாழ்வை மேற்கொள்ள முடியும். மற்றும் சமூகச் சூழல் – பௌதிகச் சூழல் (தூய காற்று, சுத்தமான நீர், நிலம்) முதலியனவும் மனித உடல், உள நிலைகளை விருத்தி செய்கின்றன. இவ்வாறான அடிப்படைகளினூடாக மனிதவள அபிவிருத்தியிற் பிரயோக உளவியல் கூடுதல் அக்கறை செலுத்துகின்றது. சிறந்த சமூகச் சுற்றாடற் கவி நிலைகள், சிறந்த மனவெழுச்சிகளினூடான மானிட நல்வாழ்வுக்கு வழிகாட்டும்.

மனவெழுச்சியும் உடல் ஆரோக்கியமும்

மனவெழுச்சி (Emotions) என்பது மன உணர்ச்சி மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும். எல்லா மனிதர்களும் மனவெழுச்சிகளை அனுபவிக்கின்றார்கள். மகிழ்ச்சியானதும், பெரு மகிழ்ச்சியானதும், துன்பமானதும், உடன்பாடானதும், எதிர்மறையானதுமான மனவெழுச்சிகள் மனிதனிடம் ஏற்படலாம். இவை மனிதனுடைய உடனடிப் பிரதிபலிப்புக்கள். இவை உள – சுற்றாடல் மாற்றங்களினால் ஏற்படலாம். இன்றைய இயந்திரமயமான உலகிற் பெரும்பாலான மனவெழுச்சிகள் மனித ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிப்பவையாகவுள்ளன.

குறித்த ஒரு நிகழ்வாற் கோபம் என்ற மனவெழுச்சி ஏற்படும்போது இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது. விரைவான சுவாசம், குருதி முகத்திற்குச் செல்லுவதால் முகம் சிவக்கும், குடலிற் சமிபாட்டு நிலைகள் குலையும், வியர்வை, கண்ணீர் தோன்றும், உடல் மயில்கள் கூச்செறியும், தசைகள் சுருங்கும், பேரியக்கங்கள் தோன்றும், உடற்சக்தி உயர்ந்து அடிபிடிக்கான தன்மை தோன்றும். இத்தகைய நடவடிக்கைகள் அசைவுணர்ச்சிகளைத் தூண்டி அனேக புலனனுபவங்களை ஏற்படுத்தும்.

உடல் நிலையைக் குறிப்பிட்ட நோக்கத்திற்கும், நீண்ட காலத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இரத்த அழுத்தம், மன நோய்கள் ஏற்படவும் செய்யும். மனவெழுச்சிக் கோளாறுகள், சிறு பிரச்சினைகள் தொடக்கம் நடத்தைப் பிரச்சினைகள்வரை காணப்படலாம். படுக்கையிற் சிறுநீர் கழித்தல், நகம்கடித்தல், விரல் சூப்புதல், பதகளிப்பு, நரம்புத் தளர்ச்சி என்பனவும் ஏற்படலாம். மேலும் மகிழ்ச்சியான மனவெழுச்சிகள் உடல் ஆரோக்கியத் திற்கும், நீண்ட ஆயுளுக்கும் வழிவகுக்கும்.

ஒரு பூரணமனிதனின் மனவெழுச்சித் துலங்களில் அறிவுசார் செயன்முறைகள் அடங்கி இருக்கும். உடலியல் விஞ்ஞானிகள் தன்னியக்க நரம்புத் தொகுதிகளினால் இவை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கின்றனர். பொதுவாக இவை கடும் மனவெழுச்சிச் செயற்பாடுகளுக்காக சீராக்க சமநிலைப்படுத்தும் நடவடிக்கைகளில் இயங்குகின்றன. இவ் இயக்கங் களையே சில வகையான மனவெழுச்சித் தாக்கங்கள் நிறுத்தும் அபாயங்களும் உண்டு.

இம்மனவெழுச்சி தொடர்பான பல விடயங்கள் பிணியாய்வு நிலையங்கள், மனநோய்களுக்கான வைத்தியசாலைகள், சிறைக்கூடங்கள், பாடசாலைகளில் நடைபெற்ற ஆய்வுகளில் இருந்தே பெருமளவு கிடைத்துள்ளன. மேலும் J.B. வோட்சன் (Watson) என்ற உளவியலறிஞர் மனவெழுச்சி ஆய்வுகள் தொடர்பான தனது செயற்பாட்டில் அல்பேட் என்ற ஒன்பது மாதக் குழந்தையைச் சோதனைக்கு உட்படுத்தினார். வெள்ளை

எலி, முயல், நாய், குரங்கு, முகமூடிகள், எரியும் பத்திரிகை என்பவற்றைக் குழந்தையின்முன் வைத்தார். இவையாவும் அல்பேட்டில் அச்சத்தையோ, சினத்தையோ ஏற்படுத்தவில்லை.

பரிசோதனையின் அடுத்தபடியில் நிபந்தனைப்படுத்தல் நிலையினூடு குழந்தையின்முன் எலியை வைத்தார். அது எலியைப் பிடிக்க எட்டியது. அப்போது உரத்த வெடிச்சத்தத்தை எழுப்பினார். குழந்தை முகம் குப்புற விழுந்தது. தொடர்ந்தும் குழந்தை எலியைப் பிடிக்க முற்பட்டபோது வெடிச்சத்தம் எழுப்பப்பட்டது. பின் குழந்தை இம்முயற்சியைப் பயத்தாற் கைவிட்டது. இரு கிழமைக்குப்பின் எலியைக் காட்டியபோது குழந்தை அதைப்பிடிக்க முயலவில்லை. பயத்தினால் அழத் தொடங்கியது. நிபந்தனைப்படுத்தப்பட்ட அச்சத் துலங்கல் குழந்தையிடம் ஏற்பட்டது. அச்சம், சினம், அன்பு என்பன சகல மனவெழுச்சிகளினதும் பிரதி என்ற வாட்சனின் ஆய்வுமுடிவு இன்று முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படா விட்டாலும், அவருடைய பரிசோதனைகள் மனவெழுச்சி தொடர்பான நடத்தை முறைகள், நிபந்தனைப்படுத்தல், வளர்ச்சிச் செயன் முதிர்வு என்பன தொடர்பான ஆய்வுகளுக்கு அடிப்படைகளாகின.

மேலும் தொடர்ச்சியாக மனவெழுச்சிப் பிரச்சினைகள் எழுவதற்கு மனத் தகைப்பு (Stress) ஒரு காரணமாக அமையலாம். இது தொடர்பாக உளவியலாளர் பிராடி (Brady) ஆய்வொன்றை மேற்கொண்டார். ஒரு கூட்டை இரண்டாகப் பிரித்து ஒன்றினுள் பரிசோதனைக்குரிய குரங்கையும், மற்றையதில் கட்டுப்பாட்டுக்குரிய குரங்கொன்றையும் அடைத்தார். பிரிக்கப்பட்ட இரு பகுதியிலும் ஒவ்வொரு நெம்புகோல் உள்ளன. இவ்வாறாகப் பல சோடிகள் வைக்கப்பட்டன. இரு பகுதியினருக்கும் ஒரே மின்னதிர்ச்சி கொடுக்கும்பொழுது பரிசோதனைக்குரிய பகுதியிலுள்ள நெம்புகோலை மட்டும் அழுத்துவதால் இரு பகுதிக்குமுரிய மின்னதிர்ச் சியைத் தடுக்க ஒழுங்குசெய்யப்பட்டது.

மின்னதிர்ச்சி கொடுத்த பொழுது முயன்று தவறுதல் மூலம் பரிசோதனைக்குரிய குரங்கு தனது நெம்புகோலை அழுத்தி மின்னதிர்ச்

சியை நிறுத்தக் கற்றுக்கொண்டு தொடர்ந்துவந்த மின்னதிர்ச்சிகளைத் தடுத்து நிறுத்தியது. இவ்வாறாக நாளொன்றுக்கு ஆறு மணித்தியாலம் மின்னதிர்ச்சி கொடுக்கப்பட்டது.

சில நாட்களின்பின்னர் குரங்குகளை ஆராய்ந்தபொழுது பரிசோதனைக் குரங்குகள் கடும் சுகவீனம், மனத்தகைப்பு, பயம், சில இறக்கும் நிலையிலிருந்தன. கட்டுப்பாட்டுக் குரங்குகள் சிறிய பாதிப்புக்கு உள்ளாகியிருந்தன.

பரிசோதனைக் குரங்குகள் மின்னதிர்ச்சி ஏற்படும் கணத்தில் நெம்புகோலை அழுத்திய உடன் நிறுத்துவதற்காக எப்பொழுதும் தொடர்ச்சியான விழிப்புணர்வும். ஆபத்திலிருந்து தப்ப எண்ணி நிச்சயமற்ற தன்மை, தகைப்புக்குள்ளாகியிருந்ததை உளவியலாளர்கள் கண்டுபிடித்தனர். எப்போதும் அழுத்தங்களுக்கு, தொடர்ச்சியான எதிர்மறை மனவெழுச்சித் தாக்கங்களுக்கு உட்படுவோருக்கு மனத்தகைப்பு, உளப்பிணி, நரம்பு நோய்கள் ஏற்படும்.

மனவெழுச்சிப் பிரச்சினைகளின் வகைகள்

1. கவனக்குறைவுக் கோளாறுகள்: அதியுணர்ச்சிச் செயற்பாட்டினாற் பகற்கனவு காணல், படுக்கை நகைத்தல், மறத்தல்
2. ஒழுக்கக் கோளாறுகள்: சமூக இயல்பிலிருந்து, முரண்படல், நெறி பிறழ் நடத்தைகள், களவு எடுத்தல், பொய்கூறல், பொறாண்மை.
3. பதகளிப்புக் கோளாறுகள்: மனச்சோர்வு, மனமுறிவு, வன்செயல்கள், நரம்பியல் நோய்கள்.
4. உணவு உண்ணும் பிரச்சினை: பசியின்மை, முறையான நேரத்தில் உண்ணாமை, உணவு உண்ணலில் ஒழுங்கின்மை, இதனாற் குடற் புண் நோய் ஏற்படல்.
5. விகற்பக் கோளாறுகள்: தவறான பிடிவாதம், கற்றற் குறைபாடுகள், அதி உணர்ச்சி, ஒரே இடத்தில் அதிக நேரம் இருக்காமை, நரம்புக் கோளாறுகள்.

விவகார ஆய்வு

தரம் 6இல் கற்கும் ரூபி ஏனைய மாணவிகளுடன் சேராமல் ஏகாந்த நிலையில் இருப்பதை மிகவும் விரும்பினாள். மேலும், வகுப்பறையில் நிகழும் சிறிய சிறிய சம்பவங்களிற்கூட அதைரியப்படுவாள். வாரத்தில் ஒரு நாளாவது பாடசாலைக்கு வராது வீட்டிலிருப்பாள். பாடசாலை வேலைகளில் விருப்பமின்றிக் காணப்பட்டாள்.

1. இவளுக்கு ஏற்பட்ட பிரச்சினை என்ன?
2. இப்பிரச்சினையை வகுப்பாசிரியர் எவ்வாறு தீர்க்கலாம்?
3. ரூபியின் பிரச்சினை தீர்க்கப்படாவிடின் ஏற்படும் விளைவு என்னவாக இருக்கும்.

விடைகள்

1. ரூபிக்கு மனவெழுச்சிப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.
2. அவளை வகுப்பாசிரியர் விசேடமாகக் கவனித்து இதமாகப் பேசி, பரிவு காட்டி, அடிக்கடி பங்குபற்றத்தக்க வகையிற் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், பங்கேற்று நடித்தல், பொம்மலாட்ட விளையாட்டு நிகழ்வுகளில் ஆர்வத்தை ஏற்படுத்தல், வெற்றியனுபவம் கிடைக்குமாறு செய்தல், ரூபிக்கு ஏற்ற வகுப்பறைக் கவின் நிலையை வகுப்பாசிரியர் உருவாக்கி வழிகாட்டல் சேவைமூலம் புதிய பிரவேசங்களுக்கு வழிகளை ஏற்படுத்தலாம்.

3. ரூபியின் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் தொடர்ச்சியாக மனவெழுச்சிப் பிரச்சினைகளுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்களில் நெறி பிறழ் நடத்தைகளுக்கு ரூபி உட்படலாம். நெறி பிறழ்வு என்பது நடத்தை பற்றிய பிரச்சினைகளான உருவெடுக்கும். ரூபி அசாதாரண நடத்தை களுக்கு ஆளாகி, துர்நடத்தையாக வளாகலாம். ஒரு மாணவியிடம் நெறி பிறழ்வுக்கு ஒரு காரணம் வெளிப்படையாகத் தெரிந்தாலும் பல காரணிகள் ஒன்றிணைந்து தொழிற்படுவதாலேயே இந்நிலை ஏற்படுகின்றது.

முன்னர் குறிப்பிட்ட பிரச்சினைகளும், ரூபியின் பிரச்சினையையும் ஆரம்பத்திலிருந்தே இனம்கண்டு, குறை நீக்கும் முயற்சிகளினூடாக நீக்கவேண்டும். எதிர்மறையான மனவெழுச்சிகள் பிரிந்து செல்வதற்கும், தனிமைப்படலுக்கும், கோபம், பயம், பின்வாங்கல், எதிர்ப்பு, நெறிபிறழ்வு ஆகியவற்றிற்கு இட்டுச்செல்கின்றது. உடன்பாடான மனவெழுச்சிகள் அன்பு, விட்டுக்கொடுத்தல், ஒற்றுமை, மனிதப்பண்புகள், மனநிறைவுக்கு இட்டுச்செல்லும். இது சமநிலை ஆளுமையை உருவாக்கும்.

எதிர்மறையான மனவெழுச்சிகளை நீக்கல்

சினம், அச்சம், நடுக்கம், பதகளிப்பு, வன்செயல்என்பன மனவெழுச்சியின் எதிர்மறையான பொதுப்பிரச்சினைகள், இவற்றைச் சிறுவயதிலேயே இனம்கண்டு குறைதீர்க்கும் முயற்சிகள் கையாளப் படாவிடின் பெற்றோரும், ஆசிரியரும் இப்பிரச்சினைகளை வளர்ப் போராகவே இருப்பர். இந்நிலையே எமது நாட்டில் பெரும்பாலும் நிலவு கின்றது. இப்பிரச்சினைகளைத் தீர்க்கச் சிறந்த வழிகாட்டல், ஆலோசனை முறைமைகள் உள்ளன. இவற்றைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். இன்றைய பிள்ளைகளுக்கு எதிர்மறையான மனவெழுச்சிகளை நீக்க ஏற்றுக்கொள்ளல் – மறுத்தல் – சுதந்திரம் – கட்டுப்பாடு என்பவை பற்றிய பரிமாற்றங்கள் வழிகாட்டப்படுகின்றன.



இதிலிருந்து அதிகாரம் மிக்கோர் நிலை, ஜனநாயகப் பண்புடைய இசைவான நிலைவிட்டுக் கொடுக்கும் நிலை என்ற வகையில் நோக்கும் போது;

1. மறுத்தலும் – கட்டுப்பாடு – சர்வாதிகாரத்தைக் காட்டுகின்றது
2. மறுத்தல் – சுதந்திரம் – விட்டுக்கொடுக்கும் நிலையைக் காட்டுகின்றது.

3. ஏற்றுக்கொள்ளலும் கட்டுப்பாடும் – விட்டுக்கொடுக்கும் நிலையைக் காட்டுகின்றது.
4. ஏற்றுக்கொள்ளும் சுதந்திரமும் – தனித்தன்மையான இசைவுறல் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

எதிர்மறையான மனவெழுச்சி, வன்செயல் என்பவற்றின் அடிப்படை மன முறிவேயாகும். மனமுறிவின் பிரதான துலங்கலாக வன்முறை இடம் பெறுகின்றது. சிறுவர்களுக்கு மனமுறிவை ஏற்படுத்துவனவாக; வெகுமதியின்மை, மீள வலியுறுத்தலின்மை, தாமதம், தேவைகளை உணராத தன்மைகள் உள்ளதாக உளப்பகுப்பாய்வு உளவியலாளர்கள் தெரிவிக்கின்கின்றன. அதிலும் சிக்மன் பிராய்டுக்குப் பின்வந்த எரிக் எரிக்சன் (Erik Erikson) உளப்பகுப்பாய்வு மரபுகளைப் பின்பற்றும் ஒருவர். இவர் எதிர்மறையான மனவெழுச்சிகள் தீர்க்கப்பட, பிள்ளை பிறந்ததிலிருந்து அதன் ஆளுமையும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதன் விருத்தியின் ஒரு பகுதி முதிர்ச்சியாலும், இன்னொரு பகுதி சமூகத்தினாலும் ஏற்படுகின்றது. பிள்ளைகளின் பெற்றோரும், ஆசிரியர் களும், ஏனையவர்களினூடு ஏற்படுத்தும் ஆக்கபூர்வ இடைத்தாக்கங்கள் எதிர்மறையான மனவெழுச்சிகளை அகற்றும் என்கின்றார். ஒரு பருவத்தில் அமையவேண்டிய மனவெழுச்சித்தேவைகள், விருத்திகளில் தோல்விகள், நிறைவேறாமைகள் ஏற்படுமானால் அவை எஞ்சிநின்று பிற்காலத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் எனவும் எரிக்சன் தெரிவிக்கின்றார்.

எரிக்சனினால் எடுத்துக்காட்டப்பட்ட மனவெழுச்சி விருத்தி நிலைகள்

1. பிறந்ததிலிருந்து ஒரு வயதுவரை: மன அகப் பண்புகள் விருத்தியாகும். தாய், வளர்ப்பவர்கள்மீது நம்பிக்கைகளும், நம்பிக்கையீனங்கள் போன்ற தன்மைகளும் தோன்றும் (சுதந்திரம் எதிர் வெட்கவுணர்வு).
2. இரண்டு – மூன்று வயதுவரை: நடத்தல், பிடித்தல், உடல்சார் திறன்களினூடான மனவெழுச்சிச் சுதந்திரங்களும், கட்டுப்பாடற்ற தெரிவுகளும்(கட்டுப்பாடற்ற தன்மை எதிர் ஐயம்)

3. நான்கு – ஐந்து வயதுவரை: அடிப்படை மனவெழுச்சி நடத்தைகள், முரண்பாடுகள், குற்றவுணர்வுகள் தொடர்பான மனவெழுச்சிகள் (முதிர்ச்சி எதிர் குற்றவுணர்வு)
4. ஆறு – பன்னிரெண்டு வயதுவரை: பாடசாலைக்குரிய கருவிசார் திறன்கள் உள்ளடக்கிய நியமங்கள் (திறமை எதிர் தாழ்வுணர்ச்சி)
5. பதின்மூன்று – பதினெட்டு வயதுவரை: பூப்படையும் பருவ – பாலியல்சார் மனவெழுச்சிகள் சுயவுணர்வுமூலம் இசைவாக்கம் பெறல் (இனங்காணல் எதிர்குழப்பம்)
6. பத்தொன்பது – இருப்பத்தைந்து வயதுவரை: ஒன்று அல்லது பல நெருங்கிய தொடர்புகள், கட்டிளமைப்பருவ அன்புத் தேடல்கள் (நெருக்கம் எதிர் இடைவெளி)
7. இருபத்தாறு – நாற்பது வயதுவரை: தொழில்சார் ஆக்கத் தொழிற்பாடுகள், தேக்க நிலை மனவெழுச்சிகள் (உருவாக்குதல் எதிர் தேக்க நிலை)
8. நாற்பத்தொன்றுக்குப் பிறகு : முன்னைய நிலை அடிப்படைகளுடன் ஒன்றித்தல், இழப்புக்களினாலான மனவெழுச்சி (நான் என்ற நினைப்பும் நம்பிக்கை இழத்தலும்)

இப்பருவங்களை அறிந்து மனித முரண்பட்ட, எதிர்மறையான மனவெழுச்சிகள் தீவிரமாதலினின்றும் எழும் அதிர்ச்சிகளும், உளப் போராட்டங்களும் ஒருவனது ஆளுமை வளர்ச்சிக்கு இடையூறு செய்யும் என எரிக்சன் தெரிவிக்கின்றார். மேலும் தீவிரமான சினம், அச்சம், வன்முறை மனவெழுச்சிகள், உடல் உறுப்புக்களின் தொழிற்பாடுகளைப் பாழாக்கி விடும். அந்தப் பருவங்களுக்கு ஏற்ப வழிகாட்டல், ஆலோசனைகளையும் மற்றும் இலக்கியங்கள், திரைப்படம், நாடகம், நல்ல பொழுதுபோக்கு அம்சங்களினூடாக எதிர்மறையான மனவெழுச்சியின் தாக்கங்களை நீக்கலாம்.

மனிதனிடம் பிறப்பிலிருந்தே மகிழ்ச்சி, அன்பு, அச்சம், கோபம், கவலை போன்ற மனவெழுச்சிகள் உள்ளன. இம்மனவெழுச்சிகளே இலக்கியம், திரைப்படம், நாடகம், இசை, ஓவியம் போன்ற கலைகளின் ஊற்றாக

உள்ளன. மனவெழுச்சிகள் இன்றி இவை வளர முடியாது. மானிட வாழ்வில் இவற்றின் பயன்பாடு மகத்தானது. மனிதனைத் திருப்திப்படுத்தவும், நற்செயல்களை ஊக்குவிக்கவும், திசைமுகப்படுத்தவும், சுவையூட்டவும், இரசிக்கவும், சாதனைகள் செய்யவும் உதவுகின்றன.

பேராசிரியர் சந்தானம் அவர்கள் மனஎழுச்சி, மனித வாழ்வியலில் ஊடுருவி நிற்கும் செயற்பாடு, இதனைக் குடும்பம், சுற்றாடல், சமவயதுக்குழு, சமூகத் தூண்டிகள் முறைப்படுத்துகின்றன எனத் தெரிவிக்கின்றார். பேராசிரியர் முத்துலிங்கம் மனவெழுச்சி என்பது உணர்ச்சிகளையும், உடலியல் தாக்கங்களையும் உள்ளடக்கியது. மனவெழுச்சியைத் தரும் தூண்டி உடலிலே மாற்றங்களை ஏற்படுத்தும். கோபம், பயம் ஆகிய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவோரிடம் இதனை அவதானிக்கலாம். உதாரணமாகக் கண்கள் சிவத்தல், கண்ணீர் வடித்தல், குரல் அடைத்தல், பீதியடைதல் ஆகிய உடலியல் மாற்றங்கள் , மனவெழுச்சி கொள்வோரில் ஏற்படுகின்றது. மேலும் கை, கால் போன்ற உறுப்புக்களை நோக்கிக் குருதி விரைவாக ஓடுதல், உமிழ் நீர் – ஓடுதல், உமிழ்நீர் வற்றுதல், சமிபாடு மந்தமாதல் ஆகிய உள்ளார்ந்த மாற்றங்கள் ஏற்படுவதையும் எடுத்துரைக்கின்றார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வி உளவியற்றுறை பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா மனவெழுச்சி தொடர்பான ஆழ்ந்த ஆய்வை மேற்கொண்டு உளவியல் மனவெழுச்சி இயங்கிய (Emodalities, Theory) கோட்பாட்டைக் கண்டுபிடித்துள்ளார். இவர் மன வெழுச்சி என்பது மனிதர்களிடமிருந்து பல்வேறு விதமாக வெளிப்படுகின்றது. அசைவு, பேச்சு, உடலியக்கம், துலங்கல் போன்ற பல பரிமாணங்களுடன் இது தொடர்புடைய கோலங்களாகவுள்ளது. மனிதர்கள் உடல் நலம் குன்றிய வேளைகளிலும், வீட்டில் பாடசாலையில் கூடுதல் அடக்குமுறைகள் உள்ளபோதும் எதிர்மறையான கோப மனவெழுச்சிகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றார். கோபம், பயம், பதகளிப்பு என்பன ஆதரவு இழத்தல், தாய்தந்தை இறப்பு, யுத்தசூழல், அகதிமுகாம் வாழ்வு, பதட்டமான சூழல் என்பவற்றால் ஏற்பட்டு ஆளுமையைப் பலமாகப் பாதிக்கின்றது எனவும் தெரிவிக்கின்றார்.

மனவெழுச்சிகள் வாழ்க்கையுடனும், கற்றலுடனும் எவ்வாறு தொடர்புகொண்டவை? மனவெழுச்சி முதிர்ச்சிபெற்றுள்ள ஒருவரிடம் காணப்படும் முக்கிய பண்புகள் எவையாக இருக்கும்?

ஒருவன் தன் வாழ்க்கையில் அடையும் வெற்றிக்கு அவனது அறிவாற்றல் எவ்வளவு முக்கியமோ அதே அளவு அவனது மனவெழுச்சி முதிர்ச்சியும் முக்கியமானது. மனிதர்களது செயல்களை ஊக்குவித்துத் திசைப் படுத்துபவை பெரும்பாலும் மனவெழுச்சியாகவுள்ளன. இன்பமும், மகிழ்ச்சியும் அளிக்கவல்ல செயல்களைச் செய்யத் துடிப்பதும், அச்சம், சினம் போன்ற எதிர்மறை மனவெழுச்சிகளைத் தோற்றுவிக்கவல்ல செயல்களைத் தவிர்ப்பது மனித இயல்பாகின்றது. பரிவு, அன்பு, பாசம் போன்ற மனவெழுச்சிகள் மனிதவாழ்வுக்கும், சமூக நல்வாழ்வுக்கும் அடிப்படையாக வுள்ளன. இவ்வாறே கற்றலுடனும் மனவெழுச்சிகள் மனிதவாழ்வுக்கும், சமூக நல்வாழ்வுக்கும் அடிப்படையாகவுள்ளன. இவ்வாறே கற்றலுடனும் மனவெழுச்சிகள் தொடர்புடையவை.

ஆசிரிய – மாணவர்கள் தொடர்பு, அன்பு, பரிவு, மதிப்பு ஆகியவற்றினின்று எழும்போது மகிழ்ச்சிகரமான கற்றற் சூழ்நிலை நிலவும், அச்சம், சினம் என்பவை கற்றலைத் தடைசெய்யும் அத்துடன் ஒழுங்கு – ஒழுக்கப் பிரச்சினைகளும் ஏற்படும் என்பதைப் பிரயோக உளவியலறிஞர்கள் நவீன பிரயோக உளவியல் ஆய்வுகளினூடு தெரிவிக்கின்றனர். தங்களது தீவிர மனவெழுச்சிகளை அடக்கிக்கொள்ளவும், மனவெழுச்சி முதிர்ச்சி பெற்றுச் செயலாற்றவுமான பயிற்சியை மாணவர்களுக்கு வழங்குதல் பாடசாலைக் கல்வியின் நோக்கமாக உள்ளது. குமரப் பருவத்தில் மனவெழுச்சி முதிர்ச்சி நிறைவுபெற்று முதிர்பருவம் தொடர்கின்றது. மனவெழுச்சி முதிர்ச்சி பெற்றுள்ள ஒருவரிடம் காணப்படும் முக்கிய பண்புகள் பின்வருவனவாக வுள்ளன.

1. தனது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் ஆற்றல்
2. மனமுறிவுகளைத் தாங்கிக்கொள்ளும் சக்தி அதிக அளவிற் காணப்படும். நெருக்கடி நிலைமைகளிற் பதட்டமடையாமல் நிதானத் துடன் செயற்படல்.

3. தன் நிலைபற்றிப் பரிதாபம் கொள்ளமாட்டான். வீணான கவலைகள், அச்சங்கள் இருக்காது.

4. தன்னைப் பற்றிய உண்மை நிலைக்கு ஏற்ற தற்கருத்தைப் பெற்றிருத்தல்.

5. தனது மனவெழுச்சியைத் தூய்மைசெய்து, தனக்கும், தான் வாழும் சமுதாயத்திற்கும் பயன்மிக்க வகையில் வெளிப்படுத்துவான்.

இம்மனவெழுச்சி முதிர்ச்சி சமூக முதிர்ச்சியுடனும் இணைந்ததாகும்.

விவகார ஆய்வு

சிரித்த முகத்துடன் ஆசிரியையிடம் வந்த ராணி: "என்னால் நம்ப முடியவில்லை மேடம்: நீங்கள் என்னை எவ்வாறு இவ்வளவு பிழையின்றிப் புரிந்து கொண்டீர்கள் என்று? வகுப்பில் நீங்கள் கற்பிக்கும்போது எங்கள் மனதுடன் பேசுவதுபோல் இருக்கும். உண்மையில் எனது பிரச்சினையை எனது வகுப்பாசிரியருக்குக்கூட நான் கூறவில்லை. நான் இருந்த நிலையிலிருந்து என்னைக் காப்பாற்றியதற்கு மிக்க நன்றிகள்" என்றாள்.

1. மேற்படி மாணவி துலங்கலைக் காட்டும்போது பிரயோக உளவியல் தெரிந்த ஆசிரியர் என்ற வகையில் நீர் வெளிப்படுத்தும், உம்மிடமுள்ள பண்புகள் எவையாக இருக்கும்?
.....சிரித்த முகம் ..... புரிந்துணர்வு, நம்பகம், ஒட்டுணர்வு, இரகசியம் பேணல், சிநேகிதம், செவிமடுத்தல், ஏற்றுக்கொள்ளல்.

2. இவ்வாறான ஆசிரியரிடம் இருக்கவேண்டிய தன்மைகள் எவை?

மாணவரிடம் இருந்து பரிசு - வெகுமதிகளைப் பெறக்கூடாது. மாணவியின் சுயகௌரவத்தைப் பாதுகாத்தல், இரகசியம் பேணல், பொறுப்பானவராக, வகை கூறக்கூடியவராக, உளவியல் நுட்ப முறைகளைப் பிரயோகிக்கும் நுட்பங்கள் கொண்டவராக இருக்க வேண்டும்.

அறிவுசார் விருத்தி

மனிதன் பிறந்ததிலிருந்து உடல்வளர்ச்சியுடன் உள விருத்தியும் ஏற்படுகின்றது. இதனால் அறிவுசார் விருத்திகளான; நுண்ணறிவு, ஞாபகம், சிந்தனை, எண்ணக்கருவாக்கம், பிரச்சினை தீர்த்தல், அழகியல் விருத்தி, என்பவற்றில் அபிவிருத்தி எழுகின்றது. இதனூடு, உளம் வளர்ச்சி பெறுகின்றது. இவ்வகையில் மனிதனிடம் அறிவுசார் விருத்தியும், உடல் வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும், உளஅபிவிருத்தியும், ஒரே அடிப்படைகளிற் பல்வேறு பிரமாணங்களில் நடைபெறுகின்றன. அறிவுசார் தொழிற்பாட்டுச் செயன்முறைகள் மனித வாழ்வுக்கும், கற்றலுக்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாதவை. இத் தொழிற்பாடுகளை உளவியலறிஞர்களான ஜீன் பியாஜே (Jean Piaget), புரூணர் (Bruner) தெரியப்படுத்தியுள்ளனர்.

ஜீன் பியாஜேயின் அறிவுசார் விருத்திக் கொள்கை

சுவிஸ்சலாந்து நாட்டைச் சேர்ந்த மருத்துவரான பியாஜே (1896 – 1960) அபிவிருத்திசார் உளவியல் அணுகு முறையில், மனநல (Clinical method) ஆய்வு முறையில் தனது மகள், மகன் மற்றையோரின் அறிக்கை அபிவிருத்தி தொடர்பான ஆய்வை மேற்கொண்டார். பிரச்சினை ஒன்றிலே பிள்ளையை ஈடுபடச்செய்து, பிள்ளையின் செயல் விளைவுகளுக்குப் பின்னணியாக அமையும் சிந்தனை முறைகளையும், உள அமைப்பையும் ஆராய்ந்த பியாஜே; உற்றுநோக்கல், பௌதிக நடப்பு நிலைகள், சுற்றாடல், கணித, மொழி முதலிய புலங்களிற் பிள்ளைகள் எவ்வாறு காட்சிகளை உருவாக்குகின்றார்கள் என்பதையும் எடுத்துக்காட்டினார். இதில்; அகத்தை மதித்தியமாகக் கொண்ட இயல்பு, பின் திரும்பும் இயல்பு, நடுநாயகப்படுத்தும் இயல்பு, காரணங்களை இடம் மாற்றித் தொகுக்கும் இயல்புகள் தெரிவிக்கப் படுகின்றன. இவை பின்வரும் மூன்று அம்சங்களினூடு நிகழ்வதாகவும் பியாஜே இயம்புகின்றார்.

1. பிறப்பிலிருந்து சில இயல்புகள் மாறாதவையாக, அல்லது

தொடர்ச்சியாக எல்லா வயது நிலைகளுக்கும் பொதுவானவையாக இருக்கும். இதனால் அறிவுசார் விருத்தியில் மாற்றம் ஏற்படும்.

2. குறிக்கப்பட்ட வயது மட்டங்களிற் சூழலுடன் இடைத்தாக்கம் பெறுவதற்குப் பிள்ளைகளுக்குக் கிடைக்கும் உத்திகள்.
3. வேறுபட்ட வயது மட்டங்களில் அறிவுசார் அமைப்பின் பண்புகளைப் பகுத்தாராய்தல்.

சூழலோடு இடைவினை கொள்வதால் அறிவு மேம்பாடடைகின்றது. புதிய சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகளைப் பிள்ளைகள் எதிர்கொள்ளும்போது உளச் சமநிலையாக்கம் நிகழ்கின்றது. இச் சமநிலையை ஏற்படுத்தும் காரணிகளைப் பியாஜே தழுவல் (Adaptation), ஒழுங்கமைப்பு (Organization) எனத் தெரிவிக்கின்றார். இங்கு தழுவல் இரு வகைகளில் நிகழுகின்றது. ஒன்று தன்மையாக்கல் (Assimilation), மற்றையது தன்னமைவாக்கம் (Accommodation) ஏற்கனவே உள்ள உள அமைப்பை மாற்றாது அனுபவங்களை உள்வாங்குதல் தன்வயமாக்கல் என்னும் புதிய அனுபவங்களை உட்கொள்ளமுடியாத நிலையில் முன்னர் உருவாகிய உள அமைப்பை மாற்றியமைத்து புதிய அனுபவங்களை உள்வாங்குதல் தன்னமைவாக்கம் எனப்படுகின்றது.

இவற்றின் வழியாக விளக்கமுறை அறிகை அமைப்பாக்கம் ஒன்று ஏற்படுகின்றது. ஓர் உயிரி சூழலுடன் தழுவி இசைவாக்கம் கொள்வது போன்று, அறிவு – அனுபவச் சூழலுடன் பிள்ளைகள் இடைவினை கொள்ளும்போது உளஅமைப்பு அல்லது அனுபவ உளத்திரளமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படுகின்றது. இதனை பியாஜே "சீமா" (Schema) என்கின்றார். இத்திரளமைப்பு மாற்றமடைந்துகொண்டிருக்கும். தன்னமைவாக்கலின் போது ஒருவன், முயற்சித்தல், பரிசோதனைசெய்தல், முயன்று தவறல், வினாவுதல், பிரச்சினை தீர்த்தல், போன்ற தொழிற்பாடுகளைக் கையாண்டு தனது அனுபவத் திரளமைப்புக்களைப் பெறுகின்றான். தன் மயமாக்கலின் போது அவன் தன்னிடமுள்ள அனுபவத் திரளமைப்புக்களைப் புதிய நிலைமைகளிற் பிரயோகித்துப் புதிய அனுபவங்களைச் சேர்க்கின்றான். சிக்கலான சூழலில் வாழக்கூடிய திறன் இதனால் ஏற்படுகின்றது.

திரளமைப்புப் பற்றிப் பாட்லெட்: இது பழைய அனுபவங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு. ஒரு நேரத்திற் கொள்ளும் தூண்டற்பேறு அதனுடன் இணைந்த காலத்தில் வேறு தூண்டற் பேறுகளுடன் இணைந்து ஒரு கூட்டாகி நடத்தையில் ஒழுங்கை ஏற்படுத்துகின்றது.

திரளமைப்புப் பற்றி சொக்கொலோவ்: ஒருவன் பெறும் அனுபவங்களினூடு மூளையின் கலங்கள் கொண்ட ஒருமைப்பாடான தொழிற்பாட்டின் வடிவமைப்பே திரளமைப்பாகும்.

திரளமைப்புப் பற்றி பாவ்லோவ்: பலவகைத் தூண்டிகள் வெளியுலகம், உளம் ஆகியவற்றிலிருந்து மூளையை அடைந்து தாக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டு இயக்கம்சார் எண்ணங்கள் (Dynamic stereotype) ஆகின்றன. இதுவே திரளமைப்பாகும்.

பியாஜே அறிவுசார் விருத்திற் சமநிலை, சமநிலையின்மை , தழுவல், ஒழுங்கமைப்பு என்பன தன்னைத்தானே திருத்தும், முறைமைப்படுத்தும் தன்மைகள் என்கின்றார். இங்கு ஒழுங்கமைத்தலானது அனுபவங்களை ஒழுங்காக்கித்தான் அதற்கிணங்க வெற்றிகரமாகச் செயற்படுவதைக் குறிக்கின்றது. இவையனைத்தும் அறிவுசார் வளர்ச்சிக்கான ஊக்கலைப் பிறப்பிக்கின்றன எனத் தெரிவிக்கும் பியாஜே அறிவுசார் விருத்தியினை நான்கு பருவங்களாக வகுத்துள்ளார்.

1. புலன் இயக்கப் பருவம் (Sencory Motor Stage)
2. முன் தூல சிந்தனைப் பருவம் (Pre operational Stage)
3. தூல சிந்தனைப்பருவம் (Concrete Operation Stage)
4. நியாம சிந்தனைப் பருவம் (Formal Operation Stage)

1. புலன் இயக்கப்பருவம்: (பிறப்பிலிருந்து இரண்டு வயதுவரை)

பிள்ளைகள் பிறந்த உடனேயே தெரிந்துகொள்ளக்கூடிய வெளிப் படையான செயல்களைச் செய்கின்றனர். இவை பார்த்தல், தமது விரல் களைச் சூப்புதல், இறுக்கப்பிடித்துக்கொள்ளல் போன்ற புலனியக்கச்

செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. பிறப்பிலிருந்து இப்புலனியக்கத் திரளமைப்புக்கள் ஒருங்கிணைந்து விரிவடைவதாலேயே பிள்ளைகளின் 15 – 24 மாதகால நுண்ணறிவு விருத்தி ஏற்படுகின்றது.

2. முன்தூல சிந்தனைப் பருவம் –
(இரண்டு வயதிலிருந்து ஏழு வயது வரை)

இது மேலும் இரு பிரிவுகளாக; 2 – 4 வயதுவரையுள்ள பருவம் உள்ளுணர்வு எண்ணக்கருவுக்கு முற்பட்ட பருவம் எனப்படுகின்றது. இதிற் பிள்ளைக்குக் குறியீட்டு ஆற்றல் உண்டாகும். இதனைப் பியாஜே பாவனைப் பருவம் எனவும் அழைப்பார். அதாவது ஒரு பொருள் இன்னொன்றின் இடத்தில் இருத்தல் மரத்துண்டை சவர்க்காரமாகப் பாவித்தல். மற்றையது 5–7 வயது வரையுள்ள அகச் சிந்தனைப்பருவம் இதிற் பாவனை செய்தல், குறியீட்டு விளையாட்டு வரைபு, பேச்சு என்பவற்றை மையமாக வைத்து, செயல்கள் இயக்க ஞாபகத்தை (Motor Memory) வெளிப்படுத்துகின்றன. இதனூடு சூழலை அறிவுசார் முறையில் உளச் செயற்பாடுகளைப் பயன்படுத்திப் பிள்ளை புரிந்துகொள்ள முயலும், எண், கனவளவு, காலம் தொடர்பான எண்ணக்கருக்களை முழுமையாகப் புரியாத நிலையும் காணப்படும்.

3. தூல சிந்தனைப் பருவம் –(7–12 வயதுவரை)

காலம், கனவளவு, எண்ணிக்கை, நிரற்படுத்தல் ஒழுக்க விதிகள், என்பவை விமர்சன முறையில் விளக்கம்பெறும். சிக்கலான தொடர்புகளை விளங்கிக்கொள்வர். புலக்காட்சி அனுபவங்களுக்கு அப்பாலுள்ள தொடர்புகள் செயற்பாடுகள் பற்றிய புதிய சிந்தனைகள் வளரும். பொதுமைப்படுத்தல், பின்திரும்பல் மாறாதிருத்தல், கருத்து நிலையில் உளத்தினூடு சிந்தித்துச் செயலாற்றும் திறன்கள் இப்பருவத்தில் வளரும்.

4. நியம சிந்தனைப் பருவம் (12 வயதின் மேல்)

இப்பருவத்தில் பிள்ளை புலக்காட்சியுடனும், உண்மையுடனுமே தனது கவனத்தைச் செலுத்தும். விஞ்ஞான ரீதியான முறைமையில் முடிவுகள்

எடுத்தல் விதிமுறைகளுக்கு இணங்குதல், விதிகளை ஆக்குதல், நியாயம் காணல் என்பவற்றை சமூக வாழ்வு, கலந்துரையாடல்கள்மூலம் விளங்கிக் கொள்ளும் ஆவல்களும் இப்பருவத்தில் ஏற்படும்.

இன்றைய நவீன உளவியல் ஆய்வு நூட்பங்களின் உதவியுடன் குழந்தை உளவியல் பற்றி பியாஜே கூறிய பெரும்பாலான கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றனர். எனினும், புலன்களின் இயக்கத் தகவல்களைக் களஞ்சியப்படுத்தல், ஞாபகத்திலிருத்தல், ஒழுங்காக்கல் போன்ற முக்கிய விடயங்களிற் பியாஜே குறைந்த மதிப்புக் கொடுத்தமை மற்றும் இவர் தெரிவித்த பருவங்களுக்கு முன்னரே இன்றைய பிள்ளைகள் அவர் தெரிவித்த அனுபவங்களை வெளிக்காட்டுகின்றனர் போன்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன.

எனினும், குழந்தையின் செயல்களின் தன்மையினையும், திறன்களையும் கட்டுபிடித்த மகிமை பியாஜேயையே சாரும். அத்துடன் குழந்தை இவற்றை முயன்று தவறுதல், திரும்பத் திரும்பச்செய்தல், பின்பற்றல், வேறு குறியீட்டு முறைகள்மூலம் தன்னமைவாக்கிக் கொள்ளும் தன்மையினைக் கண்டுபிடித்த பெருமை அவரையே சாரும். சிறுவர்களுக்குரிய கற்பித்தலியல், பாடசாலைக் கலைத்திட்டம் முதலிய துறைகளில் ஒரு புதிய கண்ணோட்டத்தைப் பியாஜே உருவாக்கினார். சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், கற்றல் முறைகள், ஆக்கங்கள் முதலியவை ஆக்குவதில் மிகுந்த பங்களிப்பை பியாஜேயின் கருத்துக்கள் செயற்படுத்தியுள்ளன.

சூழலுக்குரிய தழுவலை மேற்கொள்ளும் பொருட்டு மாணவர் தாமே சுய ஊக்கம் கொள்ளவும், அறிவு வடிவமைக்கப்பட்டதாய் இருப்பதற்கும், அனுபவங்களைக் கட்டியெழுப்பவும், கற்றலிற் பிஜாயேயின் கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மேலும் கற்றல் என்பது அறிகை அமைப்பின் வளர்ச்சி மேம்பாடாகும். இது மாணவர்களை அடியொற்றிக் கற்றல் தொடர்ச்சிகள் அமைக்கப்பெறுதல் வேண்டுமேயன்றி, பாடங்களின் உள்ளடக்கத்திற்கு ஏற்றவாறு கற்றல் தொடர்ச்சிகள் அமைக்கப்படலாகாது என்ற பியாஜேயின் கருத்துக்கள் மிகவும் உயிர்ப்பானவையாக உள்ளன.

ஜெரோம் புரூனரின் அறிவு வளர்ச்சிக் கொள்கை

அறிகை உளவியல், குழந்தை உளவியற்றுறைகளிற் சிறப்பார்ந்த ஆய்வுகளைச் செய்த புரூனர், அமெரிக்க நியூயோர்க் நகரில் 1915 ஆம் ஆண்டில் பிறந்தார். 1941 இல், ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் உளவியல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். மனிதன் அறிவியல் தேர்ச்சிபெற்று அதனைப் பயன்படுத்தும் திறனை அதிகரித்துக்கொள்வதே அறிவு வளர்ச்சி என்கின்றார் புரூனர். இதற்கு உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் உந்து தல்கள் அவசியம் என்பதையும் தெரிவிக்கின்றார். அறிவுசார் விருத்தியிற் பின்வரும் இரு விடயங்களைப் புரூனர் முன்வைக்கின்றார்.

1. வளரும் பிள்ளை தனது உலக அனுபவங்களை ஏற்றுத் தனக்குள் தொடர்புறுவதுடன் சம்பந்தப்பட்டது.
2. அறிவு வளர்ச்சி பிள்ளையின் செயற்பாட்டுடன்; வெளி – உள் தாக்கங்களுடன் அதன் கலாசாரம் – மொழி எண்ணக்கருக்களுடன் வளர்ச்சியடைகின்றது.

மனதில் ஏற்படும் எந்தவகையான அறிவு வளர்ச்சியும் அவன் தன்னைப் புதிய தொகுதிகளுடன் இணைப்பதனாலேயே ஏற்படுகின்றது. இவர் பிள்ளைகளின் அறிக்கையை மூன்றுபடி நிலைகளின் வழியாக விளக்கு கின்றார்.

1. செயல் நிலைப் (Inactive) படி நிலை
2. உளப்படிம வடிவ அல்லது சாயல் நிலைப் (Iconic) படிநிலை
3. குறியீட்டு வடிவப் (Symbolic) படி நிலை

செயல்நிலைப்படிநிலை

குழந்தை உள இயக்கத்தின்மூலம் சூழலின் இயல்புகளைப் புரிந்து கொள்கின்றது. தொழிற்பாடுகளின் வழியாக (உதாரணம்: முச்சக்கர வண்டியை ஓட்டுதல்) அதனை உருட்டியும், தள்ளியும் உடலும் உள்ளமும் சேர்ந்து இயங்குகின்ற நிலையில் முச்சக்கர வண்டியை விளங்கிக் கொள்ளல் சூழலில் உள்ள பொருட்கள்மூலமும் சூழலை விளங்கிக் கொள்ளல்.

சாயல் அல்லது உளப் படிநிலை

செயல் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு பிள்ளை சூழலிலுள்ள பொருட்களின் உளச் சித்திரத்தை அமைக்கக்கூடியவனாகின்றான். முச்சக்கர வண்டி இல்லாதபொழுது அதனைப் பற்றிய படத்தை மன வடிவமாக உருவாக்கும் நிலையை இது குறிக்கின்றது. இத்தகுபடி நிலையிற் சாயலைப் பற்றி மட்டுமே சிந்திக்கும். இதன்படி தன் உள்ளத்தில் பதியவைத்ததை வெளி உலகில் காணும் ஒன்றுடன் இணைத்துக்கொள்ள முனையும் செயல் நிலையையும், சாயல் நிலையையும் ஒருங்கே செயற்படும்போது பொருட்களின் ஞாபகம், தசைகளின் களஞ்சியப்படுத்தல், மட்டுமன்றி வெளி உலக ஒழுங்கினை ஞாபகப்படுத்துகையில்; நிறக் கோலங்கள், அசைவுகள் போன்ற விபரங்கள் இடம்பெறுவதாகப் புரூனர் தெரிவிக்கின்றார்.

குறியீட்டு வடிவப் படிநிலை

முன்னைய படிநிலைகளின் வளர்ச்சியாக மொழி, கருவிகளை உபயோகித்தல்போன்ற நடத்தைகள், திறன்கள், அனுபவங்களைக் குறியீட்டு வடிவினூடு ஒழுங்காக்கும் நிலைக்கு இட்டுச்செல்கின்றது. முன்னர் உபயோகித்த முச்சக்கர வண்டியைப் பிள்ளை குறியீடுமூலமும், படமூலமும், எழுத்துமூலம் காட்டும் நிலையாக இருக்கின்றது.

புரூனர் கற்றல் அபிவிருத்தி தொடர்பாகக் கற்பதற்கான உளநிலையையும், விளக்கத்தையும், கற்பவர் ஈடுபடக்கூடிய வகையிற் படிநிலை வரிசைக் கிரமப்படுத்தி, மீளவலியுறுத்தல்களைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையில்; எந்தப் பாடத்தையும், எத்தகைய விருத்திப் படிநிலைகளிலும் அறிவுசார் நேர்மை அமைப்பிற் கற்பிக்கலாம். இவரது இக் கருத்தியல் நடைமுறைக் கல்விக் கலைத்திட்ட அமைப்பாக்கத்திற்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. நவீன கல்விக் கலைத்திட்ட வடிவத்திற்கு உதாரணமான சுழல் ஏணிக் கலைத்திட்டம் (The Spiral Curriculum) மாணவர் தம் அறிகை விருத்திக்கு ஏற்றவாறு எண்ணக்கருக்களைப் படிப்படியாக, விரிவாக அறிந்துகொள்வதற்குரிய வாய்ப்பை இக் கலைத்திட்டம்கொடுக்கின்றது.

மேலும் புரூணரின் அறிவுறுத்தல் கொள்கையில், கற்போனின் கற்பதற்கான ஆயத்த நிலையின், முக்கியத்துவம், அறிவுத் தொகுதியின் அமைப்பு, பயனுள்ள ஒழுங்கமைப்பு, மீள வலியுறுத்தலின் தன்மையும் பின்னூட்டலும் முக்கியம் பெறுகின்றது.

அறிக்கை விருத்தியில் எண்ணக்கருவாக்க விருத்தியின் அமைப்புப் பற்றி பியாஜே வலியுறுத்தினார். மேலும் எண்ணக்கரு உருவாக்கத்தில் பிள்ளையின் மாறும் தன்மை கொண்ட ஆற்றல்கள், உளச் செயல்களையும் எடுத்தியம்பினார். புரூணர் எண்ணக்கரு உருவாக்கத்திற்குத் தேவையான உளச் செயல்களைக் கவனத்தில் கொண்டார். மொழி – கலாசாரத்தின் செல்வாக்கையும் புரூணர் எடுத்தியம்பினார்.

இங்கு எண்ணக்கரு என்பது சொற்கள் அல்லது குறியீட்டின்மூலம் பொருளை அல்லது நிகழ்ச்சியை உள்ளத்தில் பதித்துக் கொள்ளுதல் எனப்படுகின்றது. எண்ணக்கரு அடைவு என்பது, பிரித்தறிதல், வேறு படுத்தல், பொதுமைப்படுத்தல் என்பவை தொடர்பான ஆற்றல்களைக் குறிக்கும். இது வயதிற்கு ஏற்ப அதிகரிக்கும். மேலும் எண்ணக்கருவாக்கம் என்பது ஒருவன் சூழலுடன் இடைத்தாக்கம் பெற்றுப் பொருக்கருத்தினை விருத்தியாக்கிக்கொள்ளும் செயல் முறையாகவுள்ளது. இது முன் கூறிய எண்ணக்கரு அடைவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

குழந்தை பிறந்து சில நாட்களிலேயே ஓர் ஒளிக்கற்றையைப் பின் தொடர்ந்து பார்க்கமுடியும். அதிலும் முக்கியமாகத் தம் தாய்மாரின் பார்வையைப் பின்தொடர்ந்து பார்க்கமுடியும். இதனை அவர் பங்கேற்கும் உத்தேசங்கள் என அழைக்கின்றார். இதிலிருந்து மிக மிக ஆரம்ப காலத்திலிருந்தே பிள்ளைகள் ஏனையோருடன் கற்றல் அனுபவங்களைப் "பங்கேற்பதற்கு" ஆயத்தமாக உள்ளனர் என்பதை அறியலாம். தம்மைச் சுற்றியுள்ள திகைக்க வைக்கும் உலகத்தை விளங்கிக்கொள்வதில் தங்கள்மீது கவனம் செலுத்துவோருடன் பங்குகொள்வதன் தேவையை அடிப்படையாகக் கொண்டவையாகச் சகல குழந்தைகளினதும் மொழி முயற்சிகள் அமைந்துள்ளதாக புறூணர் தெரிவிக்கின்றார்.



குழந்தைகள் ஒரு
வெளிச்சத்தைக்
கண்டு அதனைப்
பின்தொடருகிறார்கள்.

தமது தாயின்
பார்வையைப்
பின்தொடர்கிறார்கள்

குழந்தைகள் வயது
வந்தவர்களுடன்
தம் விருப்பங்களைப்
பகிர்ந்துகொள்கிறார்கள்.

அவர்கள் சில
பெயர்களைக்
கற்கிறார்கள்

அவர்கள் அப்பெயர்களைக்
கூறுகிறார்கள்.

மேலும் உளத் தொடர்பாடல் இல்லை என்றால் மனிதனுக்கு இலக்கியம் நயத்தல் என்பவையே இல்லை. வாசகரின் சிந்தனையைத் தூண்டுவதே இலக்கியம். இலக்கியமானது வாழ்வில் மலர்வது, வாழ்வால் வளர்க்கப் படுவது; வாழ்வை மலர்விப்பது, எழுத்தாளன் தான் அனுபவித்ததைப் பிறர் அனுபவிக்குமாறு உணர்த்துதல் இல்லையேல் அது இலக்கியமில்லை. மனவெழுச்சி, உணர்ச்சி, கற்பனை, கருத்து, வடிவம் ஆகிய கூறுகள் உள நோக்கை அடிப்படையாகக் கொண்டே இலக்கியங்கள் ஆக்கப்படுகின்றன. இவை மொழியியலின் உயர் பெறுமானங்களாகவும் உள்ளன. இதற்கு உளவியற் பரிமாணங்கள், அனுபவங்கள், சூழல், தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

விக்கொற்ஸ்கியின் (Vygotsky) அறிக்கைசார் மொழிக்கொள்கை

விக்கொற்ஸ்கி ஒரு ரஷ்ய நாட்டு உளவியல் மொழி அறிஞர் ஆவார். அறிகை செயன்முறை வளர்ச்சியினூடு மொழி, சிந்தனையுடன் எவ்வாறு

தொடர்புடையது என்பதையும், மொழி, சமூக இடைத்தாக்கங்களுடன் எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதைக் காட்டுதல் தொடர்பான பல உளவியல் ஆய்வுகளை, தனது மகள் மற்றும் குழந்தைகள், பிள்ளைகளிடம் மேற்கொண்டார்.

இதிற் பல நிறங்களைக்கொண்ட கற்களை வேறுபடுத்தி வைக்குமாறு பிள்ளைகளை விக்கொற்ஸ்கி கேட்டிருந்தார். பிள்ளைகள் அவ்வாறு கற்களை அவ் வேலை தொடர்பாகத் தமக்கும் தாமே பேசிக் கொண்டிருந் தமையை அவதானித்தார். இதனையே "தன்னமையப் பேச்சு" (Egocentric talk) தமக்குத்தாமே பேசிக்கொள்ளுதல் என அழைத்தார். பிள்ளைகள் வளரும்போது தமக்குத் தாமே பேசுவதை நிறுத்திக்கொள்கின்றனர் என்றும் சொற்கள் பிள்ளைகளினால் உள்மயமாக்கப்படுவதே "சிந்தனை" என்னும் விகொற்ஸ்கி ஆய்வினூடு தெரிவித்துச் சிந்திப்பதற்கு மொழி மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தினார்.

மேலும், தனது ஆய்விற் பிள்ளைகள் ஒன்றாக வேலை செய்யும்போது பிள்ளைகளிடத்தே காணப்படும் இன்னோர் அம்சமான ஒவ்வொருவரும் தனித்தனியாகச் செய்யமுடியாத வேலையை, ஒன்றாகச் சேர்ந்து செய்து முடிக்கக்கூடியதாக இருப்பதே அதுவாகும். பிள்ளைகள் ஏனையோருடன் சேர்ந்து இன்று செய்யும் வேலையை நாளை தாமே தனியாகச் செய்வர். இவ்வாறு குழு வேலையிற் பிள்ளைகள் ஈடுபடுவதாற் சில பிள்ளைகள் ஏனையோரைவிட விரைவாகச் செய்வதோடு, அக்குழுவில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் அவ்விடயம் பற்றிக் கற்பதற்கான ஆற்றலை உயர்த்து வதற்கு உதவுவார்கள். இது ஆசிரியருக்குத் தன் கற்பித்தற் பணியில் வினைத்திறனை அதிகரிக்க உதவும். மேலும், "இன்று நான் ஏனையவர் களுடன் செய்வதையே நாளை தனியாக என்னாற் செய்யமுடியும்" எனும் பிள்ளைகளின் செயற்பாடுகள் உள்ளத்தைத் தனது ஆய்வுகள்மூலம் விகொற்ஸ்கி நிரூபித்துள்ளார்.

தாய்மொழியின் முக்கியத்துவம்

உள அறிவுசார் விருத்தியில் நுன்மதியில் தாய்மொழி முக்கிய இடம்பெறுகின்றது. பிரபோக உளவியலறிஞர்கள் அனைவரும் தாய்

மொழியின் முக்கியத்துவத்தை இயம்பி நிற்கின்றனர். எண்ணக்கருவாக்கத் தினூடாக ஒருவனுடைய தாய்மொழித்திறன் எவ்வளவுக்கு உள்ளதோ அவ்வளவுக்கு அவன் சூழலுக்கு ஏற்பப் பொருத்தப்பாடு உடையவனாக இருப்பான். சமூகத்தில் நடைபெறும் பல அடிப்படை இடைவினைகளுக்குத் தாய்மொழி இன்றியமையாதது. வீட்டிலும், பாடசாலையிலும், சமூகத்திலும், வேலைத் தளத்திலும் கருத்துக்களைப் பரிமாற, மனித நடத்தைகளைப் புரிந்துகொள்ள மொழி உதவுகின்றது. வகுப்பறையில் ஆசிரியர் , மாணவர் தொடர்பாடலுக்கும் மொழி இன்றியமையாதது. அறிகை மேம்பாட்டிற்கும் சிந்தனைக்கும், அபிவிருத்திக்கும், ஆக்கத்திற்கும், தாய்மொழி மிக இன்றியமையாத கூறாகவுள்ளதையும் அறிகைசார் விருத்தி உளவிய லாளர்கள் இயம்பி நிற்கின்றனர்.

மொழி கற்றல் பற்றிய பிரயோக ஆய்வு: உள மொழியியல் (Psycholinguistics) மற்றும் கலாசார, சமூக மொழியியல் (Socio-linguistics) என்ற பிரயோக உளவியலறிஞர் நோம் சொம்ஸ்கி (Noam Chomsky-1968) உலகம் முழுவதிலும் வாழும் பிள்ளைகள் தம் மொழியறிவை ஒரே மாதிரியாகவே விருத்தி செய்கின்றனர். மொழிமூலம் தொடர்பாடப் பழகுவதற்கு ஏற்ற விதத்திலேயே குழந்தை பிறக்கின்றது. மொழியறிவைப் பெற உதவும் காரணங்கள் "இயக்க விசைகள்" எனப்படுகின்றன. இவற்றில் பிள்ளையைச் சூழவுள்ளவர்களுடனான இடத்தாக்கம் புரிதலே முதன்மை பெறுவதாகவும் சொம்ஸ்கி தெரிவிக்கின்றார்.

மேலும், உளவியலாளர்கள் பிள்ளைகளிடம் மொழியறிவு விருத்தி யடைதல் தொடர்பாகப் பின்வரும் மூன்று உந்தல் தேவைகள் பற்றித் தெரிவிக்கின்றார்கள்.

1. தொடர்பாடலுக்குரிய தேவை – மற்றவருடன் தொடர்புகொள்ளல், உயிர்வாழ்தல், வசதிக்குறைவு, பயம் முதலிய காரணங்களாற் பிள்ளை தொடர்பாட வேண்டியுள்ளது.
2. தாம் வாழும் உலகைப் புரிந்துகொள்ளும் தேவை – தம்மைச் சுற்றியுள்ளவை பற்றியும், நடப்பவை பற்றியும் அறிந்துகொள்ள வேண்டிய

அவசியம். இதனாலேயே பிள்ளை வினாக்களை வினாவியபடி இருக்கின்றது.

3. கட்டுப்படுத்துவதற்கான தேவை – உயிர் வாழ்வதற்கும், குடும்பத்தில் தமது இடத்தை உறுதிப்படுத்தவும், தம் ஆளுமையை விருத்தி செய்யவும் இதனைப் பிள்ளைகள் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறான பல்வேறு இடைவினைகளினூடாக வளரும் பிள்ளைகள் தாய்மொழியைக் கற்கின்றார்கள். கல்வி உளவியலில் தாய்மொழி கற்றலினூடே ஒரு தனிமனிதனுடைய ஏனைய எல்லாத் திறன்களும், ஆளுமைகளும் தங்கியுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், பிறப்பு முதல் 3 வயதுவரை குடும்பச் சூழலே பிள்ளையின் மொழிவிருத்தியிற் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதன் விளக்கம் பின்வருமாறு:

வயது 5இலிருந்து முதலாம் , இரண்டாம் தரங்கள் வரை

பாடசாலையிற் பிள்ளையின் மொழி விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

(5 வயது முதல் 7 வயது வரை)

யாருடன்?

- குடும்ப உறுப்பினருடன்
- அயல் நண்பர்களுடன்
- வகுப்புத் தோழர்களுடன்
- வயதிற் கூடிய மாணவர்களுடன்
- ஆசிரியர்களுடன்
- மூத்தோர்களுடன்
- தனக்குத்தானே

எவற்றுடன்?

- பொம்மைகள் / பந்துகள்
- மணல், களிமண், நீர், மரத்துண்டுகள்
- களி/ கட்டிடத் துண்டங்கள்
- முகமூடிகள்
- பொம்மைகள்
- படப் புத்தகங்கள்
- புதிர்கள் (Jigsaw)
- பல்வேறு பாத்திரங்கள்
- எண்கள் / எழுத்துக்கள்
- கடதாசித் தோணிகள்

எங்கே?

- வீடு
- வகுப்பறை
- பாடசாலை வளவு
- விளையாட்டு மைதானம்
- திறந்தவெளி / வீதி
- பெற்றோர் வேலைத்தளம்
- பொது இடங்கள்

விளையாட்டின் தன்மை

தனி விளையாட்டுக்கள்

- சோறு சமைத்து விளையாடுதல்
- பொம்மை விளையாட்டு
- கடைவைத்து விளையாடுதல்
- போலச்செய்தல் விளையாட்டு
- ஊஞ்சல்
- பட்டம் விடுதல்
- கடதாசித் தோணிகள்

குழுநிலை விளையாட்டுக்கள்

- வீடு கட்டி / கடைவைத்து விளையாட்டுக்கள்
- கெந்தி விளையாடுதல் மாங்கொட்டை கெந்துதல்
- சொக்கான் வெட்டுதல்
- ஒளித்து விளையாடுதல்
- "இவ்விடம் எவ்விடம்" கண்கட்டி விளையாடுதல்

வயது 3 - 5 வரை

யாருடன்?

- குடும்ப உறுப்பினர்களுடன்
- ஒத்த வயதுக் குழுக்களுடன்
- அயலவர்களுடன்
- முன் பாடசாலை ஆசிரியர்களுடன்
- பகல்நேரப் பிள்ளைப் பராமரிப்பு நிலைய நிர்வாகிகளுடன்
- வீட்டுக்கு வரும் விருந்தினர்களுடன்
- தமக்குத் தாமே
- செல்லப்பிராணிகளுடன்
- பணியாட்களுடன்

வீட்டிலும், வாழும் சூழலிலும் பிள்ளையின் மொழி விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்



எவற்றுடன்?

- பொம்மைகள் / பந்துகள்
- மணல் / களிமண்
- தென்னை மட்டையிற் செய்த மாடுகள்
- விளையாட்டு வீடு / கடை
- பொம்மை வண்டி
- விதைகளால் ஆக்கப்பட்ட பொருள்கள்
- விளையாட்டுத் துப்பாக்கி
- பீங்கான் கோப்பைத் துண்டுகள்
- பழந்துணிகள்
- பெற்றார் ஆடைகளை அணிதல்
- கடதாசித் தோணிகள்
- மரத்துண்டங்கள் / தடிகள்

எங்கே?

- வீடு
- வளவு / தோட்டம் / திறந்தவெளி
- நண்பர்கள்
- வீதிகள்
- பொது இடங்கள்
- சமய சம்பந்தமான இடங்கள்
- முன் – பாடசாலை
- விளையாட்டு மைதானம்
- பகல்நேரப் பிள்ளைப் பராமரிப்பு நிலையம்
- தாய், தந்தையின் வேலைத்தலம்

செயற்பாடுகளின் தன்மை

- **தனிவிளையாட்டுக்கள்**
  - தென்னைமட்டை மாடுகளுடன் விளையாடல்.
  - பந்து விளையாட்டு
  - பொம்மைகளுடன் விளையாடல்
- குழுநிலை விளையாட்டுக்கள்
  - ஓடிப்பிடித்து விளையாடுதல்
  - ஒளிந்து விளையாடுதல்
  - பந்து விளையாடுதல்
  - கடை வைத்து / சமைத்து விளையாடுதல்
- **கற்பனை / பாவனை விளையாட்டுக்கள்**
  - அப்பா, அம்மா, வைத்தியர், தாதி, ஆசிரியராகப் பாவனை செய்து விளையாடுதல்.
- **சில வேளைகளில்**
  - முறைமையில் வகையிலும் குறைந்தளவு விதிமுறைகளைக் கையாண்டும் மிக எளிமையாகவும் விளையாடுதல்.

பிறப்பு முதல் 3 வயதுவரை

யாருடன்?

- தனக்குத்தானே பேசுதல்
- தாய் தந்தையாருடன்
- சகோதர சகோதரிகளுடன்
- அயற் பிள்ளைகளுடன்
- வீட்டுப் பணியாட்களுடன்

குடும்பச் சூழலில் பிள்ளையின் மொழி விருத்தியிற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பிறப்பு முதல் 3 வயது வரை

எவற்றுடன்?

- பொய்மைகள் / பந்துகள்
- மணல்
- களிமண்
- நீர்
- மரத்துண்டங்கள் / கற்துண்டுகள்
- தடிகள் / விதைகள்
- சுற்றாடலில் கிடைக்கும்வேறு பொருட்கள்

எங்கே?

- வீடு
- வளவு
- தோட்டம்
- தந்தை / தாயின் வேலைத்தளம்

விளையாட்டின் தன்மை

- முறைமையில் தன்மை
- திறந்த
- ஒருவரின் விருப்பத்திற்கியையப் பங்குபற்றல்

இவ்வாறான குழந்தை வளர்ச்சியுடன் உள விருத்தி, சூழல் தாக்கத்தினூடாகப் பிள்ளையின் மொழி விருத்தியடைகின்றது. இவ் விருத்தி பிள்ளைகளின் அடிப்படையான ஆளுமை வளர்ச்சிக்கு ஏதுவாகின்றது. மொழி விருத்தியடையாமற் சீரற்ற உளத் தன்மைகள் ஏற்படும். இது கற்றற் செயற்பாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, குழந்தைகளினது மொழி விருத்தியில் இன்றைய பெற்றோர்களும், ஆசிரியர்களும் மிகுந்த முக்கியத்துவம் வழங்கவேண்டும்.

சிக்மன் ஃபிராய்டின் (1856-1939) உளப்பகுப்பாய்வுக் கொள்கை (Psychoanalysis)

கிழக்கு ஐரோப்பிய, ஆஸ்திரிய நாட்டின் வியன்னா நகரைச் சேர்ந்த சிக்மன் ஃபிராய்ட் (Sigmund Freud) ஒரு உள மருத்துவராவார். பிரயோக உளவியற்றுறை வளர்ச்சியடைவதற்கு முதன்மையானவர்களில் முக்கியமாக இவர் திகழ்கின்றார். உளவியல் விஞ்ஞானத்திற்கு முக்கிய பங்களித்த இவரின் கொள்கை உளப் பகுப்பாய்வுக் கொள்கை எனப்படுகின்றது. உளத்தின் இயல்பு, செயன்முறைகளுக்கு ஏற்ப அதைப் பகுத்து ஆராய்ந்து மனித வாழ்வியல், கற்றல், மனிதச் செயற்பாடுகள், உளநோய்களுக்கான காரணங்களை எடுத்துக்காட்டினார். மனித வாழ்வியல் சீராக்கத்திற்குத் தனது பங்களிப்பை நல்கிய பிராய்ட் உளச் செயற்பாடுகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்காட்டுகின்றார்.

1. உணர்வு நிலை – உளத்தின் மேற்பகுதியின் சிந்தனை நிலை இதுவாகும். எண்ணிச் செய்யும் கருமங்கள், நடத்தைகள் எல்லாம் இவ் உணர்வு நிலை சார்ந்தவையாகும்.
2. கீழுணர்வு நிலை – மனித முயற்சியுடன் சிந்தனைகளை ஞாபகப் படுத்திக்கொள்ளும் உணவுப் பகுதியாக இது உள்ளது.
3. உணர்வற்றநிலை – உள்ளத்து உணர்வுகளை மீளக் கொண்டுவர முடியாத உள்ளத்தின் ஆழமான பகுதியாக இது உள்ளது.

தன்னிடம் வரும் உளப்பிணியாளர்களை ஆராய்ந்த பிராய்ட அவர்களின் பிரச்சினைகளை அறிய, அறிதுயில் (hypnotism) என்ற; நோயாளியை அறிதுயில் நிலையில் நித்திரையாக்கி, அவருடன் பேசிப் பிரச்சினை தீர்க்கும் முறையைப் பயன்படுத்தினார். தனியனுக்கு முற்றிலும் தெரிந்திராத உளச் சாதனங்களை அறிதுயிலாற் காணமுடியும் என நிரூபித்தார். தொடர்ந்து உளவியல் ஆராய்ச்சியை மேற்கொண்ட பிராய்ட் "உளப்பகுப்பாய்வு" என்ற முறைமூலம் அறிதுயில் நிலையைவிடச் சிறப்பான பிரச்சினை தீர்க்கும்

முறையை உருவாக்கினார். முக்கியமாகத் தனியாளின் உளப்பிரச்சினை களை ஆராய்ச்சி, உற்று நோக்கல் என்னும் முறைகளினூடு தீர்ப்பது முடியாது என்ற நிலையில்; உளப்பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தித் தனது நோயாளிகளிடம் காணப்பட்ட அறிகுறிகளுக்கு நனவிலி உளச் செயல்களே காரணம் என்பதைக் கண்டு பலரைக் குணப்படுத்தினார்.

உள நோயாளியின் சிந்தனைகளைக் கட்டுப்படுத்தாது, வழிப்படுத்தாது நோயாளி தடையின்றிப் பேசவேண்டும். அப்போது அவரது பேச்சை அவரின் நனவிலிக் காரணிகள் நிர்ணயிக்கும். இச்சிந்தனைகளின் தன்மையினின்று அவற்றிற்குக் காரணமான நனவிலிச் செயல்களைத் தேர்ச்சியுடைய உள ஆராய்ச்சியாளரால் தெரிந்துகொள்ளமுடியும் எனப் பிராய்ட் தன் உளப்பகுப் பாய்வு முறைகளிளினூடாக நிரூபித்தார்.

தன்னிடம்வரும் உள நோயாளிகளைக் குணப்படுத்த இவ் உளப் பகுப்பாய்வு முறையைச் சிறப்பாகப் பயன்படுத்தினார். தொடர்ந்து குழந்தை பிறந்து வளர்ந்து வாழும்வரை, பால் இயல்பூக்கங்களினின்றும் தோன்றும் பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்த பிராய்ட் உளப்பகுப்பாய்வில் மகிழ்ச்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இட் (Id), யதார்த்தக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்ட ஈகோ (Ego), –அகம், உயர் அறநெறிப் பரிமாணங்களைக் கொண்ட சுப்பர் ஈகோ (Super Ego) – அதியகம் என்று மூன்று பகுப்புக்களுக்குள் மனித வாழ்வியல் அபிவிருத்திச் செயன்முறைகளில் மறுபக்கங்களைக் காட்டினார். உளப்பகுப்பாய்வின் முதன்மைக் கூறுகளாக இம் மூன்றும் உள்ளன.

இட், ஈகோ, சுப்பர் ஈகோ

1. இட் (Id) – இன்பக் கோட்பாட்டின் (Pleasure Principal) அடிப்படையிற் செயற்பட்டு, அசௌகரிய நிலைகளைத் தளர்த்திட இட் முயலும். யதார்த்த நிலைகளைக் கருத்தில் எடுக்காது விருப்பினை நிறைவேற்றுவ திலேயே குறியாய் இருக்கும். இட் காரணிக்குப் பலம் கொடுப்பது "லிபிடோ" என அழைக்கப்படும் காம ஆசையாகும் என பிராய்ட் தெரிவிக்கின்றார். இட் உள சக்திகளைச் சேர்த்து வைத்திருக்கும்

ஆற்றலைக் கொண்டிருப்பதுடன் ஈகோ, சுப்ப ஈகோ தலையீடுகளுக்கும் உட்படும். இட் இற்கு உதாரணம்– கைமுறிய அடிப்பேன்.

2. ஈகோ (Ego) – அகம் – இட் காரணிப் பகுப்பின் தேவைகள் முழுவதையும் உரிய முறையில் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. குழந்தை தான் அழுவதாற் பயனில்லை. தாய் வந்து உணவு தரும்வரை அழாமல் இருக்கும். அதாவது சூழல்– மெய்மைக்கு – யதார்த்தத்திற்கு ஏற்பச் சீராக்கம் பெறுதலை ஈகோ குறிப்பதாகப் பிராய்ட் குறிப்பிடுகின்றார். இது நுண்ணறிவு மிக்கதாகவுமுள்ளது. மேலும் "இட்" டின் செயற்பாடுகளைப் புற உலகிற்கும், பொருந்தக்கூடியளவிலான அமைப்பாக்கங்களை ஈகோ உருவாக்கும். ஈகோவிற்கு உதாரணம் – "அடிக்க முனைதல், அவன் திருப்பி அடித்தால்!" என எண்ணி நடத்தையைக் கட்டுப்படுத்திக்கொள்ளல்.

3. சுப்பர் ஈகோ (Super Ego) – சட்டதிட்டங்களை மதித்து, ஒழுக்கப் பண்புகளைப் பேணி, நடத்தைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளல் சுப்பர் ஈகோவின் இயல்பாகும். இது உயர் மானிட விழுமியங்களை, பற்றற்ற ஆன்மீக நடத்தைகளின் வெளிப்பாட்டுச் செயன்முறைகளை இயம்பி நிற்கின்றது. இலட்சியபூர்வமானதாக இருக்கும். சுப்பர் ஈகோவிற்கு உதாரணம் எப்படியும் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யக் கூடாது என்ற கொள்கைப் பற்று.

எப்போதும் திருப்தியை நாடும் இட் டுக்கும் சுப்பர் ஈகோவின் சுபாவத்திற்கும், வெளியுலக வேறுபட்ட தேவைகளுக்கும் இடையிற் சமநிலையை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. ஈகோ மேலும் இட், ஈகோ ஆகியவற்றின் தொழிற்பாட்டை பிராய்ட் பின்வருமாறு விளக்குகின்றார். குதிரைக்கும், குதிரை ஓட்டிக்கும் இடைப்பட்ட தொடர்பு, பயணத்தின்முன் குதிரையும் வேறு. குதிரையோட்டியும் வேறு, குதிரை வண்டியை இழுக்கும்வரை இவ்வேறுபாடு வெளிப்படையானது. குதிரையை, வண்டியை இழுக்கத் தொடங்கி இருவரும் கட்டுப்பாடுகள் கடந்த நிலையில் ஓடுகின்றபோது குதிரையும், வண்டியோட்டியும்

ஒன்றுபோல் ஆகிவிடுவார்கள். இவ்வாறே இட், ஈகோவின் உறவு நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றார்.

மனிதனுடைய அறிவிருத்தியிலும், ஆளுமை வளர்ச்சியிலும் இம் மூன்று காரணிகளும் முக்கியம் பெறுகின்றன. இக்காரணிகள், பிள்ளை அறிவிருத்தியின் வளர்ச்சியின் ஒவ்வொரு பருவத்தின் உளப்பாலியல் இயல்புகளிலும் செல்வாக்குச் செலுத்துவதாகப் பிராய்ட் தெரிவிக்கின்றார். இப்பருவங்களை ஐந்தாகப் பிராய்ட் பிரிக்கின்றார்.

பிராய்ட்டின் உளப் பாலியற் பருவங்கள்

1. வாய்வழி இன்பம் – (Oral Stage) – (பிறப்பிலிருந்து ஒரு வயதுவரை)
   பிறந்ததிலிருந்து குழந்தை தாயின் முலைக்காம்பைச் சூப்பி, உறிஞ்சி, சப்பிப் பால் குடித்து மகிழ்வடைகின்றது; திருப்தியடைகின்றது. இது தடைப்படும்போது ஏற்படும் தாக்கங்களின் பிரதிபலிப்புக்களாக; குழந்தை வளரும் கட்டங்களில் விரல் சூப்புதல், நகம் கடித்தல், சேட் தெறி கடித்தல், புறழ்வு நடவடிக்கைகள், எதிர்காலத்திற் பாலியல் முரண் பாடுகள், எதிர்பாலாரை வதைத்தல், திருமணத்தின்பின் மனைவியிடம் பாலியல் திருப்திகாணாத நிலை, தன் வக்கிரகங்களைத் தீர்த்தல், அவளது முலைக்காம்பை, உறுப்புக்களைக் கடித்தல், இதைப் பெண்கள் மாறிச் செய்தல், கணவன் மனைவி பிரிவு விவகாரத்துக்குள் ஏற்படு வதற்கு அடிப்படைக் காரணமாகவுள்ளது.

2. குத இன்பம் (Anal Stage - இரண்டு, மூன்று வயதுவரை)
   குழந்தையின் குதம் சுருங்கிவிரிவடைவதனாற் பாலியல் இன்பத்தை அனுபவிக்கின்றது. குழந்தை இயல்பாக இருக்கும் இடங்களில், சுதந்திரமாக, விரும்பியபோது கழிவகற்றிவிடல் வேண்டும். இவ்வயதில் பெற்றோர் கடுமையான கழிப்பறை ஒழுங்குகளைக் கட்டளையிடு வார்களானால் குழந்தையின் இன்பம் தடைப்பட்டடு உளநிலைப் பாதிப்புக்கள், எதிர்காலத்தில் நடத்தைச் சீரின்மைகள், போலித்தனம், மனமுறிவுகளுக்கு வழிகோலலாம்.

3. பாலுறுப்பு வழி இன்பம் (Phallic Stage – நான்கு ஆறு வயதுவரை)

பாலுறுப்புக்களைச் சுயமாகத் தீண்டுவது, பிசைவது, சிறுநீர் கழித்தல், மூலம் இன்பம் காணல் இடம்பெறுகின்றது. பெற்றோரில், எதிர் பாலாருடன்கூடிய ஒட்டுறவினை ஏற்படுத்தல். விருப்பங்களின் தீவிர நிலை எலெக்ரா (Electra Complex) சிக்கல் (தந்தையை நேசித்துத் தாயை வெறுத்தல்), ஈடிப்ஸ் (Dedipus Complex) சிக்கல் தந்தையை வெறுத்து தாயை நேசித்தல்) சூழ்நிலைகள் இப்பருவத்தில் காணப் படலாம். பிள்ளைகளை அவதானமாக அரவணைத்து அவர்களுக்கு இக் காலத்தில் வழிகாட்டல் வேண்டும். இல்லையேல் பிற்காலத்திற் பல பாதிப்புக்கள் ஏற்படலாம். மேலும் ஆண் பிள்ளைகள் தந்தையைப் போலவும், பெண் பிள்ளைகள் தாயைப் போலவும் பாவனை செய்து விளையாடுவார்கள்.

4. மறை பருவ நிலை இன்பம் (Latency Stage) (6 வயதிலிருந்து குமரப் பபருவம்வரை)

இக் காலத்திற் பிள்ளை உடல் கூற்றியல்களிற் காட்டும் அக்கறையை விடக் கூடுதலான அக்கறையை சூழலில் காட்டுவர். தமது தேவைகளுக் காக, செயற்பாடுகளுக்காகப் பொருட்கள், உபகரணங்களைத் தேடிப் பெறுவர். பாலியல் சார்ந்த ஊக்கல்கள், செயலாற்றுகைகள் மறை நிலையாக இருக்கும் எனப் பிராய்ட் தெரிவிக்கின்றார்.

5. பாலுறுப்பு மகிழ்வுப் பருவம் (Genital Stage)

(ஆண் – பெண் பூப்பெய்திய காலம்)

எதிர்பாலாரிடையே முதிர்ச்சி நிலைப்பட்ட விருப்புக்களை, ஆர்வங்களை, ஆசைகளை, காதலை வெளிப்படுத்துகின்ற பருவமாக இது உள்ளது. கற்பனைகள், கனவுகள், புதியவற்றில் நாட்டங்கள், புதிய உறவுகளைத் தேடல், அன்பைப் பகிர எதிர்பாலாருடன் கதைக்க – அளவளாவ விரும்புதல் போன்ற செயலாற்றுகைகள் இப்பருவத்தில் நிகழும்.

இவ்வாறான பருவத் தேவைகள் நிறைவடையும்போது உள நோய்களற்ற சமநிலை ஆளுமைகொண்ட மனிதர்கள் உருவாவர் எனக்கூறும் பிராய்ட், சமநிலை ஆளுமை விருத்தியில் இப்பருவ முதிர்ச்சிகளினூடு ஈரோஸ், கண்டோஸ் என்ற காரணிகள் பற்றியும் தெரிவிக்கின்றார்.

ஈரோஸ் என்பது வாழ்வதற்கும், பாலியல் இச்சைக்குமான ஈடுபாடாகும். அதன்மூலம் வாழ்வதற்கான பலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. கண்டோஸ் என்பதன் மூலம் கருதப்படுவது மரணத்தின்மீதுள்ள, விருப்பமாகும். பிள்ளையின் அபிவிருத்தியிற் குடும்பத்தின்மூலம் பாலியல் விருப்பங்களில் தான் வாழவேண்டியதற்குரிய சக்திகளையும், எதிர்பார்ப்புக்களையும் விருத்தியாக்க ஊக்குவிப்புக்கள் கிடைக்க வேண்டும். கவலையுடனிருத்தல், தோல்வி, பின்னடைவு மனப்பான்மை போன்ற நடத்தைகள் கண்டோஸ் பாற்பட்டது. பிள்ளைப் பருவத்தின்போது தனக்குக் கிடைக்காத சந்தர்ப்பங்களினால் வெறுப்பான ஒரு மனப்பாங்குவர இடம் உண்டு எனவும் பிராய்ட் தெரிவிக்கின்றார்.

மேற்குறிப்பிட்ட சிக்மன் பிராய்ட்டின் ஆய்வுகள் தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்களும், கண்டனங்களும் தெரிவிக்கப்படுகின்றன. இன்பப் பாலியல் உந்தல் மட்டும் மானுடவாழ்வை, ஆளுமையை வரையறுக்கும் என்ற நிலையைப் பல உளவியலாளர்கள் ஏற்றுக்கொள்ளவிட்டாலும் இன்ப, பாலியல் உந்தல், உளரீதியான பல ஆழமான செயற்பாடுகளுக்கும், மனிதனின் ஆழ்மன – வேறுயாராலும் தெரிந்துகொள்ளமுடியாத, அவனது இரகசியங்கள், கனவுகள், கற்பனைகள் பற்றிய, புரிந்துகொள்ள முடியாத அதிசயிக்கத்தக்க மனிதன் பற்றிய ஆய்வுகளுக்குச் சிக்மன் பிராய்டின் ஆய்வுகளே பெரும் ஆதாரமாகவுள்ளன. வழிகாட்டல் – ஆலோசனைச் சேவைக்கான அணுகு முறைகளிற் பெரும்பாலானவை சிக்மன் பிராய்டின் உளப்பகுப்பாய்வின் மூலமே இன்றுவரை தீர்க்கப்படுகின்றன.

"சேர் கடந்த மூன்று நாட்களாக எனது பிரச்சினைகளை உங்களுக்குத் தெரிவித்ததையிட்டு மன நிறைவடைகின்றேன். சுதந்திரமாக என்னைக் கதைக்க விட்டீர்கள்; என் உணர்வுகளையும் என்னையும் மதித்தீர்கள். என்

ஆழ்மன எண்ணங்களுடன் உடல் சார்ந்த உளம் சார்ந்த நிலையில் என் உடனிருந்தீர்கள். என்னையே நான் உணரக்கூடிய நிலையைத் தோற்றுவித்தீர்கள். நன்றி சேர் – ரவி என்ற ஆலோசனை நாடியின் கூற்று இது.

1. பிரயோக உளவளத் துணையியலுக்கு ஆரம்பப் பங்களிப்பைச் செய்த சிக்மன் பிராய்ட்டின் கருத்தியலை இயம்புக.
2 சிக்மன் பிராய்ட்டின் உளப்பகுப்பாய்வு உளவளச் சிகிச்சைக் கோட்பாட்டை (Phychonalytic Therapy) விளக்குக.
3. பாடசாலைகளில் மாணவர்களின் பிரச்சினைகளை இவ்வணுகுமுறை மூலம் எவ்வாறு தீர்க்கலாம்.

விடைகள்

1. பிரயோக உளவளத் துணையை விஞ்ஞான பூர்வமாக ஆரம்பிப்பதற்கு அடித்தளமிட்டவர் சிக்மன் பிராய்ட். உளவளத்துணை நாடி வருபவர் தன் ஆழ்மனதிற் புதைந்திருக்கும் எண்ணங்கள், துன்பியல், கசப்பான அனுபவங்கள், உணர்வுகளைத் தடைகளோ – தணிக்கையோ இன்றி வெளிப்படுத்தச் சுதந்திரமான தொடர்புறுத்தல் (Free Association) முறைமையை ஏற்படுத்தினார். தன்னிடம் துணைநாடி வருபவர்மீது மிகுந்த புரிந்துணர்வும், மரியாதையும் காட்டினார். அவர்களுடன் பொருத்தமான முறையில் உடல் – உளம் சார்ந்த உடனிருத்தல் நுட்பங்களைப் பயன்படுத்தி, பனிக்கட்டி மலையிற் ஆழத்தில் அழியாமல் கிடக்கும் விலங்கின் உடல்போல இருக்கும் துணைநாடி வருபவரின் ஆழ் மனதிலிருக்கும் பிரச்சினையை உடனிருத்தல்மூலம் வெளிக்கொண்டு வந்து சிகிச்சையளித்தார்.

2. சிக்மன் பிராய்டின் உளப்பகுப்பாய்வு உளவளர்ச் சிகிச்சைக் கோட்பாடானது, உளக் கோளாறுகளால் அவதியுறுவோரது நிலையை மாற்றுவதற்கான மருத்துவமுறையாகவுள்ளது. சிகிச்சையை நாடி வருபவரின் நனவு நிலைக்குக் கீழுள்ள நனவிலி மனதில் உறைந்திருக்கும் பல்வேறு எண்ணங்கள், எழுச்சிகள், சிக்கல்களே அவரது நோய்க்குக் காரணம்.

இவற்றை நனவு நிலைக்கு உயர்த்தி நீக்கிவிட்டால் உளக் கோளாறுகள் மறைந்துவிடும் என்ற உளப்பகுப்பு மறைந்துவிடும் என்ற உளப்பகுப்பு மருத்துவ முறையைத் தோற்று வித்தார். இதன்படி உள நோயாளியின் அடி மனப் போராட்டங்களைக் கண்டுபிடித்து, நோயாளியின் பதட்டம்காரணமாகக் கையாளும் தற்பாதுகாப்புப் பொறியியல்களை அறிந்து உளவியல் முறையில் சிகிச்சை அளிப்பதாகும். இதில் சிகிச்சை அளிப்பவர் நல்ல உறவைக் கட்டியெழுப்பி நோயாளிக்கு ஏற்பட்ட நோயை, நோயாளியே அறிந்து, அதிலிருந்து விடுபட, வாழ்க்கையைப் புதிய கண்ணோட்டத்தோடு அணுக உதவுவார். இதற்குக் காலம் அதிகமாகவும் தேவைப்படலாம்.

3. பாடசாலையில் இன்று, பல மாணவர்கள் பல பிரச்சினைகளுடன் வருகின்றார்கள். அவற்றைத் தீர்ப்பதற்கு சிக்மன் பிராய்ட்டின் உளப்பாய்வுமுறை சிறப்பான பல வழிகளைக் காட்டுகின்றது. முதலிற் பிரச்சினைக்கு, ஆலோசனைக்கு உட்படுத்த வேண்டிய மாணவனுக்கு மரியாதை வழங்கி, மதித்து, அவனுடன் உறவை ஏற்படுத்தி அவனது வாழ்க்கை வரலாறு, பழக்கவழக்கங்களைப் பல கோணங்களில் கவனித்துப் படியவேண்டும். அவனது உண்மைப் பிரச்சினையை அறியவேண்டும். இதற்கு உளப்பகுப்புக் கொள்கையைப் பயன்படுத்த வேண்டும். இதில் அவனுக்கு ஏற்பட்ட பாதிப்பை, நிறைவேறாத தேவையை அறிந்து அவனது இயல்பை விளக்கி நெறிப்படுத்தலாம்.

சிக்மட் பிராய்ட்டின் அடக்கற் கொள்கை

மனிதன் தனக்குத் துன்பம் – வேதனை தருபவைகளையும், தான் விரும்பாதவைகளையும் நனவிலி உள்ளத்தில் அடக்கி மறந்து விடுவதை இக்கொள்கை எடுத்தியம்புகின்றது. உதாரணமாகத் துன்பம் நிறைந்த இளமைக்காலச் சம்பவங்களை ஞாபகப்படுத்தாமை. தன்னை ஏமாற்றிய காதலியின் பெயரை மறத்தல், தனக்கு விருப்பமில்லாத விரிவுரையாளரின் (ஆசிரியரின்) பெயரை மறத்தல் மனைவியின் தொல்லை தாங்காத கணவன் வீடு செல்லப் பயந்து அடிக்கடி வாகனச் சாவிகளைத் தொலைத்தல்.

விடய ஆய்வு - சம்பவம் I

"தரம் 8இல் கற்கும் சுனில், விஞ்ஞானப் பாடத்தின்போது, கற்கும் விடயங்களை உடனடியாக ஞாபகப்படுத்திக்கொள்ள முடிந்தபோதிலும், சமூகக் கல்விப் பாடத்திற் கற்கும் விடயங்களைப் பெரும்பாலும் மறந்துபோய்விடுகின்றான். மறதி பற்றிய நிரோதிக்கும் கோட்பாட்டின் அடிப்படையில் இந்த நிகழ்வின் விபரம் என்ன ? இக் கோட்பாட்டை யார் இயம்பியது?

சம்பவம் II

தரம் 5இல் கற்கும் தயாளன் குழப்படி செய்யும் ஆக்கிரமிப்புக் குணமுடைய மாணவனாவான். ஆகவே அவன் அடிக்கடி ஆசிரியர்களால் தண்டிக்கப்படுகின்றான். புதிதாக வந்த ஆசிரியை தயாளனை இனம் காணப் பல உத்திகளைக் கையாண்டார். அவனது பிறப்பு, தாயின் இறப்பு, சிறிதாயின் முறையற்ற பராமரிப்புப் போன்ற விடயங்களை அறிந்து அவனுக்கு ஒரு இடத்தைக் கொடுத்து, விட்டுக்கொடுப்பு, ஆதரவு வழங்கிக் கற்பிக்கலானார். சில கிழமைகளில் அவனது நடத்தையில் நன் மாற்றங்கள் நிகழத் தொடங்கியது.

1. தயாளனின் ஆக்கிரமிப்புக் குணம் வளர்வதற்கு ஏதுவாகக் கூடிய வீடு, பாடசாலை தொடர்பான காரணிகளைத் தருக.
2. அவனது கல்வியில் மேற்படி தாக்கம் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தியது.
3. மாணவர்களின் இணக்கமற்ற நடத்தைகளைச் சீராக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய பரிகாரங்களைத் தருக.

விடைகள்

சம்பவம் I

இக்கோட்பாடு சிக்மன் பிராய்டின் அடக்கல் கோட்பாடாகும். நினைவுக்குக் கொண்டுவர முடியாது அமுக்கிவிடுதல் அடங்கல், விருப்பமில்லாத பாடம், கவர்ச்சியில்லாத ஈடுபாடில்லாத ஆசிரியரின், கற்பித்தலால் மறத்தல்.

சம்பவம் II

1. தாயின் இறப்பு, சிறிதாயின் முறையற்ற பராமரிப்பு, பாடசாலையின் தண்டனைமுறைகள், கற்றல் – கற்பித்தலில் ஆசிரியர், மாணவர் மைய முறையியல்களைப் பின்பற்றாமை. பாடப் பலவீனங்கள் நன்னடத்தை களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகள் வடிங்கப்படாமை.

2. கற்றலில் பின்னடைவு, ஞாபகமறதி, கற்றலில் விருப்பமின்மை, வாழ்க்கையில் விருப்பமின்மை, விரக்தி, ஏனையவர்களைத் தாக்குதல்.

3. உளப்பகுப்புக் கோட்பாடு அடிப்படையில் அவனது பிறப்பு, நிகழ்ந்த சம்பவங்களை அறிதல், உரிய இடம் கொடுத்து அவனுடன் கலந்துரையாடிப் பிரச்சினைகளை இனம்காணல், இதனூடு கட்டுண்ட நிலமைகளைமாற்றியமைத்தல், முன்வரும் தன்மைகளை ஏற்படுத்திக் கொடுத்தல். (மரம் நடுகை, மதம்சார் நடவடிக்கைகள், இணைபாட விதானச் செயற்பாடுகள்) வரவேற்கத்தக்க நேரான பாதைக்கு மீள வலியுறுத்தல். சிறந்த முன்மாதிரிகளை வழங்குதல்.

உளப்பகுப்பாய்வில் கனவுகள்

ஒரு நோயாளியின் அல்லது மனிதனின் கனவுகளை ஆராய்வதன்மூலம் அவனது உள்ளத்தில் இயங்கும் சக்திகளை, அபிலாசைகளை, தேவைகளை மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட விடயங்களை, அறியமுடியும். பிராய்டின் கனவுக் கொள்கையானது, மன நோய்க்குரிய காரணங்களைக் கண்டுபிடிக்கும் அறிவியலாகவே இருக்கின்றது. கனவுகள் நனவிலி மனதில் இருந்து எழுகின்றன. பெரும்பாலும் கடந்த காலத்தில் நிறைவேறாமற் கனவு காண்பவரின் நனவிலி மனதில் ஆழ்ந்திருக்கும் விருப்பங்களையும், இச்சைகளையும் நிறைவேற்றும் தோற்றங்களே கனவுகளில் உள்ளன. இவ்வாறான விருப்புக்களிலும், இச்சைகளிலும் காமமே முதலிடம் வகிக்கின்றது.

கனவுகளுக்கு உட்பொருள் உண்டு. இதைக் கனவு காண்பவராலேயே விளங்கிக்கொள்ள முடியாது எனக்கூறும் பிராய்ட்; கனவுகள் பற்றி ஆராய்ந்த முதலாவது மனவியலாளராக மிளிர்கின்றார். கனவுகளுக்கும் உலகப் புகழ்பெற்ற அமர காவியங்களுக்குமுள்ள ஆழமான தொடர்பு களையும் எடுத்துக் காட்டினார். அவர் வாழ்க்கைச் சூழலின் மூன்றாவது படிநிலையில் நிகழும் போராட்டத்தை அதன் எழுச்சிகளைக் கனவுகளின் எதிரொலியாகக் கண்டார். மேலும் புகழ்பெற்ற காவியங்களில் வரும் கனவுச் சம்பவங்கள், கற்பனைகள் காவியங்களைப் படைத்த புலவர்களின் உளநிலைகளை அவற்றை ரசிக்கும் மனித அவாக்களை உள ஆசைகளை எடுத்துக்காட்டினார்.

வாழ்க்கை முழுவதும் மனிதனின் எண்ணங்கள், நடத்தைப் போராட்டங்கள், வெற்றிதோல்விகள் என்பவற்றையெல்லாம் அழியாத கோலங்களாகப் பார்த்த சிக்மன் புரோய்ட், தன் உளப் பகுப்பாய்வியலில் மனிதன், அவன் அவாக்கள் – ஆபாசங்கள் எல்லாவற்றையும் ஒரு நிராசையுள்ள குழந்தையின் வெளிப்பாடாகக் கொண்டார்.

குழந்தை பிறந்து மூன்றிலிருந்து ஐந்துவயதுவரையான பகுதியில்தான் தொடங்காற்றுத்திறன் (Initiative) தவறின் குற்ற உணர்வு (Guilt) என்ற இரு துருவங்கள் மனிதரிடையே ஏற்படுகின்றது. இந்நிலையில் எழும் உளச் சிக்கலைச் சிக்மன் புரோய்ட் "இடிப்பஸ் உளச்சிக்கல்" (Dedipus Complex) எனப் பெயரிட்டார். இதற்குக் காரணம் இச்சிக்கலில் உலகப் புகழ்பெற்ற "இடிப்பஸ் ரெக்ஸ் – Dedipus Rex" என்ற கிரேக்க காவியத்தை ஒத்திருப்பதேயாகும்.

இக்காவியத்தின் தலைவன் சிறுவயதில் தாயைப் பிரிந்து விதிவசத்தால், காட்டில் வாழ்ந்து, நாடு வந்து தன் தாயையும், தந்தையையும் யார் என்று அறியாமல், அரசனான தந்தையைக் கொன்று அரசியான தாயைத் திருமணம் செய்து அரசாள்கின்றான். அவனுக்கு உண்மை தெரியும்போது; தான் வரைமுறைகளை மீறியதற்காகத் தன்மேற் கோபமுற்று, வெறுப்புக் கொண்டு தன் கைகளினாலேயே தன் கண்களைக் குருடாக்கித் தன்னைத் தானே சித்திரவதைசெய்து அழிக்கின்றான்.

சிறுவர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் தமது தாயின் உரிமையை யாரும் பறித்தால், அல்லது தாயை இழந்தால், தாயின் அன்பு கிடைக்காததால் ஏற்படும் சிக்கல் அவர்களின் எதிர்கால வாழ்வையே நிம்மதியற்றதாக்கி அழித்துவிடும். கௌதமபுத்தர், ரூசோ, டால்ஸ்டாய், கிட்லர் எல்லாம் தம் குழந்தைப் பருவத்தில் தாயை இழந்தவர்கள் இவர்களது தனிப்பட்ட இல் வாழ்வு சிறப்பாக அமையவில்லை. இவ்வாறே தன்னிடம் வந்த உள நோயாளிகளின் நிலைகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்தார்.

தன்னிடம் வந்த உள நோயாளர்களின் கனவுத் தொடர்களின் அடிப்படைக் காரணங்களை ஆழமாக ஆராய்ந்தார் – தேடினார். அதில் 3 – 5 வயதுக் குழந்தைகள் பெற்றோர் உடலுறவு கொள்வதைப் பார்த்துவிடும் அசம்பாவிதம். இதை ஆங்கிலத்தில் (Trauma of the Primal Scena) என்று பெயர். அறியாக் குழந்தைக்கு இது, பெரும் அசம்பாவிதம். ஆனால், உலகெங்கும் அன்றாடம் சாதாரணமாக இது நடந்துவிடுகின்றது. இது ஆழமான காயமாக – ஊமைக் காயமாக அடிமனதில் மனவலியைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். அக்காயத்தின்மீது அன்றாட சம்பவங்கள் நெருடும்போது வலி அதிகமாகும். அது கனவுகளாக முனகும், உலகின்மீது, ஆசிரியர்மீது, ஊழியர்கள்மீது, அர்த்தமற்ற ஆத்திரமாக வெடிக்கும்.

திருமணம் நடந்து முதல் அனுபவத்தின்போது அந்தப் பழைய அசம்பாவிதத்தின் தாக்கவடு முரண்பாடான எழுச்சிகளை ஏற்படுத்தும், முதலாவது குழந்தை பிறக்கும்போது இதன் தாக்கங்கள் வலுப்பெறும். குழந்தைப் பருவத் தாக்கங்களும், தனிமையும், துன்பமும், கொடுமைகள் யாவும் குறித்தவரின் ஏனைய பருவங்கள் எத்தகைய வனப்புடையதாக, இனிமையுடையதாக இருப்பினும் உலகத்தைத் துறந்துவிடவேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதாகத் தனது கனவுகளை – உளப்பகுப்பாய்வு ஆய்வு மூலம் எடுத்தியம்புகின்றார் பிராய்ட்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் திருமணம்செய்து மனைவியின் பிரசவத்திற்கு முன்னால்; கொந்தளிக்கும கடல், பரந்த பாலைவனம்,

குருடர்களின் முடிவில்லாத ஊர்வலங்கள், சமீபத்திற் கண்ணிற்பட்ட துன்பகரமான காட்சி, தான் ஓரங்கட்டப்படுவதுபோன்ற சம்பவங்கள் குற்ற உணர்வு, தன்னுடைய மரணம் என்பவற்றைக் கனவில் காண்பதற் காகத் தெரிவித்துள்ளனர். இவர்களுக்குப் பல்வேறு அணுகுமறைகளில் உளமருத்துவம் செய்து வெற்றிகண்டார் சிக்மன் பிராய்ட். இன்று மேற்கு நாடுகளில் வரிசைத்தொடர்த் திருமணங்கள் (Serial Marriage) அதாவது விவாகரத்தும், மறு மணங்களும் நடைபெற மேற்கூறிய காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

சிக்மன் பிராய்டின் உளப்பகுப்பாய்விற் பலவாறு விமர்ச்சிக்கப் பட்டாலும்கூட மனிதர்களின் வாழ்க்கைச் சூழலின் ஒவ்வொரு படிநிலையிலும் மொழி கடந்த, இனம் கடந்த, காலம் கடந்து நிற்கும் கருப் பொருட்கள் ஒரே அமைப்புருவம் கொண்ட (Isomorphic) கனவுகளாகக் கற்பனைகளாகப் பலர் மனதில் தோற்றம் கொள்கின்றன. விசித்திரமான மனித மன உணர்வுகள், அவாக்கள், நிறைவேறாத ஆசைகளின் படிமங்க ளாக உள்ள மனிதக் கனவுகள் வெறும் விம்பங்கள் அல்ல. உணர்வுகளின் வெளிப்பாடுகளேயாகும்.

நடத்தைவாதக் கல்வி உளவியல்

எல்லா மனிதர்களினதும், விலங்குகளினதும் செயல்கள் யாவும் தூண்டி – துலங்கல் என்ற அடிப்படையிலேயே நிகழ்கின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டதே நடத்தை வாத உளவியலாகும். பொதுவாக நடத்தையாளர்கள் சகல நடத்தைகளும் கற்கப்பட்டவை என்றே எண்ணுகின்றனர். சூழலின் இடைத் தாக்கத்தினால் தனியாளில் இது நிகழ்கின்றது. இந்நடத்தை மாற்றமே கற்றலாகப் பரிணமிக்கின்றது. நடத்தைவாத உளவியலறிஞர்கள் ஜோன்.பி. வாட்சன் மனிதர்களினதும் விலங்குகளினதும் புறவயமாய் அவதானிக்கக்கூடிய நடத்தை வடிவங்களே உளவியற் கற்கை நெறியாக அமையும் என விளக்கினார்.

விலங்குகளின் நடத்தைகளை அவதானிப்பதன் வழியாக, மனித நடத்தைகளைப் புரிந்துகொள்ளலாம் என்ற கருத்தாக்கமும் நடத்தைவாத உளவியலில் உள்ளது. இந்நடத்தைவாத உளவியல், நான்கு வகையாக நோக்கப்படுகின்றது.

1. தூண்டி, துலங்கல் கொள்கை
2. பழைய நிபந்தனைப்பாட்டுக் கொள்கை
3. தொழில் நிபந்தனைப்பாட்டுக்கொள்கை
4. சமூகக் கற்றல்கொள்கை

தோண்டெக்கின் தூண்டி - துலங்கல் இணைப்புவாதக் கொள்கை

கற்றலானது பல்வேறு தூண்டல் (Stimulus), துலங்கல் (Respones) இணைப்புக்களால் ஏற்படுவதாகவும், இயக்கம், காட்சி மனவெழுச்சிகள் இதில் முக்கியம் பெறுவதாகவும் தோண்டெக் எடுத்தியம்பினார். பசியுள்ள பூனையைக் கூட்டில் அடைத்து வெளில் உணவை வைத்துவிட பூனை வெளியில் வரமுயற்சித்துப் (பாய்தல், முயல்தல், விராண்டல்) எனத் திமிறியது. பின் கதவைத் திறக்க வைக்கும் பொறி தற்செயலாகத் தட்டுப்படப் பூனை வெளியில் வந்து இதனை மீண்டும் மீண்டும் செய்தபோது தவறுகளைக் குறைத்து ஒரு கட்டத்தில் நேரடியாகவே பொறியை அழுத்திக் கதவைத்

திறந்தது. இது முயன்று தவறும் கற்றல் (Learning by Trial and) என எடுத்துக்கூறி ஆயத்த, பயிற்சி, விளைவு விதிகளைக் கற்றலில் அறிமுகம் செய்தார்.

1. ஆயத்த விதி: ஒரு கற்றல் நிலைக்கு ஆயத்தம் மிக அவசியமானது தூண்டல் – துலங்கள் தொடர்பு ஏற்பட ஆயத்த நிலை தேவை. மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஆசிரியர் ஆயத்தப் படுத்தும்போதே கார்ல் நிகழும் என்பதை இவ்விதி வலியுறுத்துகின்றது.

2. பயிற்சியின்மூலம் தூண்டல் துலங்கல் இணைப்பு வலுவடைகின்றது. வகுப்பறைக் கற்றலில் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதன் முக்கியத்துவத்தை இக் கோட்பாடு இயம்பி நிற்கின்றது.

3. விளைவு விதி I – வெற்றி அல்லது வெகுமதியளித்தல். தூண்டல் – துலங்கல் இணைப்பு வலுப்பெறுகின்றது. எனவே, மாணவர்களுக்கு வெகுமதி, ஊக்கல் அளிப்பது என்பது முக்கியமானதை இவ்விதி எடுத்துக்கூறுகின்றது.

1. பழையநிபந்தனைப்பாட்டுக்கொள்கை – பவ்லொவ்

ரூசிய நாட்டு வைத்தியரும் உளவியலாளருமான பவ்லோ (G.Pavlov) – 1849 – 1936) என்பவரால், பழைய நிபந்தனைப்பாட்டு (Classical Condioning) கொள்கை இயம்பப்பட்டது.

படத்திலுள்ளபடி நாயின் உமிழ்நீரை அளக்கும் கருவி தாடையிற் பொருத்தப்பட்டது. நாய்க்கு உணவு வழங்கப்படும்போது ஒவ்வொரு தடவையும் மணி ஒலிக்கப்பட்டது. மணியை உணவுடன் சம்பந்தப்படுத்தும் நிகழ்ச்சிக்கு முன்னர் மணியோசை நாயில் ஒரு குறிப்பிட்ட விளைவைத் தோற்றுவிக்கவில்லை. ஆனால் நாய் விரைவாக உணவுடன் சம்பந்தப்படுத்தி மணியோசை கேட்டதும் உமிழ்நீரைச் சுரந்தது. பலமுறை உணவு கொடுக்கும்போது மணியோசை ஒலிக்கப்பட்டது. பின் உணவு கொடுக்காமலே மணி ஓசையை எழுப்ப நாயின் வாயிலிருந்து பெருமளவு உமிழ்நீர் சுரத்தலைப் பவ்லோ கண்டார்.

மணி ஓசையினால் தூண்டப்பட்ட இத்துலங்கள் இயல்பானதன்று; கற்றலினால் ஏற்பட்டது என பவ்லோ முடிவாக்கினார். இங்கு உணவு உமிழ்நீர் துலங்கல் (CR)

நிபந்தனைப்படுத்தாத தூண்டி (UCS) மணி நிபந்தனைப்படுத்திய தூண்டி (CS),

i. ஆரம்பத்தில் – UCS → CR

ii. பரிசோதனையின்போது UCS → CR, CS → CR

iii. முடிவில் – CS - CR

இங்கு நிபந்தனைப்படுத்திய தூண்டிக்குப் பதிலாகப் பிரதியீட்டுத் தூண்டியையும் வழங்கலாம். பவ்லோவின் பரிசோதனை மூலம் கண்டுபிடித்ததை மனிதர்களுக்குப் பயன்படுத்தினார் உளவியலறிஞர் வாட்சன் (மேலும் 1953ஆம் ஆண்டு வொல்கோவா என்ற உளவியலறிஞர் இன்னோர் பரிசோதனையை மேற்கொண்டார். இங்கு நிபந்தனைப் படுத்தப்படாத தூண்டல் கனியாலான சுவைச்சத்து (Cram berry Sauce) ஆகும். இந்த நிபந்தனைப்படுத்தப்படாத தூண்டியை ஓர் குழாயினூடாகப் பிள்ளையின் வாய்க்குள் விட்டபோது உமிழ்நீர் சுரக்கப்பட்டது. இச் சுவைச்சத்தைக் கொடுக்கும்போது ரூசிய மொழியில் "நன்று" என்ற சொல்லைக் கூறினார். நாளடைவில் இந்தச் சொல்லே உமிழ் நீரைச் சுரக்கச்செய்தது. இன்றுவரை அனேக உயிரினங்களின் கற்றலை ஆராய்வதற்கு இவ் வழிமுறைகளை உபயோகிக்கின்றனர்.

இத்தகைய கற்றல், பாடசாலைக்கு முதலாம் ஆண்டிற் பயிலவரும் பிள்ளையை ஆசிரியர் அன்புடன் வரவேற்று அரவணைத்துக் கற்பிக்கின்றார்; உதவுகின்றார். சில நாட்களில் அப்பிள்ளை பாடசாலைக்கு விருப்புடன் செல்ல ஆரம்பிக்கின்றது. ஆசிரியரின் அரவணைப்பு, புன்சிரிப்பு, பாராட்டல் என்பவற்றை நிபந்தனைப்பாட்டுத் தூண்டிகளென விளக்கலாம். இவ் வகையில் ஆசிரியர் ஊக்குவிப்பவராகவும் நியாயப்படுத்துபவராகவும் செயற்படலாம்.

பவ்லோவின் பழைய நிபந்தனைப்பாடு அழிவதனால் (Unconditing) அல்லது தொடர்ந்து கற்காமையால் மறதி ஏற்படுவதும் இயம்பப்படுகின்றது. மற்றும் பவ்லோவின் பரிசோதனையில் மணியொலிக்க உமிழ்நீர் விடும்படி நிபந்தனைப்படுத்தப்பட்ட நாய், பின்பு அதை ஒத்த பிற மணி ஒலிகளுக்கும் உமிழ்நீர் விடும்படி கற்றது. இது தூண்டிப் பொதுமையாக்கல் (Stimulus generalization) எனப்படும். இதற்கு மாறாகப் பல வகைத் தூண்டிகள் அளிக்கப்படும்போது, அவற்றிற் குறித்த தூண்டியை வேறு பிரித்தல், தூண்டி பிரித்தறிதல் (Stimulus discrimination) எனப்படுகிறது. நாய், குறித்த மணி ஒலிக்கே உமிழ்நீர் விடுதலை உதாரணமாகக் கூறலாம்.

விடய ஆய்வு நிகழ்வுக் கற்கை

ஆரம்பப்பாடசாலை வகுப்புக்களில் பாலன் கணித பாடத்தில் உயர் அடைவு மட்டத்தைக் காட்டியிருந்தான். ஆனால் இடைநிலை வகுப்பிற் கணித பாடத்தில் அடைவுமட்டம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. அவனுக்குத் தண்டனை வழங்கும் கணித ஆசிரியர் விருப்பமானவர் அல்லர். ஆகவே, அவன் அந்தப் பாடத்தையும் விரும்புவதில்லை. அப்பாட வேளையில் அவன் பெரும் சிரமத்தை அனுபவிப்பான். இரண்டு கணிதபாட வேளைகள் உள்ள நாட்களிற் சுகயீனம் எனக் கூறிப் பாடசாலைக்கு வரமாட்டேன்.

1. பாலனின் நடத்தை வேறுபாடுகளை விபரிக்கும் கற்றல் விதியையும், அதை முன்வைத்த உளவியலாளரையும் தருக.
2. இவ் விதியில் முன்வைக்கப்படும் நான்கு கோட்பாட்டு முக்கியத்து வங்களைத் தருக.
3. தமது வகுப்பறையிலுள்ள பிள்ளைகளின் உள எழுச்சி விரக்தி தொடர்பாகக் கவனமெடுத்து நிவாரணமளிக்கக்கூடிய கற்றற் சூழலை ஏற்படுத்துவதில் மேற்படிக் கோட்பாட்டு விடயங்களை உபயோகிக்கும் விதம் பற்றிக் குறிப்புத் தருக.
4. அமெரிக்க நடத்தைவாத உளவியலின் தந்தை ஜோன் B.வாட்சன் பற்றிச் சிறுகுறிப்புத்தருக.

விடைகள்

1. பழைய நிபந்தனைப்பாட்டுக் கொள்கை – பவ்லோ

2. பிரதியீட்டுத் தூண்டிகளை வழங்குதல், தூண்டிகளைப் பொதுமை யாக்கல், தூண்டிகளை வேறுபிரித்தல், துலங்கல் அற்றுப்போதல், ஆசிரியர் ஊக்குவிப்பாளராகவும், அதை நியாயப்படுத்துபவராகவும் செயற்படல்.

3. உளவியல் ரீதியான பொருத்தமான வகுப்பறைச்சூழல் ஒன்றைக் கட்டியெழுப்புதல், இதில் வகுப்பறைப் பௌதிகச்சூழல், இருக்கைகள், மாணவர் தொடர்பாடற் கலின் நிலைகள், மகிழ்ச்சியான கற்றல் சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படவேண்டும். மேலும், ஆசிரியர் விரும்பக் கூடியவராகக் கடும் தண்டனை வழங்காதிருத்தல், பாலனுக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை வழங்கிக் கவர்ச்சிகரமானதாகவும், விரும்பக் கூடிய வாறும் செயற்படல். மாணவர்கள் பயம், பீதியடையக் கூடிய நடவடிக்கை களை எடுக்காதிருத்தல்.

4. ஜோன் பி. வாட்சன் (John, B.Watson – 1878 – 1958)
அமெரிக்க சிக்காக்கோப் பல்கலைக்கழகத்தில் உளவியற் பட்டத்தைப் பெற்ற வாட்சன் உளவியற் கற்கை முறையியல்களில் எழுச்சிபெற்ற நடத்தைவாத உளவியலில் தோற்றம், பயன்பாட்டிற்குப் பெரும் தொண்டாற்றினார். அதன் தந்தை எனவும் போற்றப்படுகின்றார். உளவியல் விம்பம் – அக மனச் செயற்பாடுகள், பற்றிய தறையாக இருந்த நிலையிலிருந்து நீக்கி அவற்றிற்கு எதிராக மாற்றத்தை ஏற்படுத்தி விஞ்ஞானபூர்வ பரிசோதனை முறையிலான புரட்சிகர நடத்தைவாத உளவியல் ஆய்வுகளை வெளிக்கொணர்ந்தார்.

உளவியல், நடத்தை பற்றிய கற்கையாக அமையவேண்டுமே தவிர: நினைவு, நினைவிலி, குறித்த மனம் சார்ந்த கற்கையாக இருக்க வேண்டியதில்லை. மன அகநிலை விடயங்களை விடயங்களை விஞ்ஞான ரீதியாக அளவிட, நியாயப்படுத்த முடியாது. அகநோக்கு

முறை (Introspection) உளவியலில் இருந்து நீக்கப்பட வேண்டும். அர்த்தமற்றது, என்கிறார் வாட்சன். இவர் உளவியலுக்கான வரைவிலக்கணத்தை; "உளவியல் என்பது நடத்தை குறித்ததோர் விஞ்ஞானமாகும்" என்கின்றார். வெளிப்படையானதும், புறவயமானது மான நடத்தைக் கோலங்களே நடத்தை வாதத்திற்கான அடிப்படைகள், தூண்டல் கொடுக்கப்படுமிடத்து முன்னைய தூண்டல் எதிர்வு கூறத்தக்கதாக அமையும் என்ற வகையில் இவர் நடத்தைவாத ஆய்வுத் திட்டங்களாகப் பின்வரும் நான்கையும் அறிமுகம் செய்கின்றார். கருவிகளுடனும் கருவிகள் இன்றியும் அவதானம் (Observation), ஆக்க நிலையுறுத்தப்பட்ட பட்டுத் தெரிப்பு (Conditional Refelex), சோதனை முறை (Testing method) வாய்மூல அறிக்கை (Testing method).

இவருடைய மேற்குறிப்பிட்ட ஆய்வுத் திட்டங்கள் பல விமர்சனங் களுக்கும் உட்பட்டன. எனினும் உளவியலில் பல தடவைகள் உளப்பிரச் சினைகள் மனம்தொடர்பான கருத்தாக்கங்களாக இருந்த நிலையை நடத்தைவாதம் புரட்சிகரமாக மாற்றியது. இது முற்றுமுழுதாக மனம் குறித்த கருத்தாக்கத்தை உளவியலில் இருந்து நீக்கி, நடத்தை தொடர்பான விஞ்ஞானம்சார் மனித செயன்முறைகளை இயம்பியமை உளவியலின் நெடுந்தூர முன்னேற்றத்தின் மையிற்கல்லாகவே உள்ளது. இதற்கு வாட்சனின் பங்களிப்பு மகத்தானது.

மேலும் வாட்சன் மனித நடவடிக்கைகளிற் சூழலுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றார். அவர் ஒருமுறை கூறினார். "என்னிடம் குறித்த அளவு பிள்ளைகளைத் தாருங்கள். அவர்கள் எவ்வாறு எதிர்காலத்தில் வரவேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்வாறே ஆக்கித் தருகின்றேன்". இக்கருத்தாக்கம் அவரது சூழல் தொடர்பான முக்கியத்துவத்தை இயம்புகின்றது. விலங்குகளை வைத்துப் பல்வேறு உளவியல் ஆய்வுகளைச் செய்த வாட்சன் அவற்றுடன் தொடர்புபடுத்தி மனிதர்கள் பற்றியும் இறுதிக் காலத்திற் பல ஆய்வுகளை வெளியிட்டார். உளவியலை ஒரு பிரயோக ரீதியில்

காணவும் இவர் முற்பட்டார். 1928ஆம் ஆண்டு "குழந்தை நலன் பேணல்" என்ற நூலையும் வெளியிட்டார். நடத்தைவாத உளவியலுக்கும் இவரது பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

5. மனிதனது நடத்தையை மாற்றினால் அவனை நெறி பிறழ்வு அற்ற மனிதனாக்கலாம் என்பது நடத்தைவாதிகளின் கருத்தாகவுள்ளது. (E.L. ரோல்மன், CL. கல், E.R. கோத்திரி, பவ்லோ வாட்சன், எட்வின் B.கோல்ற்) தூண்டல்களும், அவற்றினடியாக விளையும் துலங்கல் களுக்கும் உள்ள தொடர்பை அறிவதே உளவியலின் வேலை. தூண்டல் இன்னதெனத் தெரிந்தால், அதனால் ஏற்படும் துலங்கல் இன்னதென்று உறுதியாகக் கூறலாம். அவ்வறேதுலங்கல் யாதென உணர்ந்தால், அது எதனால் தூண்டப்பட்டிருக்க வேண்டும் என்று துணிந்து கூறிவிடலாம். இவ் அடிப்படையில் மனித நெறிபிறழ் நடத்தைகளை இனம் கண்டு அவற்றை மாற்றிச் சீர்திருத்தலாம் என நடத்தைவாதிகள் எடுத்துக் கூறுகின்றனர்.

B.F. ஸ்கின்னரின் தொழில் நிபந்தனைப்பாட்டுக் (Operant Conditioning) கொள்கை

வாட்சன், பவ்லோ, கல் ஆகியோரின் கொள்கைகளினூடு, பல ஆய்வுகளை நடாத்தி அமெரிக்க ஹர்வாட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த B.F. ஸ்கின்னர் 1938ஆம் ஆண்டு உயிரிகளின் நடத்தை என்ற ஆய்வறிக்கையை வெளியிட்டார். இது கருவிசார் நிபந்தனைப் பாட்டைச் சார்ந்த (Instrumental) தொழில் நிபந்தனைப்பாட்டுக் கொள்கை எனப்படுகின்றது. இதில் மீள வலியுறுத்தல் (reinforcement) முக்கியம் பெறுகின்றது.

கருவிசார் நிபந்தனைப்பாடு சார்ந்த தொழில் நிபந்தனைப்பாட்டுக் கொள்கையினை ஆராய ஸ்கின்னரால் விருத்தியாக்கப்பட்ட கருவியே ஸ்கின்னர் பெட்டியாகும். இப்பெட்டியிலுள்ள நெம்புகோலை அழுத்தும்

பொழுது சிறு உணவுத் துண்டு விழும். பசியுடைய ஒரு எலியை இப்பெட்டிக்குள் விட்டால் அது பெட்டியை ஆராயத் தொடங்கும். அப்போது பல வகையான தொழிற்பாடுகளை, துலங்கல்களை வெளிப்படுத்தும். தற்செயலாக எலி நெம்புகோலை அழுத்தும்போது உணவு தட்டில் விழும். அதை எலி உண்ணும். இச்சம்பவத்தின் மீள வலியுறுத்தல் நெம்புகோலைத் திரும்ப அழுத்துவதில் தங்கியிருக்கும். சிறிது நேரத்தின்பின்னர் நெம்புகோலைத் திரும்ப அழுத்தி உணவுத் துண்டைப்பெறும். இவ் அழுத்தும் துலங்கல் கருவி சார்ந்ததாகும். நெம்புகோலை அழுத்துவதற்கு உணவு மீளவலியுறுத்துகின்றது. இவ்வாறு பல தடவை முயன்றபின் எலி நெம்புகோலை விரைவாக அழுத்த ஆரம்பிக்கும்.

உணவால் உடனடி மீள வலியுறுத்தப்படுவதனால் எலி நெம்புகோலை அழுத்த நிபந்தனைப்படுத்தப்படுகின்றது. முன்பு துலங்கற் பெறுமதியை அளித்ததனால் எலி விரைவாகத் துலங்கக்கூடிய இயல்பைப் பெறுகின்றது. இந்நடத்தை மாற்றமே கற்றலாகின்றது. ஸ்கின்னர் மேலும் பல பரிசோதனைகளில் தான் விரும்பியபடி மீள வலியுறுத்தல்களைப் பூனைகள் புறாக்கள்மீது மேற்கொண்டு பல நடத்தை மாற்றங்களை எடுத்துக் காட்டினார். புறாக்கள் தானியத்தைப்பெற கொத்தும் நிலைகளினூடு அவற்றைப் பந்தடிக்க வைத்தார். மேலும் பறவை சேர்க்கஸ் பயிற்சி சாகசங்களுக்கு இம் மீளவலியுறுத்தல்கள் மூலமே பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் பழக்கப்படுகின்றது. இவ்வாறே பிள்ளைகள் எழுத, வாசிக்க, கணிதம் படிக்கத் தெரிவுசெய்த மீளவலியுறுத்தலையும், தொடர்மீள வலியுறுத்தலையும் பயன்படுத்திக் கற்க வைக்கலாம். இங்கு வெகுமதிகள் அளிக்கப்பட்டு நேர், மீள வலியுறுத்தல் இடம்பெறுகின்றது. இதற்கு எதிராகத் தண்டனை வழங்குதல் எதிர் மீளவலியுறுத்தலாகும். அடுப்பிற் சூடுவாங்கிய பிள்ளை பின் அதிற் கைவைக்காது தவிர்த்துக் கொள்வான். நேர், எதிர், மீளவலியுறுத்தல்கள் இரண்டிலும் குறித்த ஒரு துலங்கல் வலிமை பெறுகிறது.

ஸ்கின்னரின் நிரலித்த கற்பித்தல் முறைமை

ஸ்கின்னருடைய தொழில் நிபந்தனைப்பாட்டுக் கொள்கையை மீள வலியுறுத்தல்களினூடாக ஆசிரியர்கள் பாடங்களை வினைத்திறனாகக் கற்பிக்கலாம். இன்றைய நவீன கல்வித் தொழில்நுட்பங்கள், கல்விச் சீர்திருத்தங்கள், தகவல் தொழில்நுட்பக் கணினிப்பயன்பாடுகள் ஸ்கின்னருடைய மீளவலியுறுத்தல்களை அடிப்படையாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும் இவர் முன்திட்ட நிரவித்த கற்றல் (Programmed Learning) முறைமையை 1954ஆம் ஆண்டு உருவாக்கி நடைமுறைப்படுத்திக்காட்டியமை கல்வியியலில் பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தியது. இதன் தொழில்நுட்பத்தின் பிரதான சிறப்பு என்னவெனில் பாட அலகுகளைப் பல பிரிவுகளாக வகுத்து மாணவர்களுக்கு கற்றல் அலகுகளாக முன்வைக்கப்படுகின்றன. இதில் உள்ளடக்கியுள்ள உளவியல் பெறுமானமானது ஒவ்வொரு படியையும் கற்றபின் அதன் விளைவுகளை அறிவதால் மாணவர்கள் மீள வலியுறுத்தப்படுகின்றனர். இவ்வகையில் ஸ்கின்னர் தொழில் நிபந்தனைப் பாட்டுக் கோட்பாட்டைக் கற்றலிற் சிறப்பாகப் பயன்படுத்தும் முறைமை பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தியது.

நிரவித்த கற்பித்தலிற் கற்கப்படும் விடயங்கள் தொடர்ச்சியாகப் படிமுறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு நிரல்வாக்கம், செய்யப்பட்டிருக்கும் இதைக் கற்பித்தற்பொறி (Teaching machine) மூலம் ஸ்கின்னர் பிரயோகித்துக் காட்டினார். தானே மாணவன் படித்து விடை எழுதி, பிழைகளைத் திருத்தி மீள வலியுறுத்தலினூடு கற்றுக் கொள்வான். தற்போது கணினித் துணையுடன் கற்றல் (Computer Assisted larning) – CAL ஸ்கின்னரின் நிரவித்த கற்பித்தல் பொறியின் வளர்ச்சிப் பரிமாணமேயாகும். மாணவர்கள் சுயமாகக் கற்கும் பாட நிகழ்ச்சி நிரல்கள் CDக்கள் தற்போது பல வெளிவந்துகொண்டிருக்கின்றன. இது ஆசிரியர்களுக்கும் உதவியாக வினைத்திறனை அதிகரிப்பதாகவுமுள்ளது. மேலும் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டிற்குப் பல மென்பொருட்கள் (Soft wares) இன்று உள்ளன. இன்ரநெற்மூலம் பலவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இவைதவிர ஆசிரியர்கள் Ms word, Ms Excel

போன்றவற்றைப் பயன்படுத்திப் பாடநேரத்திற்கு அமைய நிகழ்ச்சி நிரல்களை வடிவமைத்துக் கற்றல் – கற்பித்தற் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தலாம்.

1. பவ்லோவின் பழைய நிபந்தனைப்பாட்டிற்கும், ஸ்கின்னரின் கருவிசார் தொழில் நிபந்தனைப்பாட்டிற்குமிடையிலான வேறு பாடுகளை அட்டவணைப்படுத்துக.
2. ஸ்கின்னரின் மீள வலியுறுத்தலின் அளவுத்திட்டங்களை (Schedules of rein for cement) விளக்குக.
3. நடத்தைவாதக் கோட்பாட்டின் கல்வி நடைமுறைப் பயன்பாட்டிற்கு 3 விடயங்கள் தருக.
4. தோண்டெக்கின் தொடுகைக் கொள்கையே தூண்டித் துலங்கல் கொள்கைகளுக்கும் ஏனைய உளவியற் கொள்கைகளுக்கும் முதன்மையானது. அதுபற்றிச் சிறு விளக்கவுரை தருக.
5. பின்னூட்டல் என்றால் என்ன? சிறுகுறிப்புத் தருக.

பவ்லோவின் பழைய நிபந்தனைப்பாடு	ஸ்கின்னருடைய கருவிசார் தொழில் நிபந்தனைப்பாடு
1. துலங்கலுக்குமுன் மீள வலியுறுத்தல் நிகழும்	துலங்கல்களைத் தொடர்ந்து மீளவலியுறுத்தல் தொடரும்.
2. மீளவலியுறுத்தலே துலங்கலைப் பிறப்பிக்கும்.	கற்போனின்செயலைப் பொறுத்தே மீளவலியுறுத்தல் நிகழும்.
3. உயிரியின் அகவய செயற்பாட்டைக் கலந்தாய வேண்டியிருக்கும்.	மனதிற்குள் – அவயத்திற்குள் நிகழ்வன பற்றிய கற்பனைகள் தவிர்க்கப்படுகின்றது.
4. இரு தூண்டிகள் தொடர்புடையன வாகலாம்.	பல தூண்டிகளும், துலங்கல்களும் தொடர்புபடுகின்றன.
5. மீள வலியுறுத்தல் ஒரு குறிப்பிட்ட தனித்துலங்கலுக்கு வலுவூட்டும்	ஆயிரக் கணக்கான தூண்டல்களை வலியுறுத்த மீள வலியுறுத்தலை வழங்கலாம்.

விடைகள் - 1

1. ஸ்கின்னர் துலங்கல்களை வெவ்வேறு முறைகளினால் மீள வலியுறுத்தும்போது கிடைக்கும் விளைவுகளை ஆராய்ந்து மீள வலியுறுத்தல்களின் நான்கு வகையான அளவுத் திட்டங்களை எடுத்தியம்புகின்றார். தனது புறாப் பரிசோதனையிற் கொத்துதலுக்குத் தானியம் கொடுக்கும் முறைமையினூடு இவ் அளவுத் திட்டங்கள் விளக்கப்படுகின்றன.

   i. மாறாத கால அளவுத் திட்டம் – குறித்த கால இடைவெளியின் (புறா எத்தனை தடவை கொத்தினாலும்) முடிவில் ஒழுங்காகத் தானியம் கொடுக்கப்பட்டு மீளவலியுறுத்தப்பட்டது. (உதாரணம் 5 நிமிடத்துக்கு ஒரு தடவை) இங்கு மீளவலியுறுத்தலுக்கு முன்னதாகப் பல கொத்தல்களை (துலங்கல் களை) புறா கொத்துகிறது. இதற்கு நாளாந்த வாழ்வே உதாரணமாகச் சம்பளத்தினத்தன்று லீவு எடுப்பவர்கள் மிகக் குறைவாகும்.

   ii. மாறும் கால திட்டம் – தானியம் கொடுக்கப்படும் (மீள வலியுறுத்தல்) கால இடைவெளி ஒழுங்கற்றதாக இருக்கும். உதாரணமாகப் பிள்ளையின் நன்னடத்தைக்காக ஆசிரியர் இருநாட்களுக்கு ஒரு தடவையோ கிழமைக்கு ஒரு தடவையோ பிள்ளையைப் பாராட்டுதல்.

   iii. மாறாத விகித அளவுத் திட்டம்

   இதில் ஒவ்வொரு குறிப்பிட்ட எண்ணிக்கைகொண்ட கொத்துதலின் (துலங்கல்) பின்பு தானியம் (மீள வலியுறுத்தல்) வழங்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு 7ஆவது கொத்துக்கும் தானியத்தை வழங்குதல் இந்நிலையில் துலங்கல்கள் மிக வேகத்தில் நிகழும். மீள வலியுறுத்தியபின் ஒரு மந்தநிலை தோன்றும். உதாரணம் தொழிற்சாலை வேலைகள்.

   iv) மாறும் விகித அளவுத் திட்டம்

   புறாவின் கொத்துதல்களின் (துலங்கல்) எண்ணிக்கை ஒழுங்கற்று இருக்கும்போது தானியம் (மீள்வலியுறுத்தல்) வழங்கப்படும்.

உதாரணமாக மூன்று, ஆறு, பத்து, கொத்துக்களின் பின்பு என ஒழுங்கற்ற முறையில் தானியம் வழங்கப்படுகிறது. இதில் மேலும் அதிக துலங்கல்கள் கிடைக்கின்றன. மற்றும் மீள்வலியுறுத்தலைத் தொடர்ந்து மந்த நிலையும் ஏற்பட்டது. ஆசிரியர் வகுப்பறையிற் பரிசு, புகழ்ச்சி, கணிப்புப் போன்றவற்றை இவ் அளவுத்திட்டப்படி வழங்குதல் மிகுந்த பயன் அளிக்கும்.

2. i. கற்பவர்கள் அமைதியாகக் கேட்போராகவும் அல்லது பார்வையாளராக இருப்பதிலும் பார்க்கச் சுறுசுறுப்புள்ள ஒருவராக இருக்க வேண்டும். கற்போரின் துலங்கலையே தூண்டற் கொள்கை வலியுறுத்துகின்றது. அத்துடன் செயன்மூலம் கற்றல் என்பது இங்கு முக்கியப்படுகின்றது.

   ii. புதிய நுட்பங்களைப் பெறவும், தொடர் கற்றல்மூலம் ஞாபகப் படுத்தலை உறுதிப்படுத்தவும் நடத்தைவாதம் பயன்படுகின்றது.

   iii. மீளவலியுறுத்தற் கற்றலின் மிக முக்கியமானது மீளக் கற்றலானது சரியான துலங்கல்களின் ஒழுங்குபடுத்தலாக அமையும்.

3. தோண்டைக்கின் (தூண்டி – துலங்கல்) தொடுகைக் கொள்கை

(Thorndike's theory of Connections)

மிகப் புராதன உளவியற் கொள்கையாக இது இருந்தது. இதனைக் கற்றற் கொள்கைகளினூடு சுலபமாக இணைத்துக் காட்டியவர் தோண்டைக் ஆவார். இவர் நண்பர் வூட்வோர்த்துடன் அமெரிக்கக் கொலம்பியப் பல்கலைக்கழகத்தில் ஒரு பரிசோதனையை நிகழ்த்தினார். பசியுள்ள பூனையைக் கூடு ஒன்றில் அடைத்தார். அது கூட்டினுள் இருந்து வெளியேற விறாண்டி, உதைத்துப் பல முயற்சிகள் செய்தது. பல முயற்சியின்பின் தற்செயலாக ஒரு அழுத்தியை அழுத்தியது. கதவு திறந்து வெளியே வந்தது. மீண்டும் பெட்டியில் அடைக்கப்பட்டது. இவ்வாறு பல தடவை மீண்டும் மீண்டும் அடைக்கும்போது பெட்டியிலிருந்து அது வெளியேறும் நேரமும் குறுகியது. ஒவ்வொரு முறையும் வெளியில் வரும்போது சிறிதளவு உணவும் வழங்கப்பட்டது. இறுதியிற் பெட்டியில் அடைத்ததும் உடனே வெளியேறக் கற்றுக்கொண்டது. இற்கு பூனையின் பசியே ஊக்கலையும்,

செயற்பாட்டையும் அளித்தது. பயன்பாடற்ற செயல்களை விடுத்துப் பயன் பாடுள்ள செயற்பாட்டில் ஈடுபடுதல், கற்றலாக இங்கு பரிணமிக்கின்றது. கற்றல் என்பது தூண்டி – துலங்கல் இணைப்புக்களை ஏற்படுத்தி அவற்றை உறுதிப்படுத்தி ஒழுங்கமைப்பாக்கும் செய்முறையாக இங்கு உள்ளது. இதில் மூன்று விதிகள் கூறப்படுகின்றன. இவ்வாறான பல பரிசோதனைகள்மூலம் தோண்டைக்கின் தொடுகைக் கொள்கை வெளியானது.

i. ஆயத்த விதி: ஒரு தூண்டல் தொடர்பு செயற்பட ஆயத்த நிலையில் உள்ளபோது, உடனே அதனைச் செய்தல் மன நிறைவைத் தரும். கற்றலுக்கு ஆயத்தம் (Readiness) இன்றியமையாதது என இவ்விதி மூலம் விளக்குகின்றார்.

ii. பயிற்சி விதி: ஒரு செயல் திரும்பத் திரும்ப நிகழும்போது அதன் விளைவு உறுதிபெறும். இப் பயிற்சியினால் தூண்டி – துலங்கல் (Stimulus Response) S - R தொடர்பு மேலும் வலுவடையும். அது இல்லாவிட்டால் வலிமை குறைந்து செயல் இழக்கப்படும்.

iii. விளைவு விதி: வெற்றியைத் தரும் துலங்கல்கள் ஒருவனது நடத்தையிற் கூடிய வலிமையைத் தரும் என்பதை இவ்விதி இயம்புகின்றது. வகுப்பறையில் மாணவன் கற்க; ஆசிரியரின் பாராட்டு, அன்பு உதவுவதை இங்கு உதாணமாகக் கூறலாம்.

4. பின்னூட்டல் – (Feed Back)

ஒருவன் கற்கும்போது தனது நடத்தைகளின், செயல்களின் விளைவுகளை அறிந்து கொண்டாற்றான் அவற்றைத் தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்த முடியும். இவ்வகையில் அவன் தன் கற்றற் செயல்களின் விளைவுகளை அறிந்துகொள்ளுமாறு ஏற்பாடு செய்தலே பின்னூட்டல் அல்லது விளைவறிதல் (Knowledge of results) எனப்படும். வாகனம் ஓட்டப் பழகுதல், நீந்துதல் ஒரு பாடத்தைப் பயிலுதல் தொடர்பான திறன்களைக் கற்கும்போது; தவறுகளால் உண்டாகும் விளைவுகளை ஒருவன் தன் செயல்களில் இருந்தே அறிந்து திருத்தி, முன்னேற்றம் அடைகின்றான்.

ஆசிரியர், பெற்றோர், நண்பர்களின் கணிப்புக்கள், புத்தகங்களிலுள்ள விடைகள், சூழல் நிலைமைகள், தொடர்புச் சாதனங்கள்மூலமும் பிள்ளைகள் பின்னூட்டலைப் பெற்றுக் கற்றுக்கொள்கின்றார்கள். தான் செய்பவை சரியா, பிழையா என மதிப்பிடுவதற்குப் பின்னூட்டல் கிடைக்காவிடில் ஒருவன் சரியான பழக்கங்களை இலகுவிற் கற்க முடியாது. குறித்த கற்றல் செயலுக்கும், பின்னூட்டலுக்கும் இடையிலுள்ள கால இடைவெளியைப் பொறுத்தே பின்னூட்டலின் பயன்பாடு அமைந்திருக்கும். ஒரு துலங்கல் நிகழ்ந்து நீண்ட காலத்திற்குப் பிறகு பின்னூட்டல் வழங்கப்படுமானால் கற்றலில் விருத்தியைக் காணமுடியாது. எனவே, பின்னூட்டல் உடனடியாக வழங்கப்படவேண்டும். எவ்வளவு விரைவாகப் பின்னூட்டல் வழங்கப்பட வேண்டும் என்பது கற்பவருடைய தன்மையிலும் கற்கும் விடயத்திலும் தங்கியுள்ளது. கற்பவர் தவறுகளை உடனடியாகத் திருத்திச் சரியாகவும், திறமையாகவும் கற்பிப்பதற்குப் பின்னூட்டல் காலதாமதமின்றி வழங்கப்படல் வேண்டும். சரியான பின்னூட்டற் செயன்முறையே கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்தும்.

சமூகக் கற்றற் கொள்கை

(புதிய நடத்தை வாதம் – **New Behaviorism**)

அல்போர்ட் பண்டியூரா 1961ஆம் ஆண்டு சமூகக் கற்றற் கொள்கையைப் பல்வேறு ஆய்வுகளினூடாக வெளியிட்டார். இவர் நிபந்தனைப்பாட்டிற்கு வேறுபட்ட ஒரு வகைக் கற்றலை இயம்புகின்றார். இதன் அடிப்படையானது அவதானிப்புக் கற்றல் அல்லது இன்னொருவரின் நடத்தையைப் பார்வையிடுவதால் ஏற்பட்ட கற்றலாகும். அவதானிப்புமூலம் நடத்தையைக் கற்றுக்கொள்வது புலக்காட்சிக் குறியீட்டு வடிவிலாகும். இதற்கு எவ்வித புறீள வலியுறுத்தல் பெரும்பாலும் அறிவித்தற் செயற்பாடாகவும், ஊக்கற் செயற்பாடாகவும் காணப்படுகிறதே தவிர, துலங்கலை வலுப்படுத்துவதாக இல்லை. மேலும், மனித சிந்தனையின் தலையீட்டினால் பிறக்கும் விளைவுகள் மனித நடத்தைகளை மாற்றுகின்றன என்பதைத் தெரிவிக்கும் பண்டியூரா; மாதிரிகளை அவதானிப்பதன்மூலம் கற்றலின் நான்கு நிலைகளை இயம்புகின்றார். அவை கவனம் எடுத்தல், நிலைநிறுத்தல்,

பின்பற்றல், ஊக்கல் நிலை என்பவையாகும். இவ்வாறாக அவதானித்துக் கற்றலின் பகுப்பாய்வு பின் வருமாறு உள்ளது.

மாதிரியான நிகழ்ச்சி	→	கவனநிலை	→	நிலைநிறுத்தும் நிலை	→	பின்பற்றும் நிலை	→	ஊக்கல் நிலை	→	சரிசமனாக்கும் நிலை

i. கவனம் எடுத்தல் நிலை: கவனமின்றி எந்தக் கற்றலும் நிகழாது. கற்கும்போது கவனம் சரியாக வழிப்படுத்தப்படாமையே பெரும்பாலும் கற்றல் நடத்தையைச் சரியாகப் பின்பற்றாமைக்குக் காரணமாகின்றது. உதாரணமாகக் குமரப் பருவத்தில் தமக்கு ஆதரவு காட்டும் மாதிரிகளைக் கவனித்துப் பின்பற்றும் பண்பு தெளிவாகத் தோன்றுகிறது. இது எல்லாப் பருவத்திலும் நிகழ்வாகத் தெரியப்படுத்துகிறது. ஒரு குறித்த விடயத்தைப் பரீட்சிப்போம் என ஆசிரியர் கூறுவது மாணவர் கவனத்தைத் தூண்டுவதாகவும் அமையும்.

ii. நிலைநிறுத்தல் அல்லது ஞாபகப்படுத்தல்: தான் பார்த்தவற்றை, கேட்டவற்றைக் கற்போன் இச்சந்தர்ப்பத்தில் களஞ்சியப்படுத்து கின்றான். மாதிரியின் செயற்பாடுகளை அவதானித்துச் சொல் சார்ந்த குறியீடாக்கி, உருவெளிப்பாடாக்கி அதனைத் தெளிவாக நிலைநிறுத்திக்கொள்ளும் நிலையை இது குறிக்கின்றது.

iii. பின்பற்றும் நிலை– இது அவதானித்தவற்றை உடலியக்கமூலம் திரும்பச் செயலாக்குவதைக் குறிக்கின்றது. கற்றவற்றை இடமாற்றம் செய்வதையும் குறிப்பதாகவுள்ளது. இந்நிலையில் கற்றவர்களின் செயற்பாடுகளை எச்சரிக்கையுடன் அவதானித் தல் அவசியம்.

iv. ஊக்கநிலை: பிறரது செயற்பாடுகளை, கற்பித்தலை அவதானிப் பதால் பெறப்படும் நடத்தை; மீள வலியுறுத்தப்பட்டால் அது பின்பற்றப்படும் என்பதை இந்நிலை தெரிவிக்கின்றது. உதாரணமாக அண்ணன் பாடசாலையில் சிறந்த பெறுபேற்றிற்குப் பாராட்டப்பெறும்போது தம்பிக்கு அது மீள வலியுறுத்தலாகிய கற்றலில் ஊக்கலை ஏற்படுத்தும்.

நவீன சமூகக் கற்றற் கொள்கையினர் தற்போதைய சமூகச் சூழலில் மாணவர்கள், இளைஞர்கள் மோசமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், படங்களைப் பார்த்தல், கணினி நிகழ்ச்சிகளைப் பார்த்தல் மிக அதிகமாகவுள்ளது. இந்நிலை ஆக்கபூர்வமானதல்ல என்றும், இவற்றிற்கு நிகழ்ச்சிகளைத் தயாரிப்போர் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர். மேலும், இலங்கையிற் பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பாகச் சமூகக் கற்றல் முறையியலில் ஆய்வு செய்த இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினர்; இலங்கையிலுள்ள பெரும்பாலான ஆசிரியர்கள்; பாடசாலை மாணவர்கள், குமரப்பருவத்தினர், ஏழை இளைஞர்களும் பின்பற்றக்கூடிய மாதிரிகள் இல்லை என்றும் வீட்டுச் சூழலும் முறையாகப் பிற்பற்றக்கூடிய முறையில் இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

மண்டல அறிதற் கொள்கை

நடத்தைவாதக் கொள்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட, இக் கொள்கை; பிரச்சினைகளைத் தீர்க்கக் கற்பவர்கள் பலநோக்கங்களை மனதிற்கொண்டு நிறைவேற்றுவர். புலக்காட்சி, அகக் காட்சிகளினூடும், நோக்கங்களை அடைவதற்கான மன அமைப்பு நடைமுறைகளோடும் கூடிய கற்றலை மண்டல அறிதற் கொள்கை இயம்புகின்றது. இது மூன்று வகையாகவுள்ளது.

1. கெஸ்ரோல்ட் கொள்கை
2. எச்.கோட் லெசினின் மண்டலக் கொள்கை
3. இ.சி.ரோல்மனின் குறிக்கற்றற் கொள்கை

கெஸ்ரோல்ட் (Gestalt) கொள்கை

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த கொவ்கா (1884 – 1941), கோலர் (1889 – 1959), வேதீமா (1880 – 1943) ஆகியோர் கெஸ்ரோல் உளவியற் கொள்கையை உருவாக்கினர். இங்கு தெரிவிக்கப்பட்ட கொஸ்ரோல் எனப் பட்ட ஜேர்மனியச் சொல்லின் பொருள்; அமைப்பு, உருவம், தோற்றம், மனவெழுச்சியின் தனிக் கூறுகளின் வடிவம், அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுச் சடுதியாக உள அகக் காட்சிகள்மூலம் பெற்ற ஒழுங்கமைப்பினூடு பிரச்சினையைத் நீர்க்கும் முறைமையைக் கெஸ்ரோல்ட் உளவியல் எடுத்துக்கூறுகின்றது.

கோலரின் பரிசோதனை

கோலர் மனிதக் குரங்குகளிற் பல பரிசோதனைகளை நடத்தினார். அதில் ஒன்று இங்கே தரப்படுகின்றது. சுல்டான் (Sultan) என்ற மனிதக் குரங்கிற்கு எட்டாத உயரத்தில் வாழைப்பழம் வைக்கப்பட்டிருந்தது. சுல்டானின் பிரச்சினை வாழைப்பழத்தைப் பெறுவதேயாகும். குரங்குக்

கூட்டில் இரு மூங்கிற் குழாய்த் தடிகள் முற்கூட்டியே போடப்பட்டிருந்தன. அதில் ஒரு தடியைக் கொண்டு பழத்தை எட்ட முடியவில்லை. பலமுறை முயற்சி செய்து ஓய்ந்திருந்தது. இரு தடிகளையும் வைத்து விளையாடியது. அப்போது இரு தடிகளையும் இணைத்து விடையைக் கண்டுகொண்டது. பெரிய தடியின் ஒரு புறத்தில் சிறியதடியைப் பொருத்தியது. தடி நீண்டதாயிற்று பலமுறை முயன்றே விடையைக் கண்டது. ஆனால், புதிய கண்டுபிடிப்பை உடனடியாகப் பயன்படுத்தி வாழைப்பழத்தைத் தட்டி எடுத்தது.

குரங்கின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கெஸ்ரோல்ட் உளவியலாளர் கொடுக்கும் விளக்கம் தோண்டெக்கின் முயன்று தவறிக் கற்றலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்திலும் வேறுபட்டது. மனிதக் குரங்கின் நடத்தையில் திடீரென மாறுதல் ஏற்படக் காரணம் நிலைமையிலிருந்த கூறுகளை மறுசீரமைத்தல் எனக் கோலர் விளக்குகின்றார். இங்கு குரங்கு தன்னையண்டிய சூழலின் புலக் காட்சிக்கவனத்தைச் சீர்தூக்கியது. தனிப்பட்ட தூண்டிகளுக்குத் துலங்காது, நிலைமைகளை முழுமையாகப் பார்த்து அதனைக் கருத்துள்ள முறையில் உள்ளத்தில் ஒழுங்குபடுத்தியது. இவ்வகையான ஒழுங்கு, தொழில்நுட்பம், அகக்காட்சி (Insight) எனப் படுகின்றது. குரங்கின் உடனடி இடமாற்றம் அக்காட்சியில் தேர்ச்சி பெற்றமையே ஆகும். அக்கக்காட்சியில் இரு பண்புகள் உள்ளன எனக் கொஸ்ரோல்ட் உளவியலறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

1. மீள் பிரயோகம் – ஒருவர் இரண்டாவது தடவை அதே வகைப் பிரச்சினையை எதிர்நோக்கும்போது முதலிற் பயன்படுத்திய முறையை விரைவாகப் பிரயோகிப்பர்.
2. அகக்காட்சிமுறை இடமாற்றம்: ஒருவர் ஒத்த வகைப் பிரச்சினையையே பயன்படுத்துவார்.

முக்கிய புலனுணர்ச்சிக் காட்சிகளுக்கு மனித உள்ளம் ஓர் ஒழுங்கமைப் பைக் கொடுக்கின்றது. மேலும், உள்ளம் தூண்டிகளைப் புலனுணர்ச்சி களுடன் இணைக்கும் ஒரு கருவியல்ல. புலனுணர்ச்சிகளைத் தொகுத்து அமைப்பாக்கும் கருவியாக அது உள்ளது. சூழலைத் திருத்தமாகத்

தேவைக்கு ஏற்ப அமைப்பாக்குதல் தொழிற்பாடுகள், மனித உள்ளத்தில் முழுமையாக நிகழ்வதாலே கற்றல் நிகழ்கின்றது. கற்றலைக் கொஸ்ரோல்ட் உளவியலாளர்கள் அகக் காட்சிபெறுதல் எனக் கூறுகின்றனர்.

1. கொஸ்ரோல்ட் உளவியற் கொள்கை எவ்வாறு வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுகின்றது.

2. இக் கொள்கையில் உருவமும் பின்னணியும் பற்றிச் சிறு குறிப்பொன்று தருக?

3. இக் கொள்கையினூடு அறிவுசார் செயற்பாடான பகுதிகளின் சேர்க்கையினால் முழுமை எப்படி உருவாகிறது என்பது பற்றிய புலக்காட்சி விதிகளைத் தருக?

விடைகள்: 1

1. மாணவர்களின் கற்றற் குறிப்பான நோக்கத்தோடு கூடிய ஒரு முயற்சியாகும். இக்கற்றல் நோக்கம் பொறிமுறையான ஒன்றல்ல. உள்ளத்துடன் தொடர்புடைய புலக்காட்சித் தொழிற்பாடு என்ற வகையிற் கற்றலுக்கான வழியை இயம்புகின்றது.

2. கற்பிக்கப்படும் பாடத்திற்குப் பொருத்தமான பின்னணிகள் யாவும் ஆசிரியரால் கொண்டுவரப்படுவதுடன், பாட ஆரம்பத்தில் முழுமையான முன்னுரை ஒன்றை வழங்குதல் வேண்டும் என்கின்றது.

3. அறிவை ஒழுங்குபடுத்துதல் ஓர் ஆசிரியரின் அல்லது கல்வித்திட்டமிடுபவரின் முக்கிய கடமையாக இருத்தல்வேண்டும். மனப்பாடம் செய்தல், சூத்திரங்களை மனனம் செய்தலைவிட விளங்கிக் கற்கும் நிலையின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

4. கற்றலின் இறுதி, நடத்தையைவிட கற்கும் நடைமுறை அதிக முக்கியமானதாகவும், வெறும் அறிவைவிடப் புதிய சூழ்நிலைகளுக்கு ஒத்துழைக்கத் தயாராகும் முழுமையான செயற்பாட்டுக் கல்வியின் பயனை உணர்த்துகின்றது.

2. உருவமும் பின்னணியும்

பார்வைத் தூண்டியின் புலக்காட்சி உருவ அமைப்பு, பெரும்பாலும் தரை உருவத் தோற்றத்தில் தங்கியுள்ளது. இப்படத்தை நீங்கள் பார்க்கும்போது புலக்காட்சி தெளிவான புறவரைக் கோட்டிலும், உருவ அமைப்பிலும் தங்கியுள்ளது. பின்னணியும் தெளிவாகவுள்ளது. இதில் ஏதாவது ஒன்றின் புலக்காட்சியைத் தீர்மானிப்பதாக அதன் பகுதிகள் மட்டுமல்ல; முழுமையும் அக – உளவய ஒழுங்கமைப்புமேயாகும். இருமனித முகங்கள் – பூச்சாடி இங்கு வெள்ளை நிறம் புலக்காட்சி பெறும்போது பூச்சாடியும், கறுப்புநிறம் புலக்காட்சி பெறும்போது இருமனித முகங்களும் தெரிகின்றன. இத் தெரிவுகள் அகக்காட்சிமூலமே உறுதி பெறுகின்றன. இவ்வாறே இரண்டாவது படத்தைக் கண்டு பிடியுங்கள்.

3. அண்மைவிதி, ஒப்புமை விதி, தொடர்ச்சிவிதி, நிறைவுவிதி, முடித்தல் விதி, சமச்சீர்விதி, இடமாற்றுகைவிதி என்பனவாகும். இதில் உதாரணமாக அண்மைவிதியை நோக்கின் அண்மையிலுள்ள புள்ளிகள் புலக்காட்சியில் ஒன்றாகச் சேருவதைத் தெரிவிக்கின்றது. கீழுள்ள படத்தை நோக்குகையில் முதலிரு கோடுகளையும், ஒரு சோடியாகப் பெறுகின்றோம். ஆனால் BC, DE கோடுகள் ஒன்றாகப் புலக்காட்சி பெறுவதில்லை என்பதை இவ்விதி விளக்குகின்றது.



எச் கேட் வெலினின் மண்டலக் கொகை

மனிதர்களது ஒவ்வொரு நடத்தைகளும் ஏதாவதொரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இவர்கள் சமூக அல்லது பௌதிகப் பின்னணியிற் காணப்படுவர். இச் சமூக – பௌதிக மண்டலங்களிலுள்ள பல்வேறுபட்ட அம்சங்கள் நடத்தைமீதும் கற்றல் மீதும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஆசிரியர் கற்றற் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது மாணவர்களின் பௌதிக – சமூகப் பின்னணியைக் கவனத்திற்கு எடுக்கவேண்டும். மேலும், வகுப்பறையின் பௌதிக சமூகச் சூழலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இக்கொள்கையில் மிக முக்கியமாக வலியுறுத்தப் படுவது; மாணவர்களின் கற்றற் செயல் நடைபெறும்பொழுது அவர்கள் அதில் அக்கறையுடன் ஈடுபாடு காட்டுவதையே ஆகும். மேலும், ஆசிரியர் – மாணவர்களுக்கிடையிலான தொடர்புகளும் முக்கியம் பெறுகின்றன. இத் தொடர்புகளால் மாணவர்களில் உளவியல் தொடர்புகளும் ஏற்பட்டு ஆக்கபூர்வக் கற்றல் இடைவினை நிகழும்.

இ.சி. ரோல்மனின் குறி கற்றற் கொள்கை

பல்வேறு பரிசோதனைகள்மூலம் இ.சி.ரோல்மன் மனிதர்களிடம் இடம்பெறும் எல்லா வகையான கற்றற் செயற்பாடுகளும், தூண்டி, துலங்கல்களின் பொறிமுறையிலான கற்றலுக்குட்பட்டன என்பதை நிராகரித்தார். மேலும் உள உருவ அமைப்பே கற்றலிற் செல்வாக்குச் செலுத்துவதாகத் தெரிவிக்கின்றார்.

இதற்குப் பின்வரும் காரணிகளின் செயலாற்றுகைகள் உதவுகின்றன

1. தனிப்பட்டவர்களின் மூளை நரம்புத் தொகுதி அமைப்பு
2. உள்ளார்ந்த உள ஊக்கல் தன்மைகள்
3. முன்னர் பெற்ற அனுபவங்கள்
4. பிரச்சினைகளின் தன்மைகள்

இவற்றினூடு குறிக்கோள் கற்றல் முறையை நோக்கின்; எதிர்நோக்கப் பட்ட பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு பல்வேறு பரிசோதனைகளாற் பெறப்பட்ட அறிவின்படி புதிய முறையியல் நடத்தைகளை அமைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முறையாகவுள்ளது. இங்கு குறிகளையும், சாடைகளையும் பயன்படுத்தி, நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழிகாட்டுகின்றது. மேலும், பாடசாலை ஆசிரியர்கள், கற்கும் மாணவர்களின் ஆற்றல்கள், சக்திகள்மீது நம்பிக்கை வைத்துக் கற்பித்தலில் ஈடுபடவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தரம் 5 இற் பயிலும் சராசரி நுண்ணறிவுமட்ட மாணவன் பற்றிய ஆய்வின்போது வெளியான விடயங்கள் பின்வருமாறு; வாசிப்பதும், எழுதுவதும், படங்களை விளங்கிக் கொள்வதிலும் சிரமப்படுகின்றான். ஆசிரியர் கூறுவது உடனடியாக விளங்குவது இல்லை. செய்தி ஒன்றை உள்ளது உள்ளவாறு கூறவும் முடியாது. ஒரு வாரத்திற்கான நாட்களின் எண்ணிக்கையையோ, மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கையையோ சராசரியாகக் கூறமுடியாதுள்ளான்.

1. மேற்படி தகவலுக்கேற்ப மாணவனிடம் காணும் பலவீனங்களைத் தருக.
2. இப்பலவீனங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்களை எழுதுக.
3. இம் மாணவன் உமது வகுப்பிற் கற்றல் மேற்கொள்ளவேண்டிய பரிகாரங்களைத் தருக.
4. கற்றல் பற்றி நடத்தைவாத, அறிவுப்புலவாதக் கோட்பாடுகளின் வேறுபாடுகளைத் தருக.

விடைகள்:

1. புலக்காட்சி பெறுவதில் குறைபாடு, தொடர்பாடல் திறன் குறைபாடு, அடிப்படை அறிவு இல்லாமை.

2. மெய்யான அனுபவம் கிடைக்காமை, சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்காமை, அடிப்படைக் கற்றல் திறன்கள் இன்மை (எழுத்து, வாசிப்பு, கணிதம்)

3. அவனது பிரச்சினைகளைச் சரியாக இனம் கண்டு உண்மை அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்தல். அடிப்படைக் கணித, வாசிப்பு, எழுத்து, எண்ணக்கருக்களைப் பெற்றுக்கொடுத்தல். தொடர் பாடலை விருத்தி செய்வதற்கான பல்வேறு நடைமுறை நுட்பங்களைக் கையாண்டு வழிப்படுத்தல். ஏனைய தேவைகளை இனம்கண்டு ஆற்றுப்படுத்தல்.

4. ✠ நடத்தை வாதத்தின் உயிரினங்களின் நடத்தை மற்றும் துலங்கல் அடிப்படையிற் கற்றல் இடம்பெறுகின்றது. அறிவுப்புல வாதத்திற் கற்றற் செயற்பாடு, உள அமைப்புச் செயற்பாடுகளின் ஒழுங் கமைப்பினூடு இடம்பெறுகின்றது.

✠ நடத்தைவாதத்தின் பிரதானமானவற்றிற் கூடுதற் கவனம் எடுக்கப்படுகின்றது. ஆனால் அறிதற்புல வாதத்தில் முழுமை யான புலக்காட்சியிற் கூடிய அவதானம் செலுத்தப்படுகின்றது.

✠ பிரபல்யமான ஊக்குவிப்புக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப் படுகின்றது. அறிதல் புலவாதத்தில் இது தொடர்பான உருவமும், பின்னணியும் சமச்சீர்க் கோட்பாடு, அண்மை விதிக் கோட்பாடு, ஒப்புமை இடமாற்றக் கோட்பாடுகளில் முக்கியத்துவம் வழங்கப் படுகின்றது.

✠ நடத்தைவாதத்தில் பெரும்பாலும் நாய், பூனை, எலி போன்ற பிராணிகள் பயன்படுத்திக்கொள்ள, அறிதல், புலவாதத்தில் சிம்பன்சி மனிதக் குரங்குகளைக் கூடுதலாகப் பயன்படுத்தி ஆய்வுகளைச் செய்தனர்.

உளவியலின் புதிய செல் நெறிகள்

உலகளாவிய ரீதியில் விஞ்ஞான – தொழில்நுட்ப அபிவிருத்திகள் இன்று பிரமிக்கத்தக்க அளவில் ஏற்பட்டுள்ளன. இவ் அபிவிருத்திகளால் மனித வாழ்வு எளிதாகவும், இலகுவாகவும் உள்ளது. பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் மனிதர்களுடைய சொந்த வாழ்க்கையில்; துன்பங்களும், துயரங்களும், மன அமைதி இன்மைகளும், மனமுறிவுகளும், உளக்கோளாறுகளும், மன அழுத்தங்களும், விரக்தியும் என்றும் இருந்திராத அளவு அதிகரித்துள்ளன.

இவற்றிலிருந்து விடுதலை பெறவும் மகிழ்ச்சியாக வாழவும் பிரயோக உளவியல் வழிகாட்டுகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் உளவியல் கல்வி முதன்மைப் பாடநெறியாக வளர்ந்து வருகின்றது. உளவியல் (Psychology) என்ற சொல், கிரேக்க மொழிச் சொற்களான சைக்கி ஐ (Psyshe) என்ற உயிரை அல்லது காதல் தெய்வமான ஈரோசை உருவகப்படுத்துகின்றது. லோகஸ் (Logus) என்ற சொல் விஞ்ஞானம் அல்லது மேற்குறிப்பிட்ட கிரேக்க காதல் தெய்வத்தின் வண்ணத்துப் பூச்சியின் அழகிய இறக்கையைக் கருத்துரைக்கின்றது.

மகிழ்ச்சிகரமாக மனிதன் வாழ; அன்பு, பொறுமை, மனநலம், சுயமதிப்பு, ஒத்துழைப்பு, மனநிறைவு பெற பிரயோக உளவியல் செயன்முறைகள் உதவுகின்றன. அன்பும், காதலும், கருணையும், பொருந்திய விழுமிய வாழ்க்கை வாழவும், மனித வள அபிவிருத்தியை முதன்மைப்படுத்தவும், மன நலவியல் (Mental Hygine) துறையை மேலும் விரிவான பயன்பாடுடையதாக்கவும் பிரயோக உளவியல் உதவுகின்றது. மனித உறவுகளைப் புரிந்து கொள்ளவும், உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், பரிமாறவும், மனச்சுமைகளைக் குறைக்கவும், மனிதர் களிடையே தூய்மையான உறவுகளை ஏற்படுத்தவும் பிரயோக உளவியல் இயல்பாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

மனிதனின் புறச்செயல்கள், நடத்தைகளை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன்மூலம் அவை; எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றாடல் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே பிரயோக உளவியலாகும். இதன் நோக்கங்களாக, மனித நடத்தைகளை விபரித்தல், முன் கூட்டியே கணித்தல், கட்டுப்படுத்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், உள ஊக்குவிப்புக்களை ஏற்படுத்தல், ஆளுமைகளை விருத்தியாக்கல், ஆக்கத்திறன் – நுண்ணறிவு – ஆய்வுத்திறன், மற்றும் கற்றவைகளை விருத்தியாக்குதல், இவற்றினூடாக மகிழ்ச்சிகரமான உளநலம் மிக்க மனித வாழ்வை ஏற்படுத்தலாகவுள்ளது. இதற்கு நவீன பிரயோக உளவியல் செல்நெறிகள் மன நல்வியலின் அடிப்படைகளைச் செயன்முறைப்படுத்துகின்றன.

மனநலம் என்பது மனக்கோளாறுகள் இல்லாமையுடன் தனக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியையும், பயனையும் விளைவிக்கும் வகையில் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பொருத்தப்பாட்டுடன் செயற் படுவதைக் குறிக்கின்றது. இங்கு பொருத்தப்பாட்டுடன் செயற்படுவதைக் குறிக்கின்றது. இங்கு பொருத்தப்பாட்டினைப் பெறுதல் என்பது எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய முடிவான செயல் அன்று. சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ப ஒருவர் தொடர்ந்து இச்செயலில் ஈடுபட வேண்டும். இதன் அவசியத்தைப் பிரயோக உளவியல் எடுத்தியம்புகின்றது.

மனிதர்களிடையே மன நோய்கள், மனத்தாக்கங்கள், கோளாறு கள் ஏற்படாமல் தடுக்கவும், மன நலத்தைப்பேணி மன நோய்களில் இருந்து விடுபடச் செய்வதற்கும் உதவும். பிரயோக அறிவியலாக மன நலவியல் உள்ளது. அமெரிக்க உள மருத்துவக் கழகம் (American Psychiatric Association) மன நலவியலைப் பின்வருமாறு வரையறுக்கின்றது. "மனநலவியல் என்பது மனக்கோளாறுகளை அவை ஏற்படும் முன்பே தடுத்தும், ஏற்பட்ட பின்பு தொடக்கத்திலேயே சிகிச்சை அளித்தும், மனக் கோளாறுகளுக்கு ஆட்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான

வழிமுறைகளைப் பரப்புவதையும், மன நலத்தைப் பேணும் முறைகளையும் பயிற்சிகளையும் உள்ளடக்கியது ஆகும் என்கின்றது.

மனநலம் பாதிக்கப்படுவதற்கான காரணங்கள்

1. நவீன மனித வாழ்க்கை முறைமையில் தேவைகளும், பிரச்சினைகளும் பெருகியுள்ளமை.
2. குடும்ப உறவினர்களிடையே புரிந்துணர்வுகள், ஊடாட்டங்கள் அற்ற நிலை.
3. போட்டிகள், பூசல்கள், பொறாமைகள் அதிகரித்து அவற்றினால் ஏற்பட்ட தாக்கங்கள், கவலைகள்.
4. வாழ்க்கை பற்றிய அச்ச உணர்வுகள்.
5. காப்புணர்ச்சி எல்லோரிடத்திலும் குறைந்து காணப்படல்.
6. சமயம், குடும்பம் ஆகிய முக்கிய அலகுகளின் செல்வாக்குகள் குறைந்துள்ளமை.
7. யுத்தங்கள், இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்கள்.

நான் உயர்தரம் கல்வி பயிலும் மாணவன். வீட்டிலும், பாடசாலைகளிலும் எனக்கு அதிக கட்டுப்பாடுகள் போல் தெரிகிறது. ஆனால் சமூகத்தில் பெருமளவு சுதந்திரம் உள்ளது. எனது பிரச்சினைகள் தொடர்பாக எவரும் கரிசனை எடுப்பதாக இல்லை. படிப்பதற்கும் பயமாக உள்ளது. ஊரில் சமூகவிரோத செயற்பாடுகளைச் செய்கின்றேன். இரவில் நித்திரை வருவதில்லை. தற்போது என்னை உளவள நிபுணரிடம் எனது பெற்றோர் அனுப்பியுள்ளனர். எனக்கு மன நின்மதி கிடைக்குமா?

1. இருவருக்கு நிம்மதியை வழங்க குடும்பத்தின் பங்களிப்பையும் பாடசாலையின் பங்களிப்பையும் தருக?
2. மன நலம் பற்றி பிரயோக உளவியலறிஞர் ஹேட் பீல்டு (Hadfield) தெரிவிப்பது என்ன? மனநலம் மிக்கவரின் பண்புகளைத் தருக?

விடைகள்

1. **குடும்பப் பங்களிப்பு:** தேவையற்ற கட்டுப்பாடுகளை நீக்குதல், அடிப்படை வசதிகளை அளித்தல், குடும்பப் பிணக்குகளைத் தீர்த்து பரிவுடன் அணுகுதல், அவரது தனியாள் வேற்றுமை, விருப்பு, வெறுப்புக்களை அறிந்து இயைபாக்கச் செயன்முறைகளை மேற்கொள்ளல்.

பாடசாலை பங்களிப்பு:

மகிழ்ச்சிகரமான கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்தல், பயனுள்ள – கவர்ச்சிகரமான கற்பித்தல், ஆசிரியர் சிறந்த உறவைக் கட்டி எழுப்புதல், இணைப்பாட விதானச் செயற்பாடுகள் (Co-curricularactivies) மூலம் சமநிலை ஆளுமையை விருத்தியாக்கல்.

2. **ஹட்பீல்டு :** " மனநலம் என்பது ஒருவனது ஆளுமையின் நிறைவான, இசைவான செயற்பாட்டைக் குறிக்கும். இது ஒருவன் தனக்கும், சமூகத்திற்கும் நிறைவைத் தருகின்ற செயல்முறையாக இருக்கும்.

மனநலம் மிக்கவரின் பண்புகள் :

அமைதியும், மகிழ்ச்சியுமான வாழ்க்கை, வெளி – உள் போராட்டங்களின் விளைவுகளால் பாதிக்கப்படாமை, தனது வல்லமைகள், குறைபாடுகளை உணர்ந்து செயலாற்றல், பிறருடன் ஒத்துழைத்து நட்புறவாகி காப்புணர்வு பெறல், வாழ்க்கை நோக்கங்களுக் கேற்ற செயலாற்றுகை, சமநிலை ஆளுமைத் தன்மை, உடல் – உள்ளம் – சமூகம் – ஆன்மீகம் என்பவற்றுடனான உன்னத மேம்பாடுடையவராக இருத்தல்.

பொருத்தப்பாடின்மை - நெறிபிறழ்வு

சமகால வாழ்வியலில் குடும்பம், பாடசாலை, சமூகக்காரணிகளின் தாக்கங்களால் பாதிப்படைந்தவர்களின் நடத்தைகள் பொருத்தப் பாடற்றவையாக (Maladjustment) மற்றும் நெறி பிறழ் நடத்தையாகி (Delinquency) விடுகின்றன. மன முறிவுகளும், மனப்போராட்டங்களும் இதற்கு வலுச் சேர்க்கின்றன. தனி மனிதர்களிடம் பல தேவைகள் (Needs) காணப்படுகின்றன. இவை நடத்தைகளுக்குப் பின்னால் இருந்து இயக்கும் ஊக்கிகளாகும். தேவைகளை நிறைவு செய்யும் இலக்கை நோக்கி முயற்சிக் கின்றபோது தொடர்ச்சியான தடைகள் இடையூறுகள் தோன்றுகின்றபோது மன முறிவுகளும் மனப்போராட்டங்களும் ஏற்படுகின்றன. இதன் விளைவுகளே பொருத்தப்பாடின்மையும், நெறிபிறழ்வுகளாகவும் ஏற்படுகின் றன.

தேவைகள்
விருப்பங்கள்
ஊக்கிகள் → உந்தல் → தடை முயற்சிகள் → இலக்கு

இடையூறுகள்

மனிதன் தனது வாழ்க்கையின் இலக்கை அடையச் செய்கின்ற துலங்கல்களை அடைவிடாமல் தடுத்து நிறுத்தும் காரணிகளால் மனப்போராட்டங்களும் நெறிபிறழ்வுகளும் ஏற்படுகின்றன.

நெறிபிறழ்வு பொருத்தப்பாடின்மை, நடத்தை, பற்றிய எண்ணக்கருப்படம்



நெறிபிறழ்வுகள் பெரும்பாலும் முரண்பட்ட மனஎழுச்சிகளால் ஏற்படும். மனப் போராட்டங்களின் தீவிர விளைவுகளாகும். உலகம் முழுவதுமே இதைத் தீர்ப்பதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரயோக உளவியல் பல தீர்வு நடைமுறைகளைச் சமுதாய நல உளவியல் என்ற எண்ணக்கருச் செயன் முறைகளினூடாக மேற்கொண்டு வருகின்றது.

சமுதாய நல உளவியல்

பிரயோக உளவியலில் மிக அண்மையில் நிகழ்ந்துள்ள புரட்சிகரமான வளர்ச்சிகளில் ஒன்றாக சமுதாய நல உளவியல் அமைந்துள்ளது. மனிதருடைய நடத்தைகள் பிரச்சினைகளையும், சமுதாயம்சார், பிரச்சினை களையும் தீர்ப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றல் பெற்றுள்ள இடமாகச் சமுதாயம் கருதப்படுகின்றது. சமுதாய நல உளவியல் மனிதப்பிரச் சினைகளுக்கு ஏற்றதோர் புதிய அணுகுமுறையாக விளங்குகின்றது.

மனிதப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சமுதாயச் சூழ்நிலையின் ஆற்றல்களைப் பயன்படுத்துதல் என்ற வகையில் மனநலப்பணியாளர்கள், ஆசிரியர்கள்; உள – நெறி பிறழ்வுப் பிரச்சினைகள் அவர்களைத் தேடி வருவதற்குக் காத்திருப்பதைவிட, தாமே அவற்றைத் தேடிச்சென்று தீர்க்க வேண்டும். என்பதை சமுதாய நல உளவியல் இயம்புகின்றது.

சமூகம், பாடசாலை, குடும்பங்களில் வாழ்கின்றவர்கள், மெய்ப்பாட்டு நெருக்கடி, மன முறிவு, பொருளாதார மனமுறிவு, ஏழ்மை, குடும்பத்தினர் ஒருவரின் இழப்பு, பிளவுபட்ட குடும்பம், திருமணமுறிவு, பாடசாலையை விட்டு இடைவிலகல், பாலியல் பிரச்சினைகள், குடி, போதைப்பொருள் பாவனைகள், வன்முறைகள், யுத்தம் இயற்கை அழிவுத் தாக்கங்களுக்கு உட்பட்டவர் களுக்கு உளவியல் ரீதியான ஆதரவை வழங்கி தீர்வுகளைக் காணவும் சமுதாய நல உளவியல் வழி செய்கின்றது.

ஆளுமை

ஆசிரியர்களுக்கான கல்வி உளவியல் இன்று மனிதவள விருத்தித்துறையாகவே அபிவிருத்தியடைந்துள்ளது. இதற்கு ஆழமானதும் விரிவானதுமான பொருள் கொண்ட ஆளுமை (Personality) பெரும் பங்காற்றுகின்றது. Personality என்ற சொல் லத்தீன் மொழியிலுள்ள "பர்ஸொனா" என்ற சொல்லில் இருந்து பிறந்தது. நாடக மேடையில் பழைய காலத்தில் நடிப்பவர்கள் தாங்கள் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்புகளுக்குத் தக்கபடி அணிந்திருந்த முகமூடியை "பர்ஸனாலிடி" என்ற லத்தீன் சொல் குறிக்கின்றது. முன்னைய காலத்தில் ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றமே ஆளுமை எனப்பட்டது. ஆளுமையானது ஒருவனது தனித்தன்மைவாய்ந்த அமைப்பு (Unique Pattern) என்கிறார் உளவியலறிஞர் கில்போர்ட்.

கல்வி உளவியலில் ஆளுமை என்பது; ஒரு உயிரியல் உயிரிக்கும் (Biological Organism), அதன் சமூக மற்றும் பிற உலகுக்கும் இடையே நடக்கும் ஊடாட்டத்தின் விளைவாக உருவாக்கிய தனித்தன்மை யாக இருக்கலாம். உட்வொர்த் என்ற அறிஞர், ஒரு மனிதன் கருவுற்றதி லிருந்து தன் பாரம்பரியத்தினாலும், சூழ்நிலையினாலும் பெற்றுள்ள உள்ளார்ந்த மனப்போக்குக்கள், உளத்துடிப்புக்கள், செய்முறைகள் உடல் வேட்கைகள், இயல்பூக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பே ஆளுமை என்கின்றார். குழந்தை தாயின் கருப்பையில் கருக்கட்டி படிப்படியாக வளர்ச்சியடையும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களுமே ஆளுமை விருத்திக்கான அடிப்படைகளாக வுள்ளன. தாயின் போசாக்குணவு உளநலம், பாதுகாப்பு என்பனவும் குழந்தையின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துவதை உயிரியல் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

எனது பாடசாலை மிகச்சிறந்த முறையில் வளர்ந்து வருகின்றது. பாடசாலை அதிபர் என்ற வகையில் பாடசாலை முகாமைத்துவம் தொடர்பாக

நான் விரும்பியதை ஆசிரியர்கள் பணியாளர்கள், மாணவர்களைக் கொண்டு, அவர்களது விருப்புடன் செய்து முடிக்கின்றேன். ஒவ்வொருவரின் வளர்ச்சிக்காகவும், ஆளுமை விருத்திக்காகவும் பாடசாலையில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றேன். ஒரு அதிபரின் கூற்று.

1. ஆளுமையின் சிறப்பியல்புகளை (Characteristics of Personality) வரிசைப்படுத்துக?
2. ஆளுமை பற்றி ஆல்போர் (G.W.Allport) என்ற பிரயோக உளவியலறிஞர் தெரிவித்த வரைவிலக்கணத்தைத் தருக?
3. ஆளுமையைத் தீர்மானிக்கும் காரணிகளை எழுதுக?
4. ஆளுமையை அளவிடும் முறைகளை வகைப்படுத்திக் காட்டுக?
5. ஆளுமை பற்றி சிரில் போட், N.S – மன், ஆர்னஸ்ட் கில்பார் ஆகியோர் தெரிவித்த வரைவிலக்கணங்களைத் தருக?

விடைகள்

1. **ஆளுமையின் சிறப்பியல்புகள்** : தனித்தன்மை வாய்ந்தது, தீர்க்கமான வெற்றிகரமான முகாமைத்துவப் பணபாகவுள்ளது. சூழ்நிலைக்குத் தக்கபடியாக சரியான முடிவுகளை எடுக்க வழிகாட்டுவது சமூகச் சூழ் நிலைகளினால் ஆளுமை உருவாக்கப்படுகின்றது. சமூகத்தில் ஒருவன் எவ்வாறு நடந்து கொள்கின்றான். சமூகத்திலுள்ள பிறர் அவரது நடத்தையைப் பற்றி என்ன எண்ணுகின்றனர் என்பதைப் பொறுத்தும் ஆளுமை அமைகின்றது. ஆளுமை மரபு சூழ்நிலை ஆகிய இரண்டின் விளைவுகளாகவுள்ளது.

2. **ஆல் போர்ட்டின் ஆளுமை வரைவிலக்கணம்** – இது ஒவ்வொரு மனிதரிடமும் குறிப்பிட்ட ஒருவகையில் அவனது உடல் மனப்பண்புகள் சேர்ந்து ஒழுங்கமைந்திருக்கும். இவ் ஒழுங்கமைப்பின் இயல்பு மனிதனுக்கு மனிதன் சிறிதேனும் மாறுபட்டிருக்கும். தனிமனிதன் ஒருவன் தன் சூழ்நிலையில் எவ்வாறு செயற்படுகின்றான் என்பது இவ்வொழுங்கமைப் பின் தன்மையைப் பொறுத்ததாகும். இத்தகைய

உடல் – மனப்பண்புகளின் தனிப்பட்ட ஒழுங்கமைப்பு ஒருவனது ஆளுமையாகும். இது சூழலுக்குப் பொருத்தமான விதத்தில் உண்டாகும். தனிச்சிறப்புடன் கூடிய சீராக்கம் அல்லது சீராக்கத்தைத் தீர்மானிக்கும் தனிப்பட்ட ஒருவரிடையே இருக்கும் உளவியல் முறைகளின் செறிவான ஒழுங்கமைப்பாகும்.

3. மனிதன் உடல், உள்ளம், சார்ந்த ஒரு சமூக உயிரியாவான் ஆகையால் அவனுடைய ஆளுமையைத் தீர்மானிப்பதில் உயிரியல், சமூக, உளவியற் காரணிகள் பெரும் செல்வாக்குடன் திகழ்கின்றன. இவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

ஆளுமைக் காரணிகள்

உயிரியல் காரணிகள்	சமூகக் காரணிகள்	உளவியல் காரணிகள்
Biological Factors	Social Factors	Psychological Factors
உடல் சார்ந்த பண்புகள்	குடும்பம், வீடு,	நுண்ணறிவு, ஊக்கல்
நாளமில்லாச் சுரப்பிகள்	பாடசாலை,	மனவெழுச்சி, மனப்பான்மை
நரம்புத்தொகுதி	மொழி	கவர்ச்சி / அக்கறை/ பற்று
	பண்பாடு, மதம்	

1. ஆளுமையை அளவிடும் முறைகள்

ஆளுமையை அளவிடும் முறைகள்

அகவய முறைகள் (Subjective Methods)

1. சுயசரிதைமுறை (Autobiography)
2. சுயமதிப்பீடு (Selfrating)
3. மறுமொழி கூறுபவை – வினாநிரல் (Questionnaire)

மனப்பான்மை (Attitude Scale) அளவுகோல்

ஆளுமைப்பட்டியல்கள் (Inventories)

பேட்டி (Inerview)

நாட்டுச் சோதனைகள் (Aptitude test)

கவர்ச்சிப் பட்டியல் (Interest Inventories)

புறவயமுறைகள் (Objective Methods)

உடற்கூறு, நடத்தைக்கூறு என்பவற்றை

1. உற்று நோக்கல் (Observation)
2. சரிபார்க்கும் பட்டியல் (Check List)
3. தர அளவு கோல் (Rating Scale)
4. செயற் சோதனைகளும், நிலைமைச் சோதனைகளும் (Performance and Situational tests)

புறத் தோற்று நுண்முறைகள் (Projective Techniques)

- புலக்காட்சி அணுகுமுறை (Perceptive technique)
- பொருளறிவோடு இணைந்த சேவை (Apperceptive technique)
- உருவாக்கும் சோதனைகள் (Productive Technique)
  உ+ம் மை தட சோதனை,படம் வரைதல், பொருள் உருவாக்கல்.

5. ஆளுமைபற்றிய வரைவிலக்கணங்கள்

சில்போட் : ஆளுமை என்பது ஏதோ ஒரு சமுதாய சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவர் துலங்கும்போது அவர் வெளிப்படுத்தும் உடல், உளச்செயற்பாடு களின் ஒழுங்கமைப்பாகும்.

N.L **மன்** ஆளுமை என்பது தனிப்பட்டவர்களிடம் காணப்படும் அமைப்புக்களினதும், நடத்தைக் கோட்பாடுகளினதும், விருப்பு, மனப்பாங்கு, ஆற்றல்கள், திறன்கள், உளச்சார்புகள் என்பவற்றின் மிகச்சக்தியுள்ள பண்புகளின் ஒன்றிணைப்பாகும்.

ஆர்னல்ட் சில்காட்: சூழலுக்கான தனிப்பட்டவரின் சீராக்கத்தை அல்லது பொருத்தப்பாட்டைத் தீர்மானிக்கும் நடத்தைப் போக்குகளினதும், சிந்தனை முறைகளினதும் இணைப்பே ஆளுமையாகும்.

ஆளுமை பற்றிய உளவியற் கோட்பாடு

நனவிலி மன (Unconscious) செயற்பாடுகளின் செல்வாக்கினை மையமாக வைத்தே ஆளுமை விருத்தியடைகின்றது என உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டாளர்கள் கருத்துரைக்கின்றனர். நனவிலி மனதில் அடங்கியுள்ள பண்பாடா ஊக்கிகள், மனவெழுச்சிகள் போன்றவை ஒருவனது சிந்தனையையும், செயல்களையும், இவற்றின் அடிப்படையில் உருவாகும் அவனது ஆளுமையைத் தீர்மானிக்கின்றன. இக்கோட்பாட்டை உருவாக்கிய பிராய்ட்; ஆளுமை அமைப்பு தனித்தியங்கும செயல்களையும், அதே சமயத்தில் ஒன்றோடு ஒன்று இடைவினையாற்றி பாதித்துக் கொள்ளும் தன்மை பெற்ற மகிழ்ச்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இட் (Id), (நனவிலி மனம்) யதார்த்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஈகோ (Ego) (நனவு நிலைமனம்) உயர் அறநெறிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சுப்பஈகோ (Super Ego) (மேனிலைமனம்) ஆகிய அமைப்புக்கள் ஆளுமை விருத்திக்கான ஆதாரங்களை இயம்புவதாகத் தெரிவிக்கின்றார். பாலியல் ரீதியான நேரடி மறைமுக உந்தல்களே ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துவதாகவும் பிராய்ட் தெரிவிக்கின்றார்.

இட், ஈகோ, சுப்ப, ஈகோ ஆகியவை இணைந்து செயலாற்றினால் தான் ஆளுமைச் சமநிலை ஒருவனிடத்தில் தோன்றும். இதை இசைவான ஆளுமை வளர்ச்சி என்பர். இவை ஒன்றுடன் ஒன்று முரண்பட்டால் ஆளுமைச் சமநிலை சீர்குலைந்து ஆளுமை வளர்ச்சியில் சிக்கல்கள் ஏற்படும். இச்சிக்கல்களை ஒருவன் எவ்வாறு சமாளிக்கின்றான்என்பதைப் பொறுத்து அவனது ஆளுமையின் தன்மைகள் மாறுபடலாம் எனவும் பிராய்ட் தெரிவிக்கின்றார்.

கார்ள் யுங்கின் (Caral Jung) கொள்கை

இவர் உளப்பகுப்புக் கோட்பாட்டினூடாக சிக்மன் பிராய்டின் கருத்தியலில் இருந்து சிறு வேறுபட்ட விடயங்களைத் தெரிவிக்கின்றார்.

பிராய்ட் ஆளுமை வளர்ச்சிக்கு காரணமாக இளம் பருவ அனுபவங்களைக் குறிப்பிட்ட, யுங் உள இயக்கக்கூறுகள் சமநிலையடைய உதவும் தற்போதைய (Present) அனுபவங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார். மனித மனத்தின் நான்கு செயல்களான சிந்தித்தல் (Thinking) உணர்த்தல் (Sensing) உணர்ச்சி கொள்ளுதல் (Feeling) உள்ளுணர்வு (Instruction) ஆகியவை எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைப் பொறுத்து மனித ஆளுமை வளர்ச்சியடைகின்றது. இதன்படி ஆளுமையின் இரண்டு வகைகளை மனிதர்களுக்குப் பொருத்துகின்றார்.

அதில் ஒன்று அகமுகிவகையினர் (Introvert) மற்றொன்று புறமுகிவகையினர் (Extrovert) இவற்றுள் அகமுகியினர் சமூகத்தின்பால் ஈடுபாடற்ற, கூச்ச சுபாவமுள்ள சமூகத்திலிருந்து விலகியிருக்க விருப்பம் கொண்டவர்கள், விரைவில் துக்கத்தில் ஆழ்ந்துவிடுவர். புறமுகியினர் சமூகமயமானவர்கள் பேச்சில் திறமையுள்ள, கொதிப்படையாத, ஏனையவருடன் இயைபாகி நட்புறவு நாடுபவர்கள், விரைவில் துக்கத்திற்கு ஆட்படாதவர்கள்.

கார்ள்யுங்கின் கொள்கையை ஆளுமை விருத்தி அடிப்படையில் மேலும் பரிசோதனை ரீதியாக முன்னெடுத்துச் சென்றவர் H.J அய்ஸன்க் ஆவார். இவரது ஆரம்பப்பரிசோதனை (Eyseak Personality Inventoryஎனப்பட்டது. இதன் தொடர்ச்சியான Questioner) என்ற முன்னேற்ற பரிசோதனையை மேற்கொண்டு ஆளுமையை மூன்று வகைகளில் எடுத்தியம்பினார்.

1. புறமுகி – அகமுகி
2. நரம்புக் கோளாறு
3. உளக் கோளாறு



நரம்புக்கோளாறு கொண்டவர்கள் அகமுகி வகையினருடன் நெருங்கியவர்கள். விரைவில் உணர்ச்சிவசப்படுபவர்கள். புறமுகியின் சமூகமயமானவர்கள் சமநிலை ஆளுமை கொண்டவர்கள். உளக்கோளாறு என்ற தோற்றம் தொடர்பான ஆய்வில் அய்ஸ்னக் அண்மைக் காலத்திலேயே ஈடுபட்டார். சீரற்ற – சிதைந்த – ஆளுமையின் தோற்றமாகவே இதனைக் கண்டார். கூடுதலான உளக்கோளாறுகளைக் கொண்டவர்களாக இவர்கள் ஏனையவர்களுடன் குறைவாகப் பழகுவதுடன், தமது உறவினர்களுடன் பேதம் காட்டுவர். ஏனையவர்களை மடையராக்கி, மகிழ்ச்சியடைய எத்தனிப்பர். இவ்வகையில் மேற்குறித்த தோற்றப்பாடுகள் உடலியல் – சூழல் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப ஆளுமையில் தாக்கங்களை ஏற்படுத்துவதாக H.J. அய்ஸ்னக் தெரிவிக்கின்றார்.

கால் ரொஜசின் (Carl Rogers) இன் கொள்கை (புலக்காட்சி நிகழ்வுக் கொள்கை)

ஒவ்வொரு தனியாளின் ஆளுமையிலும் செல்வாக்குப்பெறும் "தான்" என்ற எண்ணக்கருவின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கி; அமெரிக்காவில் 1940 களில் மிகச்சிறந்த புலக்காட்சி நிகழ்வுக்கொள்கை உளவியலாளரான ரோஜஸ், சிக்மன் பிராட்டின் உளப் பகுப்பாய்வுக் கொள்கையைக் கடுமையாக விமர்சிக்கின்றார். ஒருவனது ஆளுமையானது நடைமுறை வாழ்க்கையோடு ஏற்படுகின்றதே ஒளிய ஆழ்மனம் புற உலகிலிருந்து அல்ல. நனவு நிலைச் சம்பவங்களுக்குத் தவறான விளக்கங்கள் கொடுப்பதனாலேயே ஆளுமை தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றன.

உதாரணமாக ஒரு மாணவனுக்கு உதவிசெய்யவிரும்பும் ஆசிரியரை பிழையாகக் கருதும் மாணவன் ஆசிரியர் தன்மீது குற்றம் காண்பதாக எண்ணி, உதவியை நாடாமல் உள்ளான். இது ஒரு பிழையான புலக்காட்சி நிகழ்வாகும். இதனைப் பாடசாலை மட்டத்திலேயே தீர்வுகண்டு கொள்ளலாம். புலக்காட்சி நிகழ்வுகளுக்குப் பிழையான விளக்கங்களைக்

கொடுக்கும்போது; உண்மை நிகழ்வுக்கும் புலக்காட்சி நிகழ்வுக்கும் முரண்பாடுகள் தோன்றி, பிரச்சினைகள் எழுந்து ஆளுமையைப் பாதிக்கின்றது. புலக்காட்சி உலகிற்கும் உண்மை உலகிற்கும் ஒரு சமநிலை தேவைப்படுகிறது. இதுபோன்ற இன்னொரு சமநிலை ஒருவன் தான் கொண்டிருக்கும் எண்ணத்திற்கும் – இலட்சியத்திற்குமிடையே காணப்பட வேண்டும். இல்லையெனில் ஆளுமை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என ரோஜஸ் இயம்புகின்றார்.

ஆளுமைச் சிதைவுடைய உள நோயாளர்கள் உளவள மருத்துவரான கால் ரோஜசை துணைநாடி வருபவர்களின் சிகிச்சைமூலம்; அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் போதிய ஆற்றல் தங்களுக்கே உண்டு என்பதை உறுதிப்படுத்தி, ஆள்மைய உளவளர்ச்சி சிகிச்சை முறையை (Person Centred Therapy) அறிமுகம் செய்தார். ஆளுமைச் சிதைவினால் பாதிக்கப்பட்ட உள நோயாளருடன் நற்புறவை ஏற்படுத்தி அவரது நிலையை அவரையே ஏற்றுக்கொள்ளச்செய்து நேர்மையோடு தன்னை வெளிப்படுத்தலும், அவருடைய உணர்வுகளுக்குள் புகுந்து அவரைப் புரிந்து செயலாற்றுவதன்மூலம் அவரது ஆளுமையைக் கட்டி எழுப்பலாம் என்பதைத் தனது கொள்கைப் பிரயோகம்மூலம் கால் ரோஜஸ் எடுத்துக்காட்டினார். இதில் ஒருவன் "தான்" என்பதில் காணப்படும் நான்கு பண்புகளைக் குறிப்பிடுகின்றார். இது அவனது ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

1. ஒருவன் நிரந்தரமாகத் தன்னைப்பற்றிய ஒரு எண்ணக்கருத்தை வளர்ப்பதற்கு அதிகப்பிரயத்தனம் எடுக்கின்றான்.
2. இவ் எண்ணக்கருவுக் கேற்ற நடத்தைகளை மேற்கொள்ள விழைகின்றான்.
3. 'தான்" என்ற எண்ணக்கரு வளர்ச்சிக்கு அவனது அனுபவங்கள் உதவுகின்றன.
4. கற்றல், முதிர்ச்சி என்பதற்கேற்ப தான் என்ற எண்ணக்கருவில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மாணவன் ஒருவனுக்குக் கல்வியில் அக்கறை இல்லாவிட்டால், அவன் கல்விக்காகச் சிரமப்படுவது ஒரு தேவையற்ற முயற்சியாக அமைகின்றது. அவனுக்குத் தன்னைப்பற்றிய ஒரு தெளிவான எண்ணக்கரு உருவாக வில்லை. அவ்வாறு உருவாகி இருந்தால், அவன் கல்வியில் அக்கறை காட்டுவான். இவ்வடிப்படையில் " தான்" என்னும் எண்ணக்கரு ஒருவனது ஆளுமையைத் தீர்மானிப்பதில் முக்கியமான ஒன்றாக உள்ளது. மாணவர் களிடம் தன்னைப்பற்றிய கருத்துக்களை வளர்க்க ஆசிரியர் முயற்சித்தால் சிறந்த ஆளுமையுடைய மாணவர்களை உருவாக்கலாம். இதற்கு கால் ரோஜஸ் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்.

1. வகுப்பறையின் எல்லாச் செயற்பாடுகளுக்கும் சந்தர்ப்பங்களை எல்லா மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.
2. மாணவர்களது எல்லா உணர்வுகளையும் வெளிக்காட்டும் சுதந்திரமான சூழலாக வகுப்பறை இருக்க வேண்டும்.
3. மாணவர்கள்ஒவ்வொருவருக்கும் கணிப்பையும் கௌரவத்தையும் வழக்க வேண்டும்.
4. வகுப்பறையில் ஒழுகுவதற்குத் தெளிவான சட்டதிட்டங்கள், வரையறைகள் இருக்க வேண்டும்.
5. பெரும்பாலான அல்லது எல்லா மாணவர்களும் வெற்றி பெறக்கூடிய செயலாற்றுகைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

மாணவர்களும் மனிதர்களும் தம்மைப்பற்றி எவ்வாறு நினைக் கின்றார்கள் என்பதில் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய தத்துவம் அவர்களது வெற்றியும் தோல்வியுமாகும். இவற்றினடிப்படையில் அவர்களது ஆளுமையைக் கட்டியெழுப்ப முடியும் என்பதற்கான செயன்முறை கால்ரோஜன் தனது கோட்பாட்டினூடு எடுத்து விளக்கியதுடன், தன்னிடம் உளநோய் பரிகாரத்துக்கு வந்த நோயாளர்களுக்கு வெற்றிகரமாக சிகிச்சை அளித்து, அவர்களுடைய ஆளுமையை விருத்தியாக்கியுள்ளார்.

நான் என்னுடைய வேலையைச் செய்கின்றேன். நீ உன்னுடைய வேலையைச் செய் நான் இவ்வுலகில் வாழ்வது உனது இலட்சியங்களுக்கு

ஏற்ப ஒழுகுவற்கன்று. அதுபோல நீயும் வாழ்வது என்னுடைய இலட்சியங் களுக்கன்று நீயும் நீயேதான், நானும் நானேதான் ஏதோ ஒரு காரணத்தால் இருவருடைய இலட்சியங்களுக்கும் இடையே சமநிலை காணப்படுகின்றது"

1. பேர்ளின் என்ற பிரயோக உளவியலறிஞரின் மேற்படிக் கூற்றின்படி கார் ரோஜஸ்சின் புலக்காட்சி நிகழ்வுக் கொள்கை தொடர்பான ஆளுமைத் தத்துவங்களை வரிசைப்படுத்துக?
2. ஆளுமையை அளவிடுதல் தொடர்பான ரோர்ஷக்கின்மை தடச் சோதனை (Rorshach Ink Blot Test) பற்றி விளக்கு?

விடைகள்

1. தன்னையே தானுணர்ந்து ஏற்றுக்கொள்ளுதல் செய்முறைக்கு அவனது கடந்தகால எதிர்கால நிகழ்வுகளிலும் பார்க்க நிகழ்கால நிகழ்ச்சி களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
2. இவற்றைச் செய்ய வேண்டும் எனக் கற்பனையில் எண்ணுவதிலும் பார்க்க நினைத்ததைச் செய்ய முயற்சித்தல்.
3. மனதில் உள்ளதை வெளிப்படுத்தல், மனித உறவுகளுக்கும் மனிதத்துவத்துக்கும் மதிப்பளித்தல்.
4. சுகத்தை அனுபவிக்கவும், வேதனையைத் தீர்க்கவும் அறிவைப் பயன்படுத்தல்.
5. மற்றவர் கருத்தை பகுத்தாராய்ந்து குறைகூறாமல் தனது கருத்தை வெளியிடல்.
6. தனது சிந்தனை – சொல் – செயல் ஆகியவற்றுக்குத்தானே பொறுப்புக் கூறல். தன்னையறிந்து அதன்படி ஒழுகுதல்.
7. இல்லாத பொருட்களைப் பற்றிச் சிந்திப்பதைவிட இருப்பவற்றுடன் செயற்படல்.

2. ரோர்ஷாக் மைதச் சோதனை

ஆளுமையை அளவிடுவதற்கு சுவிட்ஸலாந்து நாட்டு உள மருத்து வரான ஹெர்மன் ரோர்ஷாக் என்பவரால் 1921இல் தயாரிக்கப்பட்டது.

இச்சோதனை 10 அட்டைகளைக் கொண்டது. இதில் மைத்தடம் (Ink Blot) அல்லது பொருளற்ற சமச்சீரான அமைப்பினைக் கொண்டு உருவங்கள் (Meaningless) Bilaterally Symmetrical From) காணப்படும் இவற்றுள் கறுப்பு நிற மைதடங்கள் ஐந்தும் கறுப்பும் சிவப்பும் கலந்தவை இரண்டும், பல்வேறு வர்ணங்கள் மூன்றும் உள்ளன.

ஆளுமைச் சோதனைக்கு உட்படுபவருக்கு மைதட அட்டைகள் ஒவ்வொன்றாகக் காட்டப்படும். அல்லது திரையில் விழுத்திக் காட்டப்படும் குறித்த நபர் அதில் தான்காணும் எல்லாவற்றையும் விபரமாகக் கூற வேண்டும். ஒரு மைதடம் பற்றிய விபரம் கூறி முடிந்தபின் அடுத்த மைதடம் காட்டப்படும். இவ்வாறு எல்லா மைதடங்களும் காட்டப்பட்டபின் ஆளுமையைச் சோதிப்போரிடம் சோதனையாளர் வினாக்களைக் கேட்பர். இவ் வினாக்கள் சோதனை முடிவை நம்பகமாக்க உதவும். விமர்சனப்பாங் கான விடைகளை சோதனையாளர் ஆராய்வார் இவை;

1. மைதடங்களில் காணப்படும் பொருட்களான

மனிதர்கள்/ உயிரற்ற பொருட்கள், விலங்குகள், செடி கொடி மனிதரால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், உடற்கூறுகள் என 30 பிரிவுகளாகக் குறியீடுகளாக்கப்பட்டுள்ளன.

2. மைதடத்தின் பகுதிகள் / இட அமைவுகள் (Location)

முழுப்பகுதி, வழக்கமான துலங்கல், விரிவான துலங்கல், புதிய விளக்கம், மிகச்சிறிய விபரணங்கள், ஓரப்பகுதிவிளக்கம், நிலப்பகுதி விளக்கம், அபூர்வவிபரங்கள்.

3. விடையின் தன்மையை நிர்ணயித்த காரணிகள்

உருவம் (Form), வண்ணம் (Colour) இயக்கம் (Movement)

இவ்வாறான மைதடச் சோதனையில் அளிக்கப்படும் விடைகளுக்குப் பொருள் காண்பதில் சில அடிப்படைக் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. அவை; மனவெழுச்சிகளை புறப்பொருள் சார்ந்ததாக வெளிப்படுத்த நிறங்கள் பயன்படுகின்றன. வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் மனப்போக்கு என்பவை மைதடித்தின் அமைப்பு இயக்கத்துடன் ஒன்றுவர்

என்ற பலவித நுட்பம்சார் நிபுணத்துவத் திறன்கள் பிரயோகிக்கப்படும். இவ்வாறான சோதனையை சிறப்புப்பயிற்சி பெற்றவர்களே மேற்கொள்ள லாம். இவ் ஆளுமைச் சோதனையை 7 வயதிற்குக் குறைந்தவர்களுக்குக் கொடுக்க இயலாது.

இருத்தலியல் கொள்கை (Logo Therapy)

இக்கொள்கையின் மூலகர்த்தாவான பிராங்கன் என்ற பிரயோக உளவியலாளர் சூழ்நிலையை வெற்றிகொள்ளும் ஆளுமை மனிதனிடம் உள்ள உயர்ந்த குணம் என்றார். அந்த ஆளுமைக் குணத்தை மேம்படுத்தும் திறன், தனது செயற்பாட்டினைத் தீர்மானிக்கும் சுதந்திரம் மனிதனுக்கு உண்டு என்றார்.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் கொடூரமான ஜேர்மனி கிட்லரின் நாஜி சிறைச்சாலையின் மரண வாழ்வின் மத்தியில் பெற்ற அனுபவத்தை இருக்கவியல் கொள்கையாக வெளியிட்டார். மனிதன் கொடூரமான துயரங்களின் நடுவே சேர்ந்து அழிந்து போகாது. மனோதிடத்தைப் பெறும் ஒரு புதிய அனுபவத்திற்கு வழி காட்டினார். இக்கொள்கைப்படி தனி மனிதன் மூன்று வகையான உலகில் வாழ்கின்றான்.

1. உயிரியல் உலகம்
2. உளவியல் உலகம்
3. தனியாள் விளக்க உலகம்

இவற்றினூடாகத் தன்னைத்தானே ஒருவன் அறிந்து கொள்வதற்காக இம்மூன்று உலகங்களையும் ஒன்றிணைத்தலும் அதற்குக் கைகொடுத் தலுமே அவனது ஆளுமை வளர்ச்சிக்கு வழிகாட்டுதலாக அமைகின்றது. மனிதன் நிலையானவன் அல்லன். இதை மனிதனும் அறிவான். துன்பம் மனித வாழ்வின் நெறிநிலை இதனையே நினைத்து வேதனையும், பயமும் அடைவதிலும் பார்க்க தன்னிலையை உணர்ந்து செயற்பட வேண்டும் என இருத்தவியல் கூறுகின்றது.

தனது வாழ்க்கையின் நோக்கம், தனது தேவைகள் தான் செய்வது என்ன என்பவற்றைத் தெரியாமல் இருப்பதே மனிதனின் துன்பத்துக்குத் காரணமாகின்றன. இதை அறியாதவர்கள் தமது வாழ்க்கை பயனற்றது எனக்கூறுகின்றார்கள். துன்பத்திற்கும் மனவேதனைக்கும் உட்பட்டவர்களுக்கு வாழ்க்கை பற்றிய விளக்கத்தை அளிக்க வேண்டும் எனப்பிராங்கன் கூறுகின்றார். இதுவே இருத்தலியல் கொள்கையின் அடிப்படையாகும். இதன்படி ஒருவன் தான் என்ன காரணத்துக்காக வாழ்கின்றான் என அவனே உணரும்படி செய்யும் முறைமையாகவுள்ளது. துன்பத்திற்கும், மனவேதனை – விரக்தி உளக்கோளாறுகளுக்கு உட்பட்டவர்களுக்கு அவர்களுடைய வாழ்வின் அர்த்தத்தைப் பல்வேறு நுட்பங்களினூடு விளக்கும் ஆளுமையை விருத்தியாக்குவதே இக் கொள்கையாகவுள்ளது.

வாழ்க்கைக் காலவிருத்தி

மனிதன் கருவுற்று பிறந்து வாழ்க்கைக் காலம் முழுவதும் தொடர்ச்சியாகப் பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றான். பல வாழ்க்கைக்கால விருத்திப் பருவங்களினூடாக வளர்ச்சியடைகின்றான். இவ் வாழ்க்கைக் கால விருத்தி பற்றி பிரயோக உளவியலறிஞர் ஹவிக்கேர்ஸ்ட் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

"பிள்ளைகள் தொடர்பான ஆய்வுகள் மிக நீண்டகாலமாக இருந்து வருகின்றது. அவர்களின் குமரப்பருவம் தொடர்பான ஆய்வு ஆர்வம் முன்னையதைவிட அண்மைக் காலத்திலும் முதியோர் மீது புலப்படுத்தும் ஆர்வம் மிக அண்மைக்காலத்திலும் விருத்தியடைந்துள்ளன. இவை தொடர்பான ஆய்வுகள் மனித நடத்தைச் சீராக்கங்களுக்குப் பெரும் உதவியளிக்கின்றன" என்கின்றார்.

வாழ்க்கைகள் கால விருத்தியானது

1. புலன் உணர்ச்சிகளைத் தொகுத்தறிதலில் ஏற்படும் முன்னேற்றம்.
2. நடத்தையின் இயல்புகளிலும் வகையிலும் ஏற்படும் முன்னேற்றம்.
3. செயற்படும் முறைகள் உயர் நிலைப்பருவத்தால் எழும் முன்னேற்றம்.
4. இறந்தகால அனுபவங்களை மனதிற் கொண்டு எதிர்காலத்திற்குத் திட்டமிடுவதால் தோன்றும் முன்னேற்றம்.
5. நடத்தையில் சுய கட்டுப்பாடு இடம் பெறும் அளவில் முன்னேற்றம்.

என்ற காரணிகளின் ஒன்றோடு ஒன்று தொடர்பான இணைந்த அறிகுறிகளை வாழ்க்கைக் காலவிருத்தியனுகுமுறை எடுத்தியம்புகின்றது. இங்கு விருத்தி என்பதை உளவியலறிஞர் வண்டர்ஸன் டென் பின்வருமாறு தெரிவிக்கின்றார். "விருத்தி என்பது எண்ணக்கரு உருவாக்கம் தொடக்கம் வாழ்க்கைக் காலம் முழுவதும் தொடரும் இயக்கக்கோலம் அல்லது மாற்றக்

கோலமாகும்'' என்கின்றார். விருத்தியானது உயிரியல், அறிவுத்துறை, சமூக உணர்ச்சித்துறை ஆகியவை சார்பான ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த சிக்கலான செயற்கிரமமாகவுள்ளது.

உயிரியல்சார் செயற்கிரமங்களில் தனிமனிதனுடைய உடலியல்புகள் தொடர்பான மாற்றங்கள், உடல் உறுப்புகளின் விருத்தி, இயங்கும் திறன்கள், மாற்றங்கள் பூப்புக்காலத்தில் நிகழும் சுரப்புகளினால் ஏற்படும் மாற்றங்கள், முதுமையில் நிகழும் மாற்றங்கள் என்பவை அடங்குகின்றன. அறிவுத் துறையில் சிந்தனை, மொழிவிருத்தி நுண்மதி, எண்ணக்கரு வாக்கம் எண்விருத்தி தொடர்பாகவும், சமூக உணர்ச்சிச் செயல்களாக ஏனையவர்களுடனான தொடர்பு, உணர்ச்சி மாற்றங்கள், ஆளுமை மாற்றங்கள் என்பன அடங்குகின்றன.

வாழ்க்கைக்கால விருத்திப் பருவங்கள்

1. **கருநிலைப்பருவம் :–** மனித உயிரிகருவுற்றதிலிருந்து பிறப்பு வரையான காலம் மிக விரைவான வளர்ச்சிக்காலமாகவுள்ளது.
2. **சிசு நிலைப்பருவம்: –** பிறப்பிலிருந்து 18–24 மாதங்கள் வரையான காலம், சீரான உடலசைவு சிந்தனைமொழி, ஏனையோருடனான தொடர்பாடல் விருத்திகள் நிகழும்.
3. **தொடங்கு நிலைப்பருவம் :–** சிசு நிலைப்பருவ முடிவிலிருந்து ஐந்து வயது வரையான காலப்பகுதி மூளைவளர்ச்சி நிறைவடைகிறது. தன்னிசைவு, சுயகவனிப்பு, அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்தல், சக சிறார்களுடனான உறவாடல், விளையாட்டுக்களில் ஈடுபாடு, புதுமை களைக் காண விளைதல் என்பன நிகழ்கின்றன. சிறுவர் பாடசாலைப் பருவம்.
4. **இடைநிலை Or கடைநிலைப்பிள்ளைப்பவரும்:** ஆறு வயது தொடக்கம் 11 வயதான காலமாகும். ஆரம்பப் பாடசாலைப் பருவம், வாசிப்பு, எழுத்து எண்தொடர்பான தேர்ச்சிபெறல், பரந்த உலகம், பண்பாடு பற்றிய விளக்கங்கள், சுயகட்டுப்பாட்டுத்திறன் விருத்தி, குடும்பத்திலிருந்து பாடசாலைச் செயன்முறைகளில் அதிகம் பங்காற்றல்.

5. கட்டிளமைப் பருவம் :– சுமார் 11 வயதிலிருந்து 18 –22 வயது வரையான காலம். இதனைச்சிலர் இரண்டாம் பிறப்பு எனவும் சிக்கலான அமைதியற்ற பருவம் எனவும் கூறுவர். உயரம், நிறை, உடல் வளர்ச்சியில் விரைவான மாறுதல்கள், சுதந்திரப் போக்கு, சுயஅடையாளம் பேணல், இலட்சியங்கள் தொடர்பான சுயஎண்ணங்கள், பாலியலூக்க இயல்புகள் காணப்படும்.

6. முதிர்பருவ முதற்கட்டம் :– இருபது வயதிலிருந்து முப்பது முப்பத்தைந்து வயது வரையான காலமாகும். சொந்த விடயங்களில் தீர்மானம் எடுத்தல், பொருளாதார தொழில்விருத்தி, கணவன், மனைவி தெரிவு, குடும்ப அலகின் உருவாக்கம், பிள்ளைவளர்ச்சி அனுபவங்கள் பெறல்.

7. முதிர்பருவ இடைக்கட்டம் :– முப்பத்தைந்து வயதிற் தொடங்கி அறுபது வயதுவரை நீடிக்கும் காலப்பகுதியாகும். சொந்த – சமூக வாழ்வில் ஒருவர் புலப்படுத்தும் ஈடுபாடு, பொறுப்புணர்ச்சி என்பன விரிவடையும், அடுத்த தலைமுறையினருக்கு தகைமையையும், அனுபவங்களையும், முதிர்ச்சியையும் வழங்கும் காலம் வாழ்க்கைத் தொழிலைப் பேணி மன நிறைவடைதல்.

8. முதிர்பருவ பிற்கட்டம்:– அறுபதுகளில் தொடங்கி இறக்கும் வரையான காலப்பகுதியாகும். உடல்நல தளர்ச்சிகளுக்கு ஏற்ற பொருத்தப்பாடு காணல். ஓய்வுக்கால வாழ்வு, வாழ்வுபற்றிய மீள் பரிசீலனை, பேரப்பிள்ளைகளைப் பராமரித்தல், சமூக நடிபங்கு தொடர்பான பொருத்தப்பாடு, ஆன்மீகத்தில் அதிக நாட்டம் என்பன நிகழ்கின்றன. இன்றைய நவீன பிரயோக உளவியலில் முதிர்பருவம் தொடர்பான ஆய்வுகளின் அக்கறை உலகளாவிய ரீதியில் பெருகியுள்ளது.

"எனது வாழ்விலேயே மறக்க முடியாத பருவம் பாடசாலையில் முதல் முதல் கற்கச் சென்றது. தொடர்ந்து கட்டிளமைப் பருவத்தில் எனது காதல்..... அந்தநினைவுகள் மிக மகிழ்ச்சியானவை" ஒரு வயதான பாட்டியின் கூற்று.

1. வாழ்வதற்குரிய மிகச்சிறந்த பருவம் எது?
2. எப்பருவத்தில் மிக மகிழ்ச்சியாக இருக்க முடியும்?
3. போல் பரல்ட்ஸ் (1987) என்ற பிரயோக உளவியலாளர் மனித விருத்தி மாற்றம் பற்றி என்ன கூறுகின்றார்.
4. கட்டிளமைப்பருவம் முதிர்பருவ பிற்காலம் தொடர்பான விளக்கம் ஒன்றைத்தருக.

விடைகள்

1. பொதுவாழ்க்கையில் ஒவ்வொரு வயதுக்குழுவும் தமக்கேயுரிய இன்பங்களையும், சிரமங்களையும் அனுபவிக்கின்றார்கள். உயர்வுகளையும், தாழ்வுகளையும் எதிர்நோக்குகின்றார்கள். தனியாட்கள் குமரப்பருவத்திலே பல உணர்வுகளால் பீடிக்கப்பட சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ளன. பொதுவாக விருத்தியானது வாழ்நாள் முழுவதும் நிகழ்வது. எந்த அகவைப்பருவமும் மனித விருத்தியில் ஆதிக்கம் செலுத்துவதில்லை. எனவே வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் வெற்றிகரம் இழப்பீடுகளும் உள்ளன. எல்லாப்பருவங்களுமே வாழ்வதற்குரிய சிறந்த பருவங்களேயாகும். இத்தத்துவத்தை மனிதன் உணரும்போது மகிழ்ச்சி அவதைத்தேடி வரும்.

2. மனித வாழ்க்கைக்காலம் முழுவதும் நிகழும் மானிட விருத்தியின் புதிர்களை விடுவித்து உண்மைகளை அம்பலப்படுத்துவதற்காக பிரயோக உளவியலாளர்கள், சமூகவியலாளர்கள், நரம்பியலாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். மனித உயிரிகள் தாம் வாழும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப மகிழ்ச்சியாக இருக்கின்றன. இம் மகிழ்ச்சி குறித்த இந்தப்பருவத்தில்தான் உண்டு. என்பது தவறானதாகும். தனிநபர் மாறும் உலகிலே மாறும் உயிரியாக விளங்குகின்றார். குறித்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொருத்தப்பாடு காணல் அவரது மகிழ்ச்சிக்கும் வெற்றிக்கும் பலனளிக்கலாம்.

3. "மனித விருத்தி மாற்றம் என்பது இளமையில் நிகழ்வது போலவே முதிர் பருவத்திலும் நிகழ்கின்றது என வாழ்க்கைக்கால விருத்தி அணுகுமுறை

ஆய்வுகள் தெளிவாக்குகின்றன. மானிட விருத்தி என்பது வாழ்நாள் முழுவதும் நிகழ்வது, பல்பரிமாணம் உள்ளது. பல்நெறிகளிற் சொல்வது நெகிழும் பண்புடையது. வரலாற்று ரீதியான சிறப்புடையது பல் பயில்வு சார்ந்தது, சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நிகழ்வதாகும்."

4. கட்டிளமைப்பருவம்

கட்டிளமைப்பருவத்தில் ஆண்களும், பெண்களும் தங்கள் உடல் வளர்ச்சியின் உச்சத்தை அடைகின்றார்கள். உடலியல் மாற்றங்கள் விரைவாக நடைபெற்று பால் முதிர்ச்சி ஏற்படுகின்றது. தமக்கென ஒரு தனித்தன்மையை (Identity) ஏற்படுத்திக் கொள்கின்றனர். தம் எதிர்காலம் பற்றிய முடிவுகளை எடுக்கத் தொடங்குவதுடன், எதிர்பாலாரிடையே கவர்ச்சியை அளிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடுபவர், பிரயோக உளவியலறிஞர் ஸ்ரான்லி ஹெல் இப்பருவத்தைச் சிக்கலான அமைதியற்ற பருவம் (Period of storm and stress) எனக் குறிப்பிடுகின்றார். இவர்களுக்குச் சரியான வழிகாட்டல்களை குடும்பமும், பாடசாலையும், சமூகமும், ஊடகங்களும் அளிக்காத சந்தர்ப்பங்களிலேயே புறழ்வுகள் ஏற்படுகின்றன.

"பெண்களுக்குக் கூண்டுகளும், ஆண்களுக்குச் சிறகுகளும் கிடைக்கும் பருவம்" என எம்மூர்கவிஞன் இப்பருவம் பற்றிப் பாடினான், இன்றைய எமது நாட்டு கட்டிளமைப்பருவத்தினர் தம்மைப்பற்றிய விஞ்ஞான பூர்வ விளக்கமற்று, புரிந்துணர்வு பாலியற் கல்வி தொடர்பான விளக்கமற்று பல பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர். இவ்விடயங்களில் மறைக்கப்பட வேண்டியவை எதுவுமில்லை.

இப்பருவத்தினருக்கு உண்மைக்குப் புறம்பான, தம் தேவைகளை நிறைவேற்ற பலர் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்ட சந்தர்ப்பங்களை வழங்குவர். நீல் திரைப்படங்கள், மஞ்சல் பத்திரிகைகள், போன்றவற்றின் தவறான கருத்துக்களால் இப்பருவத்தில் குழப்பமடைவர். இவற்றைத் தடுக்க கட்டிளமைப்பருவத்தினருக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் பாலியல் கல்வி (Sex education) வழங்கப்பட வேண்டும்.

குமரப்பருவத்தினரின் சிறப்பியல்புகளாக விரைவான உடல்வளர்ச்சி, தன்னுணர்வு, பாலூக்கம், சுயசார்பு இலட்சியப் போக்கும் யதார்த்தமும், தொழில் தேர்வும் சுயசார்பும் என்பவையாகவுள்ளன.

இன்றைய விரைவான சமூக மாற்றங்களால் நாகரீகத்தால் கட்டிளமைப் பருவத்தினர். மோசமான பாதிப்புக்களுக்கு ஆளாகியுள்ளனர். இது அவர்களின் எதிர்கால வாழ்வையே பாலாக்கி விடுகின்றது. இலங்கையில் தரம் 11, 12 களில் கருவுறும் பாடசாலை மாணவிகளின் வீதம் மிக வேகமாக அதிகரித்து வருகின்றது.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திலும் உலகிலே இலங்கைக்கு மூன்றாமிடம் என்ற வகையில் பாலியல்சார் அறிவை – விழிப்பை இளைஞர்களிடையே ஏற்படுத்த வேண்டியுள்ளது.

"எனது மார்பகம் சிரியதாக உள்ளதே, எனக்கு மீசை முளைக்க வில்லையே, எனது கண்கள் வடிவில்லையே எனது உயரம் போதாதே, ஏன் முகத்தில் பருக்கள் தோன்றுகின்றன. எனது சில உறுப்புக்கள் ஏன் விரைவாக வளர்ச்சியடைந்துள்ளன? எதிர்பாலாரிடையே பழக– பேச – தொட அன்பைப் பரிமாற ஆசையாக உள்ளதே? என்றவாறான உணர்வுகள் உங்களுக்கும் ஏற்பட்டிருக்கும்மல்லவா? இவ் உணர்வுகள் ஏற்படுவது இயல்பே. இதற்குக் கட்டிளமைப்பருவத்தில் உடலில் ஓமோன்களின் சுரப்புக்கள் காரணங்களாக உள்ளன.

இவ்வாறான செயற்பாடுகளினால் பாலுணர்வு தலை தூக்குகின்றது. இவ்வேளை ஆரோக்கியமான பாலியலறிவு வழங்கப்படுகின்றபோதும், திறன்களை வேறு விருத்தி நடவடிக்கைகளில் திசை திருப்புகின்ற போது இவர்களுடைய ஆளுமை விருத்தியடைகின்றது தம்மை அடையாளம் காணவும் சுய மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.

கட்டிளமைப் பருவத்தினரின் தேவைகளை நிறைவு செய்தல் அவர்களது பிரச்சினைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளுதல், முறையான பாலியல் கல்வி

பெறவைத்தல், பாலுணர்வுத் தாக்கங்கள் மனவெழுச்சிகள், நடத்தைகளைத் தீர்க்க வழிகாட்டல், அவர்களது எண்ணங்களுக்கு மதிப்பளித்து முதிர் பருவத்தையும் கட்டிளமைப் பருவத்தையும் இணைக்கும் எண்ணக்கருச் செயற்திட்டங்களை விருத்தியாக்குவதன்மூலம் இவர்களை நற்பிரசை களாக்கலாம். இவ்வாறாக ஒவ்வொரு விருத்திப் பருவங்களில் உள்ளவர் களுக்கும் பல்வேறு வழிகாட்டல் முறையியல்கள் உள்ளன.

வாழ்க்கைக்கால விருத்தியில் முதிர்பருவ பிற்கட்டமைப்பு

இன்று உலகலாவிய ரீதியில் வயோதிபர்களுடைய சனத்தொகை சுகாதார அபிவிருத்திகளால் பெருமளவு அதிகரித்து வருகின்றது. இவர்களுடைய உணர்வுகள், உளத்தேவைகள், அமைதியான நல்வாழ்வு தொடர்பாகப் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இவர்களைப் பிள்ளைகள் மனம் கோணாமல் பராமரித்தல் பெரும் பிரச்சினையாகியுள்ளது. முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றன. இவை ஆக்க பூர்வமான மனித விழுமியங்களைச் சிதைக்கின்றன. எனவே இது தொடர்பான உளவியல் விழிப்புணர்வுகளும் – ஆய்வுகளும் பெருகியுள்ளன. தமது வாழ்க்கைக் கால இறுதியில் இவர்களுக்கான உளவிளையாட்டுக்கள், அதிகூடிய சலுகைகள், பராமரிப்புக்கள் வெளிநாடுகளில் பின்பற்றப்படு கின்றன.

இவ்வாறாக மனிதனின் வாழ்க்கைக் காலவிருத்திப்பருவ உளவியல் ஆய்வுகள் இன்று பல்கிப் பெருகியுள்ளன. இவை தொடர்பான அடிப்படைகளை சிக்மன்பிராய்டின் உளப்பகுப்புக் கொள்கை, ஜீன் பியாஜேன் அறிவு வளர்ச்சிக் கொள்கை என்பன விரிவான விளக்கங்களைத் தந்துள்ளன. இதுபற்றி பிரயோக உளவியல் 1 நூலில் காணலாம். இங்கு எரிக்சன் (1902 – 1994) அவர்களின் கொள்கை தரப்படுகின்றது.

எரிக் எரிக்சனின் கொள்கை

இவர் மனித விருத்தியின் உள சமூகக் கட்டங்களைப் பின்வருமாறு தருகின்றார்.

கட்டம் I

நம்பிக்கை எதிர் அவநம்பிக்கை

இது முதலாவது உளசமூக வளர்ச்சிக்கட்டம், ஒருவயதான இப் பிள்ளைக்குப் பெற்றோர் தேவைகளை நிறைவேற்றி, பாதுகாப்பான சூழலை வழங்க வேண்டும். அப்போது பிள்ளை உலகின்மீது நம்பிக்கை வைக்கும். இந்த நம்பிக்கையே இவ்வுலகு இனிய நலன்கள் உடையது. இன்பமான மகிழ்ச்சியும் தரும் வாழ்விடமான எதிர்ப்பிற்குத் துணை புரிகின்றது. இக் காலத்தில் அவ நம்பிக்கையான நிகழ்வுகள் நடந்தால் பிள்ளை பாதிப்படையும்.

கட்டம் II

தன்னாட்சி எதிர் வெட்கமும் சந்தேகமும்

ஒன்று தொடக்கம் மூன்று வயது வரையான வயதுடைய இப்பிள்ளைகள் தமது நடத்தைகள் தமக்கே உரியன பிறருக்குரியன அல்ல என்பதை அறியத் தொடங்குகின்றன. தமது சுதந்திரம் – தன்னாட்சியுரிமையை வலியுறுத்த முற்படுகின்றன. தம் ஆசைகளை நிறைவேற்ற விரும்புகின்றன. இக்கட்டத்தில் அதிக கட்டுப்பாடுகள் விதித்தால், தண்டனையைக் கடுமையாக விதித்தால் தம்மீது சந்தேகமும், வெட்கத்தையும் உணர்வார்கள். இது பாதகமான நிலைமைகளை ஏற்படுத்தும்.

கட்டம் III

செயற்துணிவு எதிர் குற்ற உணர்வு

முன்பள்ளிக்காலமான (3–5 வயது) இதில் குடும்பத்திலிருந்து விரிந்த சமூக உலகினை எதிர்நோக்குகின்றார்கள். இதற்கு முன்னைய பருவத்தைவிட அதிக சவால்களை இப்பருவத்தில் எதிர்நோக்கு கின்றார்கள். இச்சவால்களைத் திறனுடன் அடக்கும் தேர்ச்சியும் – செயலூக்கமும் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தமது உடல், நடத்தை, பொம்மைகள், செல்லப்பிராணிகள் ஆகியன தொடர்பாகப் பொறுப்புக்கள் வழங்கப்படல் சாலச் சிறந்தது. இதன்மூலம் செயற்துணிவு ஏற்படுகின்றது. இதனை வழங்காத சூழலில் எதிர்குற்ற உணர்வை இவர்கள் பெற்று உளைச்சல் அடைவர்.

கட்டம் IV

தாராண்மை எதிர் தாழ்வுச் சிக்கல்

இடைநிலைக் கல்வி ஆரம்பக்கட்டமாகுதல் பிள்ளைகள் தமது அறிவை விருத்தியாக்கி தம் சக்தியை நெறிப்படுத்துகின்றனர். ஆசிரியர்களின் வழிகாட்டல் இதில் கூடுதல் முக்கியம் பெறுகின்றது. சரியான நெறிப்படுத்தலையும் பிள்ளைகள் சார்பாக மேற்கொள்ள வேண்டும்.

மறைமுக செயலூக்கத்திற்குப் பதிலாக நேர்மையான செயலூக்கத்தை வழங்கும் பெற்றோரும், ஆசிரியரும் பிள்ளை மனநிறைவடைய குறைபாடுகளை இயம்புவர் எனின் தாழ்வுச் சிக்கல்கள் ஏற்பட்டு பிள்ளையின் உளநலம் பாதிப்படையலாம்.

கட்டம் V

அடையாளத் துவக்கம் எதிர் அடையாளக் குழப்பம்

இக்கட்டம் கட்டிளமைப்பருவத்திற்கு உரித்தானதாகும். இப்பருவத் தினரின் நல்ல அடையாளத் துலங்கலுக்கு, தீர்மானங்களை மேற்கொள்ள, பொறுப்புக்களை ஏற்க, உயர்கல்வி, தொழில் தெரிவு என்பவற்றிற்குச் சரியான வழிகளைப் பெற்றார். ஆசிரியர், சமூகம் வழங்கும்போது இவர்கள் தனித்துவமான தம் அடையாளத் துலங்கலை வெளிப்படுத்துவர். இதில் தேக்கநிலை காணப்படின், திணிப்புக்களை ஏற்படுத்தின். அவர்கள் பிரச்சினைகளைச் சீராகப் பரிசீலிக்காவிட்டால் தனித்தன்மையான அடையாளம் புலப்படாத குழப்பம் ஏற்படும். இது பிறழ்வு நடத்தைகள், வன்முறை, பாலியல், துஷ்பிரயோகம், போதைப்பொருள், பாவனை என்பவற்றில் ஈடுபடுவர். எனவே மிகக் கவனமாகக் கையாள வேண்டிய பருவமாகவுள்ளது.

கட்டம் VI

உறவு தொடர் நெருக்கம் - உறவு இல்லாத தனிமை

தனிநபர் குடும்பப் பிணைப்பை ஏற்படுத்த உறவுப் பிணைப்புக்களை ஏற்படுத்தும் செயன்முறையாகவுள்ளது. உறவு நெருக்கம் என்பது ஒருவர் தன்னை உணர்தலும், மற்றொருவரிடம் தன்னைத்தானே இழத்தலும் என எரிக்சன் தெரிவிக்கின்றார். பிறரோடு ஆரோக்கியமான நட்பு உறவையும்,

தன் குடும்பத்துணையிடம் மிக நெருங்கிய உறவையும் உருவாக்கல் இப்பருவத்தில் அவசியம் இல்லையேல் உறவு இல்லாத மோசமான நிலை ஏற்படும்.

கட்டம் VII

பிறப்பிக்கும் நிலை எதிர் தேக்க நிலை

குடும்பநிலையில் புதிய சந்ததியைத் தோற்றுவித்தல், அவர்களுக்கான சரியான வழிகாட்டல்களை, சேவைகளைச் செய்தல், பல்வேறு சேவைகளை அடுத்த சந்ததிக்குச் செய்யும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல், இல்லை எனில் ஒரு தேக்க நிலை ஏற்படும். இது மனச் சோர்வு, உளப்பாதிப்பு, மன அழுத்தம் என்பவை ஏற்பட ஏதுவாகும். வெறுப்புணர்வும் வாழ்வின் அர்த்தம் நிறைவேறாத இழப்புணர்வும் கிளர்ந்து எழும்.

கட்டம் VIII

முழுமை எதிர் சோர்வு

இது மனித வாழ்க்கையின் இறுதிக் கட்டமாகும். தனது வாழ்க்கைப் பருவத்தின் மீள் பார்வையாக இப்பருவம் அமைகின்றது. தனது பருவத்தில் செய்த சாதனைகள் வெற்றிகள் முழுமையான திருப்தியை வழங்கும். இல்லையெனில் சோர்வு நிலை ஏற்படும். முன்னைய பெரும்பாலான பருவங்களில் எதிர்மறை மனப்பாங்குடன் செயற்பட்ட நிலைகள் வேதனைகளையும் சோர்வுகளையும் வழங்குகின்றது.

எரிக்சனின் இக்கட்டங்கள் தொடர்பாகப் பல விமர்சனங்கள் உள்ள போதும் மனித வாழ்க்கைக் கால அபிவிருத்திக் கொள்ளை நோக்கில் பல பாடப் பதிவுகளை இக்கொள்கை இயம்பிக்கின்றது.

வகுப்பறை முகாமைத்துவமும் உளவியலும்

ஒருநாட்டின் எதிர்கால அபிவிருத்தியை அந்நாட்டின் நிகழ்காலப் பாடசாலை வகுப்பறைகளே தீர்மானிக்கின்றன. வகுப்பறையானது நித்தம் பல்வேறு மாணவர்நடத்தைகள் நிறைந்து காணப்படும். ஓர் இடமாகும். இவற்றில் உளவியல் சார்ந்த காரணிகள் முக்கியம் பெறுகின்றன. ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் உயிரோட்டமாகப் பங்கேற்கும் மாணவர்களும் உளர். சிலர் அத்தருணத்தில் பொருத்தமற்ற ஒலிகளை எழுப்பி சண்டையிட்டு, கற்றல் செயன்முறைகளுக்குத் தடைகளை ஏற்படுத்துவர்.

இத்தடைகளுக்குப் பின்னணி உளவியற் காரணிகள் பல காணப்படலாம். பதட்டம் அசாதாரண காரணமாக வெளிப்படும் வன்முறைகள், கட்புல செவிப்புல இழப்புக்கள், உடல்உள குறைபாடுகள் விசேட தேவையுடைய நிலைகள் வறுமை, ஆசிரியர் தொடர்பான காரணிகளும் வகுப்பறை முகாமைத்துவத்தில் வினைத்திறன்களைக் குறைக்கின்றன. வகுப்பறை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைவதே வகுப்பறை முகாமைத்துவமாகும். இது பாட ஏற்பாடுகளைத் திட்டமிடல் நடை முறைகளையும் வளங்களையும் ஒழுங்கு செய்தல். மாணவர் தனியார் வேறுபாடுகளுக்கேற்ப வழிகாட்டுதல், ஏற்படும் பிரச்சினைகளை எதிர்பார்த்து தயாராக இருத்தல் என்பவை வகுப்பறை முகாமைத்துவத்தின் முக்கிய அம்சங்களாக உள்ளதாக கல்வி உளவியலறிஞர் லெம்லேட் (1988) தெரிவிக்கின்றார்.

வகுப்பறை முகாமைத்துவ அம்சங்கள்

1. நேரம் தவறாமை – இது பல கல்விப் பிரச்சினைகளை அகற்றும்.
2. நன்கு திட்டமிடப்பட்ட ஆயத்த நிலை (பாடக்குறிப்பு, தர உள்ளீடுகள், உபகரப்பிரயோகங்கள்)
3. மாணவர்களை விரைவாக கற்றல் வேலைகளில் ஈடுபடுதல், பொருத்தமான கற்பித்தல் – கற்றல் முறையியல், உடனடியாக மாணவர் கவனத்தை ஈர்த்தல்.

4. குரலைச்சிறப்பாகப் பயன்படுத்துதல், வகுப்பறைச் செயற்பாடுகளில் உன்னிப்பாக கவனம், விடயங்களைச் சரியாகப்பகுத்தாராய்தல்.
5. நெருக்கடி நிலைகள் பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது தெளிவாக, உண்மையாக, யதார்த்தமாகச் செயற்படல்.
6. மாணவர்களை ஒப்பீடு செய்தலைத் தவிர்த்தல், வகுப்பறைக் கவின்நிலையை கவர்ச்சிகரமாக வைத்திருத்தல்,
7. ஆசிரியர் மாணவர் உறவை உயிர்ப்பாக வைத்திருத்தல்.

வகுப்பறைக்குப் பொருந்தாத நடத்தைகளை இயன்ற அளவு குறைப்பதற்கு மானுட உளவியல் வழிகாட்டல் முறைமைகளைப் பெருமளவு கையாள்வதுடன், சில வகையான தண்டனைகளாலும் பொருத்தமற்ற நடத்தைகளை நீக்கலாம். மேலும் தண்டனைகள் வழங்கும் போது ஆசிரியர் மிகமிக அவதானமாகச் செயற்படவேண்டும். தண்டனையால் மாணவர் களின் எதிர்கால ஆளுமை பாதிக்காத வகையில் ஆவன செய்ய வேண்டும்.

மாணவர்களது நடத்தைகளுடன் கருமமாற்றம்

இன்றைய பாடசாலை வகுப்பறைகள் மிகப்பல பிரச்சினைகளையும் சிக்கல்களையும் கொண்டதாகவுள்ளது. ஆசிரியர்கள் மிகப் பல சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். அதுவும் இடைநிலை வகுப்புக் கட்டிளமைப்பருவ மாணவர்கள் பல தாக்கங்களை விளைவிக்கின்றனர். இவர்களை இவர்கள் வழியில் சென்று மிக நுட்பமாக ஆசிரியர்கள் தமது நடத்தைகளை ஒழுங்கமைக்க வேண்டியுள்ளது. அத்துடன் பற்றுணர்வு, விசுவாசம், விழுமியம், நன்மனப்பாங்கு, கல்வியில் நாட்டம் போன்றவற்றை சாதகமாக்கி வகுப்பறைக்கவின் நிலையை கற்றலுக்கு, சாதகமாக்கலாம். காற்றோட்ட மான வகுப்பறை, இடவசதி, தளபாடங்கள் என்பவற்றுடன் மானிடக்கவி நிலை, கல்விசார் கவின்நிலை, சக பாடிகள் கவின் நிலை முகாமைத்துவக் கவின் நிலை என்பவற்றிலும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். இன்று உலகளாவிய ரீதியில் மானுடக்கவின் நிலையே வகுப்பறை முகாமைத்து வத்தின் முக்கியம் பெறுகின்றது.

மாணுடக்கவின் நிலையானது, மனிதத் தொடர்புகளை வகுப்பறை அங்கத்தவர்களுக்கிடையில் முன்னேற்றவும் அவர்களுடைய மனப் பாங்குகள் பாடசாலை சமூகத்தை நோக்கி வளர்க்கவும் உதவும். இதற்குப் பொருத்தமான நவீன கற்றல் தொழிநுட்பச் சாதனைகளும் உதவுகின்றன. மாணவரிடையே கற்றல் இடமாற்றம் அல்லது பயிற்சி இடமாற்றம் (Transfer of Training of Learning) ஏற்படவும் இது வழிகாட்டுகிறது.

கற்றல் இடமாற்றம்

மாணவன் ஒருவன் வகுப்பறைக் கற்றல் சந்தர்ப்பம் ஒன்றில் பெற்றுக் கொண்ட அறிவை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதே கற்றல் இடமாற்றமாகும். ஏவிஸ் என்ற உளவியலாளர் கற்றல் இடமாற்றம் என்பது ஏதாவது ஒரு செயலைச் செய்வதற்குப் பெறும் பயிற்சி அல்லது பெறும் அனுபவம், அதன் பின் எதிர்ப்படும் ஒரு செயலில் செலுத்தும் செல்வாக்கு எனக் குறிப்பிடுகின்றார்.

இது ஒரு செயலின்மூலம் பெற்ற அனுபவம் அல்லது பயிற்சி மற்றொரு செயலை இலகுவாக்குகின்றது. இதனை நேர் கற்றல் இடமாற்றம் என்பர். ஒரு செயலின்மூலம் பெற்ற அனுபவம் மற்றச் செயலைக் கடினமாக்கினால் அது எதிர்கற்றல் இடமாற்றம் எனப்படும். எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படாதவிடத்து சூனிய கற்றல் இடமாற்றம் எனப்படுகின்றது. இக்கற்றல் இடமாற்றம் பற்றிய கொள்கைகள் பின்வருமாறு:

1. உளப்பயிற்சிக் கட்டுப்பாட்டுக் கொள்கை (Theory of Mentaldiscipling)

இக்கொள்கை இரு அணுகு முறைகளைக்கொண்டது. ஒன்று பிளேட்டோ வினுடைய மற்றையது மண்டல அறிவுக் கொள்கை, பிளேட்டோ உயர் செம்மொழிகளையும் படங்களையும் கற்பதன்மூலம் கற்றல் இடமாற்றம் உள்ளதையும், ஒழுக்க விழுமியங்களையும் பெறமுடியும் என்கின்றார். இக் கருத்தியலின் விருத்தியாக மண்டல அறிவுக் கொள்கையினர் மூளை பல்வேறு கூறுகளை உடையது. பல்வேறு பாடங்களைக் கற்பதன்மூலம்

அப்பாடங்களுடன் தொடர்புடைய உளக் கூறுகள் விருத்தியடைந்து கற்றல் இடமாற்றம் நடைபெறும் எனத் தெரிவிக்கின்றனர். மனனம் செய்தல், விஞ்ஞான பாடத்துறைகளில் கூர்ந்து அவதானித்தல் என்பவை மூலம் இது வலியுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இக்கொள்கையை எதிர்த்து மூளையைப் பல கூறுகளாகப் பிரிக்க முடியாது என தொடுகைக் கொள்கையினர் எடுத்துக்கூறி; இது நரம்புத் தொகுதியின் கூட்டாகவே தொழிற்படுகிறது எனவும் தமது வாதத்தை முன்வைத்தனர். தூண்டல் – துலங்கல் தொடர்புறுத்தல் மூலமே கற்றல் இடமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இவர்கள் வலியுறுத்தினர்.

2. ஒத்த மூலக் கொள்கை (Theory of Identical elements)

தோண்டெக் பல்வேறு பரிசோதனைகள் அடிப்படையில் இக்கொள் கையை வெளியிட்டார். ஏதேனும் செயல்மூலம் பெற்ற அனுபவம் or பயிற்சி மற்றொரு செயலுக்கு உதவியாக இருப்பதும், செயல்களின் விடயப்பரப்பு, அமைப்பு முறைகளின் மூலகங்கள் கற்கும் சூழலுடன் இடமாற்றம் பெறுகின்றமையை இக்கொள்கை எடுத்தியம்புகிறது. உதாரணமாகக் கூட்டல் திறனுடைய ஒருவருக்கு பெருக்கலில் திறன் விருத்தியாகும். பியானோ வாசித்தல், தட்டச்சு, கணினி உபயோகத் திறன் விருத்தியாகும்.

3. பொதுமையாக்கல் கொள்கை (Theory of Generalisation)

ஒருவருடைய கற்றல் அனுபவம் பொதுமையாக்கப்படுவதால் கற்றல் இடமாற்றம் நடைபெறுவதை இக்கொள்கை எடுத்தியம்புகின்றது. பொதுமை யாக்கலை மேற்கொள்ள தொடர்புகளை வலுவுடையதாக்க வேண்டும். உதாரணமாக நீருக்குள் குறிப்பிட்ட இலக்கு நோக்கி ஈட்டி எறிய; ஒரு குழுவுக்கு ஒளி முறிவு கற்பித்த விட்டும் மறுகுழுவை கற்பிக்காமலும் செயற்படுத்தலில் ஈடுபட்டால் ஒளி முறிவு கற்பித்த குழு வெற்றியடைந்ததை உளவியல் ஆய்வுகள் இயம்புகின்றன.

4. கற்பதற்குக் கற்றல் பற்றிய கொள்கைப்பிரயோகம் (Leaning to Learn)

ஹாலோ (Halo) என்ற உளவியலறிஞர் இக்கொள்கையை முன் வைத்தார். பல்வேறு கற்றல் நிலைமைகளுக்கும், கற்றல் இடமாற்றங் களுக்கும் இக்கொள்கை பொருந்துகின்றது. ஒரு பிரச்சினையைத் தீர்க்க எவ்வாறு கற்க வேண்டும் என்பதைக் கற்று அதன் மூலம் பிரச்சினை தீர்த்தலை இக் கொள்கை இயம்பி நிற்கின்றது. மேலும் குறிப்பிட்ட சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கற்றுக்கொண்ட ஒருவன் அதனுடன் தொடர்புடைய வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அத்தோடு பிரச்சினைகளை கற்பதற்குக் கற்றல் ஒரு முக்கியமான தேர்ச்சியாகக் கொள்ளப்படுகின்றது. மாணவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் எதிர் கொள்ளும் சவால்களுக்கு உறுதுணையாகக் கொள்ளக் கூடிய தேர்ச்சி களை இது வழங்குகின்றது. இவ் அடிப்படையில் கற்பதற்குக் கற்பதற்கான தேர்ச்சிகளைப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களுக்கு வழங்குதல் தொடர்பான உளவியல் ஆற்றல்களைப்பெற வேண்டும். இதற்கு ஆசிரியர்களும் தொடர்ந்து கற்றுக்கொண்டிருப்பதுடன், எவ்வாறு கற்க வேண்டும் என்ற வினாவுக்கு சரியான வழிகளைக் காட்ட வேண்டும். விரைவாகத் தீர்க்கக் கூடிய திறனையும் அவன் பெறுவான். இது கற்றல் இடமாற்றமாகப் பரிணமிக்கின்றது.

நவீன உளவியலாளர் கருத்தின்படி கற்கும்போது உள்ளம் எவ்வாறு தொழிற்படுகின்றது. என்பதை அறிவதிலேயே கற்பதற்குக் கற்றல் தங்கியுள்ளது. என்று அது ஏழாவது அறிவு அல்லது புலன் என்றும் கூறுகின்றனர். கற்பதற்குக் கற்றலை ஒரு தேர்ச்சியாக யுனெஸ்கோ நிறுவனம் உலகம் முழுவதும் பரப்பி வருகின்றது. புதிய நூற்றாண்டுக்கான கற்றல் என்ற அறிக்கையில் கற்றலின் நான்கு தூண்களுக்குமான அடிப்படைகளைக் கற்பதற்குக் கற்றல்மூலமே யுனெஸ்கே எடுத்தியம்பு கின்றது. அதன் எண்ணக்கருப் படம் பின்வருமாறு.

கற்பதற்குக் கற்றலுக்கான பிரவேசம்



மனித வாழ்க்கை முழுவதும் கற்பதற்குக் கற்றுக்கொள்ளல் செயன்முறை வழிகாட்டி நிற்கின்றது ஆனாலும் எமது நாடுகளில் பலருடைய கல்வி இடை நடுவில் நின்றுவிடுகின்றது. இது "எவ்வாறு கற்க வேண்டும்" என்பதைக் கற்பிக்காது விட்டமையின் விளைவே ஆகும். இதில் கற்பவர்கள் சுய ஆசிரியர்களாக (Self Teachers) நிலைமாற்றம் பெறல் இத் தேர்ச்சியின் மையமாகும். இதனூடாக பின்வரும் விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

1. வாழ வேண்டுமானால் கற்க வேண்டும். வாழ்நாள் முழுவதற்குமான செயலாகக் கற்றல் விளங்க வேண்டும்.
2. கற்றுக் கொண்ட விடயங்கள் கற்றல் இடமாற்றத்திற்கு வழிசெய்ய, செயன்முறை ரீதியான, சமூக ரீதியான கல்வி அவசியமாகின்றது.
3. மனித விருத்தியுடனும் மேம்பாடுகளுடன் ஒன்றிணைந்தாகக் கற்றல் இருப்பதுடன், அனுபவமும் அனுபவித்தலாகவும் இருக்க வேண்டும்.
4. வாழ்க்கைச் செயற்பாடுகளுடன் கற்றலை ஒருங்கிணைத்தல் கற்றலை இணைத்தல், இத் தொகுப்பு உடன் துலங்கல் (Impassivity) உள்வாங்கித் தெரித்தல் Reflectivity என்ற கற்றலின் வெளியீடு களுக்குக் காரணமாகும்.

மாணவர்கள் எதனைக் கற்கின்றார்கள் என்பது மட்டுள்ள அவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள் என்பதிலும் கற்பதற்குக் கற்றல் தேர்ச்சி செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் இது தகவல்களைக் கண்டறியும் திறனாகவும், குறித்த விடயம் பற்றிய தகவல்களை எங்கு எவ்வாறு பெறலாம். என்பதையும், ஆய்வு முடிவுகள் உருவாவதற்கு உதவிய வழிமுறைகளையும், ஒருவன் தனது கற்றல் செயற்பாடுகளைச் சுயமாகத்தானே நிருவகித்துக் கொள்ளவும் கற்பதற்குக் கற்கும் வழிமுறை உதவி நிற்கின்றது.

SCHOOL

"S" in For Sincerity,
"C" is For Capacity,
"H" " " Honesty,
"O" " " obedience, the next
"O" " " orderliness And
"L" " " Learning.

So the School is for
Sincerity, Capacity,
honesty, obedience,
orderliness and learning

For these things
I came to school
and with these things
I will leave the school

நூலாசிரியரைப் பற்றி...

திரு.பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்கள் மிக நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு உளவியலைக் கற்பித்து வருகின்றார். உளவியற்றுறை ஆற்றலும், உளவியலைப் பயிற்றுவிக்கும் அனுபவமும், பிரயோக நிலையில் மாணவர்களின் இடைவினைகளினூடு சங்கமமாகும் தேர்ச்சியும், ஆளுமையும்மிக்க நூலாசிரியரின் சிறந்த படைப்பாக இந்நூல் மிளிர்கின்றது. ஆசிரியவாண்மை விருத்தியில் ஈடுபட்டிருக்கும் இவரின் நூலாக்கங்களையும், நூல் வெளியீடுகளையும், நூற்பண்பாட்டையும் ஒன்றிணைக்கும் செயலாற்றுகைகள் கல்விப் புலமை நிலையிற் பாராட்டுதல்களுக்கு உரியதாகும்.

பேராசிரியர் சபா.ஜெயராசா
கல்வி உளவியற் பேராசிரியர்

இந்நூலாசிரியர் உளவியற் கல்விசார்ந்த கற்பித்தலையும், ஆய்வுகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். இவை கல்வி உலகில் வரவேற்பைப் பெற்றதுடன், பல சீர்திருத்தங்களுக்கும் வழிகாட்டியுள்ளன. இத்தகைய பின்புலம் கொண்ட திரு.பா.தனபாலன், ஆசிரியர்களுக்கான உளவியல் என்ற இந்நூலை வெளியிடுகின்றமை இன்றைய ஆசிரியர்களின் முக்கிய தேவையைப் பூர்த்தி செய்வதாகவுள்ளது. கல்வியே அபிவிருத்தியின் இயந்திரமாகக் கருதப்படும் இன்றைய காலத்தில் முழு மூச்சாகக் கல்வியியற் துறையில் ஈடுபட்டு, கற்றல் - கற்பித்தற்றுறை சார் உயர் கல்வி ஆய்வு மாணவர்களுக்கு சிறப்பாக வழிகாட்டிவரும் இந்நூலாசிரியர் கல்வித் துறையில் மேலும் மிளிர வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.